255
79

நாலடியார் நயவுரை

சுந்தர சண்முகனர்

255

நாலடியார் நயவுரை

வெளியிடுபவர்:

சிங்கார-குமரேசனுர்

புதுச்சேரி

உரையாசிரியர்:

புலவர் சுந்தர சண்முகனுர்

நாலடியார் நயவுரை

உரையாசிரியரின்
நாற்பத் தொன்பதாவது வெளியீடு
1970

வெளியீடு:
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
61-C, வைசியர் தெரு,
புதுச்சேரி-1. (தென்னிந்தியா)

விலை ரூ. 10.00

பிரபாத் பிரஸ், கடலூர்-2. போன்: 461

பைந்தமிழ்ப் பதிப்பகப் புரவலர்:



சிங்கார-குமரேசனூர்

திருமணச் செல்வர்கள்:



கு. சிங்காரவேலு, B. Com., (A.C.A.)

சந்தான லட்சுமி

திருமண அன்பளிப்பு

'நாலடியார் நயவுரை' என்னும் இந்த அரிய
நல்லறம் உரைக்கும் நூலினை,

எங்கள் இரண்டாவது மகன்
திருநிறை செல்வன்
கு. சிங்காரவேலு, B. Com., (A. C. A.)

சென்னை-சைதை-காரணீசுவரன்பேட்டை
உயர்திரு. மா. து. குப்புசாமி முதலியார் முதல் மகள்
திருநிறை செல்வி
ச ந் தா ன ல ட் சு மி

ஆகியோர்க்கு,
சாதாரண–ஆனி-26ஆம்நாள் (10—7—1970)
புதுச்சேரியில் நடைபெற்ற திருமணத்தில்,
திருமணமக்களை வாழ்த்தி வாழும் முறைஅறிவுறுத்தும்
முறையிலும், திருமணத்திற்கு வருகைதந்து
சிறப்பித்து மணமக்களை வாழ்த்தியருளிய
பெருமக்கட்கு நன்றிசெலுத்தும் முறையிலும்
அன்பளிப்பாக வழங்குகிறோம். வாழ்க !

'திருவகம்'
43, காளத்தீசுவரன்
கோயில் தெரு,
புதுச்சேரி-1
10—7—1970

இங்ஙனம்,

சிங்கார-குமரேசன்
செயலட்சுமி குமரேசன்

பொருள் அடக்கம்

உரையாசிரியர் உரை

1. அறத்துப்பால் — பக்கம்

1.	**இல்லற இயல்**	**(10—33)**
1	பொறை யுடைமை	10
2.	பிறர்மனை நயவாமை	14
3.	ஈகை	18
4.	பழவினை	22
5.	மெய்ம்மை	26
6.	தீவினை யச்சம்	30
2.	**துறவற இயல்**	**(34—61)**
7.	செல்வம் நிலையாமை	34
8.	இளமை நிலையாமை	38
9.	யாக்கை நிலையாமை	42
10.	அறன் வலியுறுத்தல்	46
11.	தூய தன்மை	50
12.	துறவு	54
13.	சினம் இன்மை	58

2. பொருட்பால்

1.	**அரசியல்**	**(62—89)**
14.	கல்வி	62
15.	குடிப் பிறப்பு	66
16.	மேன் மக்கள்	70
17.	பெரியாரைப் பிழையாமை	74
18.	நல்லினம் சேர்தல்	78
19.	பெருமை	82
20.	தாளாண்மை	86

2. நட்பியல் (90 | 105)
21. சுற்றம் தழால் 90
22. நட்பாராய்தல் 94
23. நட்பில் பிழை பொறுத்தல் 98
24. கூடா நட்பு 102
3. இன்ப இயல் (106—117)
25. அறிவுடைமை 106
26. அறிவின்மை 110
27. நன்றியில் செல்வம் 114
4. துன்ப இயல் (118—133)
28. ஈயாமை 118
29. இன்மை 122
30. மானம் 126
31. இரவச்சம் 130
5. பொது இயல் (134—137)
32. அவை யறிதல் 134
6. பகை இயல் (138—153)
33. புல்லறிவாண்மை 138
34. பேதைமை 142
35. கீழ்மை 146
36. கயமை 150
7. பன்னெறி இயல் (154—157)
37. பன்னெறி 154

3. காமத்துப் பால்

1. இன்ப துன்ப இயல் (158—161)
38. பொது மகளிர் 158
2. இன்ப இயல் (162—170)
39. கற்புடை மகளிர் 162
40. காம நுதலியல் 166
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை 171

உரையாசிரியர் உரை

— சுந்தர சண்முகன் —

பெயர்க் காரணம்:

சங்க இலக்கியங்கள் எனப்படும் பதினெண் (18) கீழ்க்கணக்கு நூற்களுள் திருக்குறளுக்கு அடுத்த பெருமையுடையது நாலடியார்தான்! திருக்குறள் இரண்டு அடிகளால் ஆன குறுகிய (குறள்) பாக்களை உடையதாதலின் 'திருக்குறள்' எனப் பெயர் வழங்கப் பெறுகிறது. அங்ஙனமே, நான்கு அடிப் பாடல்களையுடைய நூல் 'நாலடி' எனப்பட்டு, பின்னர் 'ஆர்' என்னும் சிறப்பு விகுதி சேர 'நாலடியார்' என வழங்கப்பெறுகிறது. இந்நூல் நானூறு பாடல்களை உடையதாதலின், இதனை 'நாலடி நானூறு' எனவும் வழங்குவர். அறம் உரைக்கும் தமிழர் மறைநூல் ஆதலின், இதனை 'வேளாண் வேதம்' (வேளாளர் = தமிழர்) எனவும் அழைப்பர்.

நூல் வரலாறு:

எண்ணாயிரம் சமண முனிவர்கள் ஆளுக்கு ஒரு பாடலாக எழுதிவைத்துவிட்டுப் போன எண்ணாயிரம் பனையோலைச் சுவடிகளை, என்னவோ குப்பை என எண்ணிப் பாண்டியமன்னன் வைகை யாற்றில் எறியச்செய்ய, அவற்றுள் நானூறு பாடல்கள் மட்டும் எதிர்த்து நீந்திக் கரையேறி வந்ததாகவும், அவற்றின் அருமை யுணர்ந்து அவற்றைத் தொகுத்து 'நாலடியார்' என்னும் பெயருடைய நூலாக்கியதாகவும் கதை கூறப்படுகிறது. ஆமாம்-கதையேதான் இது!

தேனீக்கள் மலரிலிருந்து உறிஞ்சித் தேன் எடுப்பதுபோல, இந்தக் கதையிலிருந்து நாம் உறிஞ்சி எடுத்துக்கொள்ளக்கூடிய உண்மைக்கருத்தாவது: "திருக்குறள் திருவள்ளுவர் என்னும் ஒருவராலேயே அருளப்பட்டதுபோல, நாலடியார் ஒருவராலேயே இயற்றப்படவில்லை; பலர் இயற்றிய பாடல்களின் தொகுப்பே நாலடியார்"-என்பதாகும். சங்க இலக்கியங்கள் பல, இவ்வாறு பலரால் இயற்றப் பெற்ற பாடல்களின் தொகுப்பே என்னும் உண்மை ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. நாலடியார், பதுமனார் என்னும் புலவரால் தொகுக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

நூல் அமைப்பு:

நாலடியாரின் நானூறு பாடல்களும், திருக்குறளைப் பார்த்து அதே மாதிரியில் 'வகை தொகை' செய்யப் பெற்றுள்ளன. அதாவது, அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என மூன்று பால்களும், ஒவ்வொரு பாலிலும் பல இயல்களும், ஒவ்வோர் இயலிலும் பல தலைப்புக்களும் (அதிகாரங்களும்), ஒவ்வொரு தலைப்பிலும் பத்துப் பத்துப் பாடல்களுமாக நாலடியார் உருவமைக்கப் பெற்றுள்ளது.

நாலும் இரண்டும்:

திறக்குறளைப் போலவே வடிவமைக்கப் பெற்றுள்ள நாலடியார், திறக்குறளுக்கு அடுத்தபடியாக அன்றுதொட்டு இன்றுவரை பலராலும் பரவலாகப் போற்றப்பெற்று வருகிறது. டாக்டர் ஜி. யு. போப் (G. U. Pope) என்னும் ஆங்கிலேயரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு உலக அரங்கிலும் பரவியுள்ளது இந்நூல். இரண்டடிப்

பாக்களையுடைய திருக்குறளுடன், நாலடிப் பாடல்களையுடைய நாலடியார் இணைத்தே அறிஞர் பலராலும் பாராட்டப் பெற்றுள்ளது. சில பாராட்டுக்கள் வருமாறு:-

**"பாலும் நெய்யும் உடலுக்கு உறுதி
வேலும் வாளும் அடலுக்கு உறுதி
ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி".**

"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்."

**"நாலடி 'இரண்டடி கற்றவ னிடத்து
வாயடி கையடி அடிக்காதே".**

'நால்' எனப்படுவது நாலடியார். 'இரண்டு' எனப்படுவது திருக்குறள். மேலே காட்டப்பட்டுள்ள பகுதிகளில், திருக்குறளுக்கும் முதலிடத்தை நாலடியார் பிடித்துக் கொண்டுள்ளதே-அம்மாடி!

உரைகள்:

திருக்குறளுக்குப் பழைய உரைகள் பலவும் புதிய உரைகள் பலவும் உள்ளவாறே நாலடியார்க்கும் உள்ளன. நாலடியார்க்கு, தருமர், பதுமனார் ஆகிய பழம்பெரும் புலவர்களின் உரைகளுடன், பெயர் தெரியாத புலவர் ஒருவரின் பழைய உரையும் கிடைத்துள்ளது. இக்காலத்திலும் புலவர் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றின் வரிசையில் அடியேனது உரையும் இப்போது இடம் பெறுகிறது. சில இடங்களில், பிறர் உரைகளினும் எனது உரையில் மாறுதல் இருக்கும்.

ஒரு புரட்சி:

திருக்குறள் அறத்துப்பாலில் முதலில் இல்லறவியலும் அடுத்துத் துறவறவியலும் அமைந்துள்ளன. ஆனால், பிறர் அனைவரும் வெளியிட்டுள்ள நாலடியார் பதிப்புக்களிலோ, முதலில் துறவறவியலும் அடுத்தே இல்லற வியலும் காணப்படுகின்றன. அடியேன் இந்த அமைப்பினை மாற்றி, திருக்குறளைப் போலவே நாலடியாரிலும் முதலாவதாக இல்லறவியலையும் இரண்டாவதாகத் துறவற வியலையும் அமைத்துள்ளேன். இல்லறத்திற்குப் பின்னே துறவறம் கொள்வதே தமிழரின் தனிமுறை யன்றோ? இருப்பினும், இதனைச் சிலர்-இல்லை, பலர் ஏற்கார். அவர்கட்கு இதோ பதில்:

நாலடியார் நூற்பாடல்களை ஒருவர் எழுதவில்லை; பலர் எழுதினர். பதுமனார் அவற்றை வகைப்படுத்தித் தொகுத்ததாகச் சொல்லப்படுகிறார். எனவே, துறவற வியலை முதலில் அமைத்தது பதுமனாரின் கைவரிசையே! அங்ஙனமெனில், இல்லறவியலை நாம் ஏன் முதலில் அமைத்துக் கொள்ளக்கூடாது? மற்றும், ஒவ்வொரு தலைப்பிலும் உள்ள பத்துப் பத்துப் பாடல்களும், இந்த (எனது) பதிப்பில் உள்ள வரிசைப்படியே எல்லாராலும் அமைக்கப் படவில்லை; சிலரால் சில பாடல்கள் வரிசைமாற்றி எண் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், நாலடியாரில் பலரும் தம் கைவண்ணம் காட்டியுள்ளனர் என்னும் இமாலயப் பேருண்மை புலனாகிறது. எனவே, இந்தப் பதிப்பில் இல்லறவியலை முதலில் அமைத்தது பொருத்தமே என்று தெளியலாம்.

நாலடியார்

கடவுள் வாழ்த்து

வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்
கானிலம் தோயாக் கடவுளை — யாம்நிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் உள்ளத்து
முன்னி யவைமுடிக என்று.

(உரை) வானத்தில் தோன்றி மறையும் இந்திர வில்லைப் போல, எதிரே திடீரென வர இருப்பதைப் பற்றி அறிய முடியாத உண்மைக் காரணத்தால், ' எமது உள்ளத்தில் எண்ணிய நல்லெண்ணங்கள் நிறைவேறுக' என்று வேண்டி, கால் (பாதம்) தரையில் படியாத தெய்வத்தை, நம் தலைகள் தரையில் படியும்படி நாம் கீழே விழுந்து வணங்கி இடைவிடாது (தியானிப்போமாக) நினைவு செய்வோமாக !

(குறிப்பு : நாலடியாரின் பல பதிப்புக்களின் முகப்பிலும் இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல் காணப்படுகிறது. இது, நானூறு பாடல் களுக்கும் அப்பாற்பட்டது. இதனைப் பின் வந்தவர் எவரேனும் இயற்றியிருக்கவேண்டும்.)

நாலடியார் நயவுரை

1. அறத்துப் பால்

இல்லற வியல்

1. பொறையுடைமை

கோதை அருவிக் குளிர்வரை நல்நாட!
பேதையோ டியாதும் உரையற்க;-பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும்;ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று. 1

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதி;மற்(று)—ஓரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும். 2

காதலார் சொல்லும் கடும்சொல் உவந்துரைக்கும்
ஏதிலார் இன்சொலின் தீதாமோ—போதெலாம்
மாதர்வண் டார்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப!
ஆவ தறிவார்ப் பெறின். 3

அறிவ தறிந்தடங்கி, அஞ்சுவ தஞ்சி,
உறுவ துலகுவப்பச் செய்து,—பெறுவதனல்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. 4

வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்ற ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றும் துணையும் பொறுக்க; பொருஅயின்
தூற்றதே தூர விடல். 5

இல்லற வியல்

1. பொறுமை உடைமை

. மாலைபோன்று அருவி ஓடும் குளிர்ந்த நல்ல மலை நாடனே ! அறிவில்லா மூடனுடன் ஒன்றும் பேசாதே; பேசினால், அந்த அறிவிலி மனம் சிதையப் பேசுவான். ஆதலின், நழுவி நீங்கி விடுதலே நல்லது. 1

நேர்மை யற்ற கீழோர் தன்மையற்ற சொற்களைச் சொன்னவிடத்து, அத்தவறைப் பொறுத்தலே தக்கது மற்றபடி பொருவிடின், பொங்கும் கடல்சூழ் உலகம் புகழாகக் கொள்ளாது; தாழ்வாகவே கருதிவிடும். 2

மலர்களிலெல்லாம் அழகிய வண்டுகள் ஒலிக்கின்ற வளம் மிக்க குளிர்ந்த கடல் நாடனே! நன்றுவதை அறியும் நல்லவரை நண்பராகப் பெறின், அந்த அன்புள்ள நண்பர் இடித்துரைக்கும் கடுஞ்சொல், சிரித்துப் பேசி நடிக்கும் பகைவரின் இன்சொல்லினும் தீய தாகுமோ? 3

அறியவேண்டியதை அறிந்து, அடங்கி, அஞ்சுவதற்கு அஞ்சி, செய்யத்தக்க நன்மையை உலகம் மகிழச் செய்து, பெற்றதைக் கொண்டு மகிழ்ந்து வாழும் மாண்புடையவர் எப்போதும் துன்பமுற்று வாழ்வதில்லை. 4

மாறுபாடு இன்றி இணைந்து இருவர் நட்புகொண்டிருக்கும்போது, ஒருவனிடம் தெளியாத தீயொழுக்கம் காணப்படின், மற்றவன், பொறுக்கும்வரையும் பொறுப்பானாக; பொறுக்க முடியாமற்போனால், அவனைத் தூற்றாமல் தூர விலகிவிடுவானாக. 5

இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தான்நோவின் அல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல்; கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது. 6

பெரியார் பெருநட்புக் கோடல், தாம்செய்த
அரிய பொறுப்பஎன் றன்றோ—அரியரோ
ஒல்லென் அருவி உயர்வரை நல்நாட!
நல்லசெய் வார்க்குத் தமர். 7

வற்றிமற் றாற்றப் பசிப்பினும் பண்பிலார்க்(கு)
அற்றம் அறிய உரையற்க;—அற்றம்
மறைக்கும் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்கும் துணிவிலா தார். 8

இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—இன்பம்
ஒழியாமை கண்டாலும் ஓங்கருவி நாட!
பழியாகா வாறே தலை. 9

நாள்கெடினும் நக்கார்கே டெண்ணற்க; தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க;-வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல். 10

காட்டுவள நாடனே! நண்பர் துன்பம் செய்யினும், அஃது இன்பமே - போனுல் போகிறது என்று பொறுத்து, துன்பம் நேர்ந்ததற்குத் தன்னைத்தானே நொந்து கொள்ள வேண்டுமே தவிர, நெருங்கிப் பழகிய நண்பரைக் கைவிட லாகாது; பிரிதல் என்பது விலங்கிற்கும் இயலாதது. 6

'ஒல்' என அருவி ஒலித்தோடும் உயரிய நல்ல மலை நாடனே! பெரியோர்து உயர்நட்பைக்கொள்வது, தாம்செய்த தவறுகளைப் பொறுத்துக் கொள்வர் என்பதனு லன்றோ? அங்ஙனமெனில், தவறின்றி நல்லனவே செய்வார்க்குப் பெரியோர்கள் கிடைத்தற்கு அரிய ராவரோ? 7

வளமெல்லாம் வற்றி மேலும் மிகப் பசித்தாலும், பண் பற்ற அற்பரிடம் வறுமையை வெளிப்படையாகக் கூறற்க. பசியால் தமது உயிரைக் கைவிடும் துணிவு இல்லாதவர், தமது வறுமையை நீக்கும் துணையாளரிடமே தம் துன்பத் தைக் கூறுவது வழக்கம். 8

உயர்ந்த அருவிகள் ஓடும் நாடனே! ஓர் இன்பம் ஒழி யாது கிடைப்பினும், அது பழியின்றி யிருத்தலே சிறந்த தாம்; எனவே, ஒருபொருள் மிக்க இன்பம் அளிப்பினும், அங்கே இழிவு சிறிது தலைகாட்டினுலும், இன்பம் காரண மாக அதனை ஏற்றுக்கொள்ளலாகாது. 9

தான் கெட்டாலும் நல்லார் பிறர்க்குக் கேடு சூழற்க. பசியால் தன் உடம்பின் தசை சுருங்கினுலும் உண்ணத் தகாதவர் கையுணவை உண்ணற்க. வானம் கவிந்துமூடிய வையகம் முழுதும் கிடைப்பதானுலும், இடையிடையே பொய் கலந்த சொற்களைச் சொல்லற்க. 10

2. பிறர்மனை நயவாமை

அச்சம் பெரிதால்; அதற்கின்பம் சிற்றளவால்;
நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால்; நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன்தாரம்
நம்பற்க நாணுடை யார். 11

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா;—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்(று)
அச்சத்தோ டிந்நாற் பொருள். 12

புக்க விடத்தச்சம்; போதரும் போதச்சம்;
துய்க்கு மிடத்தச்சம்; தோன்றாமல் காப்பச்சம்;
எக்காலும் அச்சம் தருமால், எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல். 13

காணின் குடிப்பழியாம்; கையுறின் கால்குறையும்;
ஆணின்மை செய்யுங்கால் அச்சமாம்;—நீணிரயத்
துன்பம் பயக்குமால்; துச்சாரி! நீகண்ட
இன்பம் எனக்கெனைத்தால் கூறு. 14

செம்மையொன் றின்றிச் சிறியார் இனத்தராய்க்
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ—உம்மை
வலியால் பிறர்மனைமேல் சென்றாரே, இம்மை
அலியாகி ஆடியுண் பார். 15

2. பிறன் மனைவியை விரும்பாமை

பிறன் மனைவியை விரும்புவதால் அச்சம் மிகுதியாம்; அச்சத்தை நோக்க இன்பமோ சிறிய அளவேயாம். நித்தம் நினைத்துப் பார்க்கின், அரச ஒறுப்பு (தண்டனை) கிடைக்கலாம்; நரகத்திற்கு உரிய மிகுந்த தீவினையும் பெருகும்; எனவே, நாணம் உடையவர் பிறன் மனைவியை நம்பி விரும்பற்க. 11

பிறன் மனைவியை விரும்புபவரை அறம், புகழ், நட்பு, பெருமை ஆகிய நான்கும் அடையா; மாறுக. அவரை, பகை, பழி, பாவம், அச்சம் என்னும் நான்குமே வந்தடையும். 12

பிறன் மனையாள் இருக்குமிடம் புகும்போதும் அச்சம்; திரும்பும்போதும் அச்சம்; இன்பம் நுகரும்போதும் அச்சம்; வெளித்தெரியாமல் காப்பதிலும் அச்சம்; ஏன்-எப்போதுமே அச்சம் ஏற்படும்; எனவே, ஒருவன் அஞ்சாதவனுய்ப் பிறன் மனைவியிடம் செல்லுதல் ஏனோ? 13

பிறன்மனை புகுவதைப் பிறர் காணின் குடிக்குப் பழியாம்; அகப்பட்டுக்கொண்டாலோ கால் துண்டிக்கப்படும்; ஆண்மைக்கு ஏலாத தீப்புணர்ச்சி செய்யுங்கால் அச்சமாம்; நீண்ட நரகத் துன்பமும் கிடைக்கும்; எனவே, ஏ காமுகனே! நீ பெற்ற இன்பம் என்னதான் என்று எனக்குக் கூறு. 14

ஒழுங்கு ஒருசிறிதும் இன்றி, அற்பர் கூட்டத்தைச் சேர்ந்தவராகி, திரட்சியும் தேமலும் கொண்ட முலைகளையுடைய பிற பெண்ணின் தோளைத்தழுவி, முற்பிறப்பில் தமக்கிருந்த வலிமையால் பிறர் மனைவியிடம் சென்றவரே, இப்பிறப்பில் பேடிகளாகி ஆட்டம் ஆடி உண்டு கழிக்கிறார்கள். 15

பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்
கல்யாணம் செய்து கடிபுக்க—மெல்லியல்
காதல் மனையாளும் இல்லாளா என்னொருவன்
ஏதில் மனையாளை நோக்கு. 16

அம்பல் அயலெடுப்ப அஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பும்
நிலைமையில் நெஞ்சத்தான் துப்புரவு, பாம்பின்
தலைநக்கி அன்ன துடைத்து. 17

பரவா; வெளிப்படா; பல்லோர்கண் தங்கா
உரவோர்கண் காமநோய்; ஓஒ கொடிதே !
விரவாருள் நாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ஆறி விடும். 18

அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறம்சுடும்;—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினும் அஞ்சப் படும். 19

ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளித்தும் உயலாகும்;—நீருள்
குளிப்பினும் காமம் சுடுமே; குன் றேறி
ஒளிப்பினும் காமம் சுடும். 20

நல்ல நாள் கேட்டறிந்து பலரும் அறிய மணமுரசு கொட்டித் திருமணம் செய்துகொண்டு காவல்மனை புகுந்துள்ள மென்மைத் தன்மையுடைய அன்பு மனையாட்டி அகத்திருக்க, ஒருவன் அயலான் மனைவியை நோக்குவது ஏனோ? 16

அயலார் பழி தூற்ற, தம் உறவினர் நடுங்கி வருந்த, மாற்றான் மனைவியை மருவிப் புணர்ந்து மயக்குற்று அவளையே நம்பிக்கிடக்கும் நிலையற்ற நெஞ்சத்தானது காம நுகர்ச்சி, பாம்பின் தலையை நக்கிச் சுவைப்பதுபோன்ற தன்மையுடையது. 17

அறிவுடையவரிடம் தோன்றிய காமநோய், வெளிப்படாமலும் பரவாமலும் பலரிடமும் அறியப்படாமலும் வெளியானால் பகைவரிடம் நாணப்படுவதற்கு அஞ்சி ஒருவரிடமும் ஒருசிறிதும் உரைக்கப்படாமலும் உள்ளேயே தணிந்துவிடும். ஆ ஆ! அது மிகவும் கடுமையானது! 18

அம்பும் நெருப்பும் ஒளிவிடும் கதிர்களையுடைய செஞ்ஞாயிறும் வெம்மையாய்ச் சுட்டுத் தாக்கினும் வெளியுடம்பையே சுட்டு வருத்தும்; ஆனால் காமத்தீயோ, வெதும்பிக் கவலையுறச்செய்து உள்மனத்தையே சுட்டுத்தாக்குவதால், அம்மூன்றினும் அஞ்சப்படவேண்டியதாம். 19

ஊருக்குள் மூண்டெழுந்த அச்சம் மிக்க சிவந்த நெருப்புக்குத் தண்ணீருள் மூழ்கியும் தப்பித்துக்கொள்ளலாம்; ஆனால் காமத்தீயோ, நீருக்குள் மூழ்கினும் சுடுந்தான்; மலைமேலேறி மறைந்துகொள்ளினும் விடாது சுடும். 20

3. ஈகை

இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ள இடம்போல் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்(கு)
அடையாவாம் ஆண்டைக் கதவு. 21

முன்னரே சாம்நாள் முனிதக்க மூப்புள;
பின்னரும் பீடழிக்கும் நோயுள;—கொன்னே
பரவன்மின்; பற்றன்மின்; பாத்துண்மின்; யாதும்
கரவன்மின்; கைத்துண்டாம் போழ்து. 22

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்
கொடுத்துத்தாந் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்;
இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்;
விடுக்கும் வினையுலந்தக் கால். 23

இம்மி அரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்மின்;—உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்(து)
அடாஅ அடுப்பி னவர். 24

மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்(கு)
உறுமா றியைவ கொடுத்தல்; — வறுமையால்
ஈதல் இசையா தெனினும், இரவாமை
ஈதல் இரட்டி யுறும். 25

3. ஈதல்

வசதி இல்லாவிடத்தும், தம்மால் இயன்ற அளவு, வசதியுள்ள இடம்போல் மிகவும்மகிழ்ந்து அமைதியாய்க் கொடைபுரியும் பண்புள்ள மாந்தர்க்கு, அங்கே வீடுபேற்றுக்குதவுகள் அடைக்கப்படாவாம். 21

முடிவு நாளும், வெறுக்கத்தக்க முதுமையும் முதலிலேயே நிலையாயுள்ளன; மேலும், பெருமை கெடுக்கும் பிணிகளும் உள்ளன. எனவே, வீணே பொருள்தேடி அலையாதீர்கள்! இருக்கும் பொருளையும் இறுக்கிவிடாதீர்கள்! கையில் பொருள் இருக்கும்போதே பலர்க்கும் பகுத்தளித்து உண்ணுங்கள்! ஒன்றையும் ஒளிக்காதீர்கள்! 22

வறுமையால் நடுங்கித் தம்மை யடைந்த எளியோர்து துன்பத்தைப் போக்காத கருமிகள், அவர்க்கும் அளித்துத் தாமும் நுகரினும், செல்வம் சேருங்காலத்தில் சேர்ந்தே திரும்-குறையாது. நல்வினை யற்றபோதோ, இடுக்கி இறுகப் பற்றினும் செல்வம் நில்லாமல் விட்டு நீங்கும். 23

உம் இல்லம் வருவோர்க்கு நாடோறும் இம்மி அரிசி அளவாயினும் இயன்றது ஈந்து உண்ணுங்கள். இல்லையேல், ஆழ்ந்த கடல் சூழ்ந்த இவ்வுலகில், சமைக்காத அடுப்புடைய ஏழையர், கொடாத கருமிகள் என்று உம்மை இழித்து உரைப்பர். 24

மறுமைப் பயனையும் இம்மைப் பயனையும் ஆராய்ந்து இயன்றவற்றை ஈதலே, ஒருவருக்கு நன்மையுறும் வழியாகும். ஏழமையால் ஈதல் இயலாது போயினும், இன்னொருவரிடம் இரவாதிருத்தல் ஈதலினும் இருமடங்கு சிறந்தது. 25

நடுவூருள் வேதிகை சுற்றுக்கோள் புக்க
படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணு மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை. 26

பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யா விடினும்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப !
என்னை உலகுய்யும் ஆறு. 27

ஏற்றகை மாற்றுமை என்னுனும் தாம்வரையான்
ஆற்றுதார்க் கீவதாம் ஆண்கடன்; ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப ! மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து. 28

இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்றும்
அறப்பயன் யார்மாட்டும் செய்க;—முறைப்புதவின்
ஐயம் புகூஉம் தவசி கடிஞைபோல்
பைய நிறைத்து விடும். 29

கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்;
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்;
அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல். 30

பலரும் விரும்ப வாழும் நல்லோர், ஊர் நடுவே மேடையால் சூழப்பெற்றுள்ள குலைகாய்க்கும் பனைமரம் போன்றவராவர்; செல்வத்தால் குடும்பம் செழித்திருந்தபோதிலும் பிறர்க்குக் கொடுத்துண்ணாத மாக்கள் சுடுகாட்டிலுள்ள காய்க்காத ஆண் பனை போன்றவர்ஆவர். 26

மீனின் புலால் நாற்றத்தைப் புன்னைமலரின் நறுமணம் போக்குகின்ற அலைமோதுங் குளிர்ந்த கடற்கரை நாடனே! பெய்யவேண்டிய அளவு மழை பெய்யாதுபோயினும், உலக நன்மக்கள் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்யாதொழியினும், இவ்வுலகம் பிழைக்கும் வழி என்னவோ? 27

கலக்கும் ஆறுகளால் வளம் மலியும் குளிர்ந்த கடல் நாடனே ! இரந்து கேட்கும் கையை மறுக்காமல் யாதாயினும் தம் அளவுக்குத் தக இல்லாதார்க்கு ஈவதே ஆண்மையின் கடமை. பதிலுக்குத் தரக்கூடிய செல்வர்க்கு ஈதலோ, நல்ல கடன் என்னும் பெயரே பெறும். 28

தமது உடைமை மிகவும் சிறியது என்று கருதாமலும், இல்லையென்று கூறாமலும், எப்போதும் யார்க்கும் அறப் பயனைச் செய்துவருக. இதனால் வாயிற்படிதோறும் முறையாகப் பிச்சைக்குப் புகும் துறவியின் உண்கலம் நிறைவது போல, மெல்ல மெல்ல நல்வினை நிறைக்கப்படும். 29

குறுந்தடியால் கண்வாயில் அடிக்கப்படும் முரசொலியை ஒரு காதத்தில் உள்ளோர் கேட்பர்; இடியிடித்து முழங்குவதை ஒரு யோசனை தொலைவிலுள்ளோர் கேட்பர்; பெரியார் கொடுத்தார் எனப்படும் புகழ்ச் சொல்லையோ, அடுக்கிய மூவுலகிலும் உள்ளவர்களும் கேட்பரே ! 30

4. பழவினை

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்;—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. 31

உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்
ஒருவழி நில்லாமை கண்டும்—ஒருவழி
ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து. 32

வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை;
அளந்தன போகம் அவரவர் ஆற்றுன்;
விளங்காய் திரட்டினுர் இல்லைக்; களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல். 33

உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பா லனையவும் அன்னவாம் மாரி
வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல். 34

தினைத்துணையர் ஆகித்தம் தேசுள் அடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்;
நினைப்பக் கிடந்த தெவனுண்டாம் மேலை
வினைப்பயன் அல்லால் பிற. 35

4. பழைய ஊழ்வினை

ஓர் இளங்கன்றினைப் பல பசுக்களின் நடுவே செலுத்தி விட்டாலும், அது தன் தாய்ப் பசுவைத் தேடிக் கண்டு கொள்வதில் வல்லமையுடையதாம்; முற்பிறவியில் செய்த பழைய ஊழ்வினையும், தன்னைச் செய்த உரிமையாளனைத் தேடியடைவதில் அக்கன்று போன்றதேயாம். **31**

உருவழகும் இளமையும் நல்ல பொருளும் மிடுக்கும் ஒரு நிலையாய் நில்லாததை அறிந்தும், ஒரு வகையிலும் ஒரு நன்மையும் செய்யாதவனது வாழ்வு, உடம்பைப்பெற்று நின்றும் ஒரு பயனும் இன்றி வீணே வீழச்செய்த அளவினதேயாம். **32**

விளாம்பழத்தை உருண்டை யாக்கினவர் எவரும் இலர்; களாப் பழத்தைக் கறுப்பாக்கினவரும் எவரும் இலர்; அவை இயற்கையாய் அமைந்துள்ளன. உலகில் வளம்பெற விரும்பாதார் எவரும் இல்லையெனினும், அவரவர் ஆற்றிய வினைகட்கேற்ப இன்பங்களும் இயற்கையாய் அளவுபடுத்தப் பட்டுள்ளன. **33**

மழை வறண்டால் பெய்விப்பாரும் இல்லை. மழை மிகுந்தால் அதனைக் குறைப்பாரும் இல்லை. அவ்வாறே, ஊழ்வினையால் வரக்கூடியவற்றைத் தடுத்தல் எந்த வலி யார்க்கும் இயலாது; பெற விரும்புகிறவற்றைத் தாமாகப் பெறுவதென்பதும் அதுபோன்றே இயலாததாம். **34**

பனையளவு பெருமைக்குரிய சிலர், தினை அளவினராய்த் தம் ஒளி உள்ளடங்கி நாளும் பெருமை யிழந்து வாழ்கின்றனரே; நினைத்துப் பார்க்கின், அதற்குரிய காரணம், முன் செய்த வினைப்பயனே யல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? **35**

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதனம் என்னுமச் சேறகத் தின்மையால்
கோதென்று கொள்ளார்தாம் கூற்று. 36

இடும்பைகூர் நெஞ்சத்தார் எல்லாரும் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்—அடம்பம்பூ
அன்னம் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப!
முன்னை வினையாய் விடும். 37

அறியாரும் அல்லர்; அறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்தல் நறவுயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப!
செய்த வினையான் வரும். 38

ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் எத்துணையும்
வேண்டார்மன் தீய! விழைபயன் நல்லவை;
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது. 39

சிறுகா; பெருகா; முறைபிறழ்ந்து வாரா;
உறுகாலத் தூற்றுகா; ஆமிடத்தே ஆகும்
சிறுகாலைப் பட்ட பொறியும்; அதனால்
இறுகாலத் தென்னை பரிவு. 40

பல கற்று நிரம்பிய கேள்வியறிவின் பயனும் உணர்ந்த அறிஞர்கள் விரைவில் இறக்கவும், கல்லாத மூடர் நெடுங் காலம் வாழ்வதன் காரணம் அறிய விரும்புவீரேல், கல்லா தார் அறிவு என்னும் ஊட்டப்பொருளைத் தம்மிடம் பெற் றில்லாமையால், அவர்தமைச் 'சக்கை' என்று கருதி எமன் கொள்வதில்லை. 36

அடம்பம் பூவை அன்னம் கிழித்து விளையாடுகின்ற அலை வீசுங் குளிர்ந்த கடற்கரை நாடனே! சிலர் துன்பம் மிக்க நெஞ்சுடையவராய், பலரும் பார்க்கும்படி, பலருடைய நீண்ட கடைவாயிலில் நின்று இரந்து அலைவதெல்லாம், பழைய தீவினையின் பயனே யாகும். 37

காற்று வீசி நெய்தல் மலர் மணம் பரப்பும் நீண்ட குளிர்ந்த கடற்கரை நாடனே! ஒருசிலர், ஒன்றும் அறியாத வரும் அல்லராய், அறியவேண்டியதை அறிந்துங்கூட, பழிபட்ட தீச்செயல் புரிவது, முன்செய்த தீவினையால் நிகழ் வதே யாகும். 38

கடல் சூழ் உலகில் யாவரும் ஒரு சிறிதும் தீமையை விரும்பார்; எவரும் விரும்பும் பயன்கள் நற்பயன்களே! ஆனால், ஒருவர் விரும்பினும் விரும்பாவிடினும், வரக்கூடிய நன்மை தீமைகள் வராமல் விடுதல் இல்லை. 39

சிறிய கருவிலேயே அமைந்துவிட்ட பழவினைகள் குறை வதில்லை; மிகுவதில்லை; முறைமாறி நடப்பதுமில்லை; துன் பக்காலத்தில் ஊன்றுகோல்போல் துணையாவதுமில்லை; ஆகவேண்டிய நன்னாள் வரும்போதே எல்லாம் ஆகும்; எனவே, அழிவு வரும்போது வருந்துவது ஏனோ? 40

5. மெய்ம்மை

இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று; வையத் தியற்கை;—நசையழுங்க
நின்ருேடிப் பொய்த்தல் நிரைதொடீஇ!
செய்ந்நன்றி
கொன்ருரின் குற்றம் உடைத்து. 41

தக்காரும் தக்கவர் அல்லாரும் தம்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர்;—அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம்; கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு. 42

காலாடு போழ்தில் கழிகிளேஞர் வானத்து
மேலாடும் மீனின் பலராவர்;— ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட !
தொடர்புடையேம் என்பார் சிலர். 43

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலேயும் எய்தும்;
நடுவண தெய்தாதான் எய்தும் உலேப்பெய்(து)
அடுவது போலும் துயர். 44

நல்லாவின் கன்ருயின் நாகும் விலேபெறூஉம்
கல்லாரே ஆயினும் செல்வர்வாய்ச்சொல்செல்லும்;
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். 45

5. உண்மையுடன் ஒழுகல்

வரிசையான வளையல்கள் அணிந்த நங்கையே! கொடுக்க முடியாத ஒரு பொருளை இல்லையெனல் யாருக்கும் பழி யன்று; அஃது உலக இயற்கையே! ஆனால், தருவதாகக் கூறி நெடுங்காலம் நின்றோடச் செய்து, பின்னர், கேட்ட வரது விருப்பம் அழியும்படி இல்லையெனப் பொய்த்து விடுதல், செய்த நன்றியைக் கொன்றவரின் செயலினும் குற்றம் உடையதாம். 4

வெல்லம் யார் தின்றாலும் கசக்காது; வேம்பு தேவரே தின்றாலும் கசக்கும். இவைபோன்றே, தகுதியுடையவரும் அவர் அல்லாத அற்பரும் தத்தம் பண்புகளினின்று என்றும் குறையமாட்டார்கள். 4

குளிர்ந்த மலை நாடனே! காலோட்டம் உள்ள செல்வ காலத்தில், மிக்க உறவினர்கள், வானின்மேல் மின்னும் விண்மீன்களினும் பலராய் வந்து சேர்வர்; தாங்கமுடியாத வறுமைத் துன்பத்தை ஒருவர் அடைந்தபோது அவரோடு உறவுடையோம் என்பவர் சிலரே. 4

குற்றமற்ற இவ்வுலகில் நிலைபெற்ற அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் நடுவாகிய பொருளை ஒருவன் அடைந்தால், இருபக்கமும் உள்ள மற்ற இரண்டையும் கூட அடைவான்; நடுவாய பொருளை அடையாதவனோ உலையிலிட்டுக் காய்ச்சுவதுபோன்ற துன்பமே அடைவான் 4

நல்லினப் பசுவின் கன்றானால் சிற்றிளங் கன்றும் விலை போகும். படிக்காதவராயினும் செல்வரானவரின் வாய்ச் சொல் செல்லுபடியாகும். வறியவர் வாய்ச்சொற்களோ அற்ப ஈரம் உள்ளபோது உழுகின்ற உழவுபோல் மேலோடு நின்று செல்லுபடியாகாவாம். 4

இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்;-தடங்கண்ணாய்!
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறு பேய்ச்சுரையின் காய். 46

தம்மை இகழ்வாரைத் தாம்அவரின் முன்இகழ்க;
என்னை அவரொடு பட்டது —புன்னை
விறல்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப !
உறல்பால யார்க்கும் உறும். 47

ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்;—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி; ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு. 48

யாஅர் உலகத்தோர் சொல்இல்லார் தேருங்கால்
யாஅர் உபாயத்தின் வாழாதார்—யாஅர்
இடையாக இன்னாத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார். 49

தாம்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்(று)
யாங்கணும் தேரின் பிறிதில்லை;—ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே
கூற்றம்கொண் டோடும் பொழுது. 50

விரிந்த கண்களுடைய பெண்ணே ! பேய்ச்சுரைக்காயில் உப்பு, நெய், பால், தயிர், பெருங்காயம் முதலியன இட்டுச் சமைப்பினும் கசப்பு நீங்காது; அதுபோல, எப்போதும் அடங்காத முரடர்கள், விரிவாக மெய்யறிவு நூற்களைக் கற்பினும் என்றும் அடங்கமாட்டார்கள். 46

புன்னையின் மிக்க பூமணங் கமழும் சோலையும் விரிந்த நீர்ப்பரப்பும் உடைய கடற்கரை நாடனே! வரவேண்டியது யார்க்கும் வந்தேதீரும். எனவே, தம்மை இகழக்கூடிய வரைத் தாம் அவர்க்குமுன் இகழ்வாராக! அவரோடு ஆகக் கூடியது என்ன? 47

பசுக்கள் பல பல்வேறு நிறங்கள் உடையவாயினும், அவை தரும் பால் வெண்மையன்றி வேறு நிறத்ததன்று; அறநெறிகள் பசுக்களைப்போல் பல்வேறு வடிவங்களில் இருப்பினும், அவற்றின் பயன், பால்போல ஒரே நல்லியல்பு உடையதாகும். 48

ஆராயுங்கால், உலகில் ஒரு சுட்டுச் சொல்லும் பெறுதவர் யார் ? வாழ்வில் சூழ்ச்சியால் வாழாதவர் யார் ? இடையிலே துன்பம் அடையாதவர் யார் ? இறுதிவரையும் செல்வராய் இருந்தவர் யார் ? 49

உயிரை எமன் பிடித்துக்கொண்டு ஓடும்போது, தாம் பேணி அழகுசெய்து காத்த உடலும் உடன் வந்து பயன் தராது. எப்படி ஆராய்ந்து பார்க்கினும், தம்முடன் வரக் கூடியது, தாங்கள் செய்த வினைகளைத் தவிர மற்று வேறு ஒன்றும் இல்லை. 50

6. தீவினையச்சம்

துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா
மக்கள் பிணத்த சுடுகாடு;—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலம்கெட்ட
புல்லறி வாளர் வயிறு. 51

இரும்பார்க்கும் காலராய் ஏதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுள் சேர்வர்;—சுரும்பார்க்கும்
காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார். 52

அக்கேபோல் அங்கை ஒழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே;—அக்கால்
அலவனைக் காதலித்துக் கால்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால். 53

நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும்;—பரப்பக்
கொடுவினையர் ஆகுவர் கோடாரும் கோடிக்
கடுவினையர் ஆகியார்ச் சார்ந்து. 54

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 55

6. தீச்செயல் புரிய அஞ்சுதல்

உலகத் துன்பத்துள் மயங்கித் துறவுநெறியைக் கொள்ளாத மக்களின் பிணங்களை உடையன சுடுகாடுகள். அறிவு கெட்ட அற்பர்களின் வயிறுகளோ, மிகுந்த விலங்குகட்கும் பறவைகட்கும் சுடுகாடுகளாம். 51

வண்டுகள் ஒலிக்கும் காட்டினுள் வாழும் கவுதாரியையும் காடையையும் கூட்டினுள் கொண்டுவந்து அடைத்து வைப்பவர்கள், மறுமையில் இரும்பு விலங்கு ஒலிக்கும் கால் உடையவராய், அயலார்க்கு அடிமையாய், கருப்பங் கொல் லையில் வேலை செய்வார்கள். 52

முற்பிறப்பில் நண்டை விரும்பி அதன் கால்களை ஒடித்து உண்ட பழைய தீவினை இப்பிறப்பில் வந்தடையின், சங்கு மணிபோல் உள்ளங்கை தவிர மற்ற விரல்கள் அழுகித் துன்பம் மிக்க தொழுநோயுடன் திரிவர். 53

நெய் போன்ற குளிர்ந்த பொருளும் நெருப்பின் வெப்பத்தைச் சேரின் எரிக்கும்படிச் சுட்டுத் துன்ப நோயைத் தரும். அதுபோல, கோணலற்ற நேர்மையாளரும் கடுஞ் செயலாளரைச் சார்ந்தால், நேர்மை கோணி, மிகவும் கொடுந்தொழில் புரிபவ ராவர். 54

பெரியோர் நட்பு பிறைநிலாப்போல நாடோறும் படிப் படியாக வளரும்; சிறியோர் நட்போ, வானில் செல்லும் முழுநிலாப்போல நாடோறும் படிப்படியாய்த் தானுகவே தேய்ந்து குறையும். 55

சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மன் சார்ந்
தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்கண் இல்லாயின் —
சார்ந்தோய்கேள் !
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து. 56

யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் துணைமை உடையவர்—சாரல்
கனமணி நின்றிமைக்கும் நாடகேள் ! மக்கள்
மனம்வேறு; செய்கையும் வேறு. 57

உள்ளத்தால் நள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தால் நட்டார் கழிகேண்மை--தெள்ளிப்
புனல்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட !
மனத்துக்கண் மாசாய் விடும். 58

ஒக்கிய ஒள்வாள்தன் ஒன்னார்கைப் பட்டக்கால்
ஊக்கம் அழிப்பதூஉம் மெய்யாகும்;—ஆக்கம்
இருமையும் சென்று சுடுதலால் நல்ல
கருமமே கல்லார்கண் தீர்வு. 59

மனைப்பாசம் கைவிடாய்; மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—எனைத்தும்
சிறுவரையே ஆயினும் செய்தநன் றல்லால்
உறுபயனோ இல்லை உயிர்க்கு. 60

ஒருவரைச் சார்ந்துள்ளவனே, கேள்! நீ அவரை உயர்ந்தவர் என மதித்துச் சேர்ந்தாய்; ஆனால், அங்ஙனம் சேர்ந்த உனக்கு, நீ சேர்ந்தவரிடம் உயர் பண்பு இல்லையெனத் தெரிந்தால், அது, ஒருவன், சந்தனம் இருக்கிறது என்று ஒரு செம்பைத் திறந்து உள்ளே பாம்பைக்கண்டது போன்றதாம். 56

மலைச் சாரலில் பெரு மணிகள் கிடந்து சுடர்விடும் மலை நாடனே, கேள்! மக்களது மனம் வேறாயுள்ளது, செய்கையும் வேறுபுள்ளது; எனவே, எவர் ஒருவர் இன்னொருவரது மனத்தைப் புரிந்து கொள்ளும் அறிவுத்துணை உடையவராயிருக்கமுடியும்? 57

தண்ணீர் மணிகளைத் தெள்ளியிழுத்துச் சேறாய்க் குழப்பிக்கொண் டோடும் பொலிவு மிக்க மலை நாடனே! உள்ளத்தால் நட்புகொள்ளாமல், நன்மை பெறுவதற்கு ஏற்ற வெளிச்செயல் உடையவராய்க் கள்ளத்தனமாய் நட்புற்றிருப்பவரின் பெரிய நட்பு, மனத்தில் களங்கம் உடையதாகிப் பின் அழிந்துவிடும். 58

ஓங்கிய ஒளிவிடும் வாள் தவறித் தம் பகைவர் கையில் அகப்பட்டுக் கொள்ளின், தம் ஊக்கத்தை அழிப்பதும் உண்மையாகும். அதுபோல, கல்லாத தீயோரிடம் நட்பு கொளின், அந்நட்பு, இம்மையிலும் மறுமையிலும் தம் வளர்ச்சியைச் சுட்டழிக்கு மாதலால், அன்னாரிடமிருந்து பிரிதலே நற்செயலாகும். 59

மனைவியின் பற்றைக் கைவிடாமலும் மக்கள் நன்மைக்கென்று ஏங்கி யுழைத்தும் எத்தனை ஊழிக்காலந்தான் நெஞ்சமே நீ வாழ்வாயோ? எவ்வளவு சிறியதாயினும் செய்துள்ள நல்லறத்தைத் தவிர, உயிர்க்கு மிகுநன்மை யளிப்பது வேறொன்றும் இலது. 60

துறவற வியல்

7. செல்வம் நிலையாமை

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வ
உண்டாக வைக்கற்பாற் றன்று. [மொன்று 61

துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க; [தொட்டுப்
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். 62

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள. 63

நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்(து)
ஒன்றின ஒன்றின வல்லே செயிற்செய்க ;
சென்றன சென்றன வாழ்நாள் ; செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று. 64

என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம். 65

7. செல்வத்தின் நிலையில்லாமை

உப்பு, உறைப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு என்னும் ஆறு சுவைகள் கலந்த உணவை மனைவி விரும்பி ஊட்ட, மறு கவளம் வேண்டா என்று தள்ளி முதல் கவளத்தோடு உண்டு எழுந்த செல்வரும், பின்ஒருகால் ஏழையராகி வேறோரிடம் சென்று கூழுக்குக் கெஞ்சுவர் என்றால், செல்வம் என்னும் ஒன்று நிலையானதாக மதிக்கத்தக்கதன்று என்பது புலப்படும். 61

செல்வமானது நடுவு நிலைமை உடையதாய் எவரிடமும் நிலைத்து நில்லாமல், வண்டியின் உருளைக் கால்போல மேலுங் கீழுமாய் மாறிமாறி வரும்; ஆதலின், குற்றம் அற்ற பெருஞ்செல்வம் கிடைப்பின், கிடைத்த காலந் தொட்டே, எருது நடந்து உழுது உண்டான உணவுப் பொருளைப் பலரோடு சேர்ந்து உண்பீராக ! 62

யானையின் பிடர் பெருமையுற அதன்மேலுள்ள குடை நிழலின் கீழ்ப் படைத்தலைவராய் அமர்ந்து சென்ற அரசரும், மாறுன தீவினை தாக்க, தாம் கைக்கொண்ட மனைவியை மாற்றரசர் கொள்ள வீழ்ந்தழிவர். 63

வாழும் நாட்களோ செல்லுகின்றன – செல்லுகின்றன; யமனோ, சினந்து விரைந்து வருகிறான்-வருகிறான்; எனவே நிலைத்தவை - நிலைத்தவை என்று நினைப்பன வெல்லாம் நிலையாகமாட்டா என்று அறிந்து, உம்மால் இயன்ற - இயன்ற அறங்களைச் செய்வதாயின் உடனே செய்க. 64

யாதானும் ஒரு பொருள் கையில் கிடைத்தால், அதனைப் பிறகு உதவுவோம் என இறுகப்பிடித்து வைத்திராமல் முதலிலேயே பிறர்க்கு உதவியவர்கள், நடுநிலை தவறுதல் இல்லாத கடிய யமன் உயிரைப் பிடித்துச் செல்லும் கொடுநிலத்திலிருந்து தப்பிப் பிழைப்பர். 65

இழைத்தநாள் எல்லை யிகவா; பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை;—ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின்! நாளைத்
தழீஇம்தழீஇம் தண்ணம் படும். 66

தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும்;—ஆற்ற
அறஞ்செய் தருளுடையீர் ஆகுமின்! யாரும்
பிறந்தும் பிறவாதா ரில். 67

செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம்—எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் [தோன்றி
மருங்கறக் கெட்டு விடும். 68

உண்ணான்; ஒளிநிறான்; ஓங்கு புகழ்செய்யான்;
துன்னருங் கேளிர் துயர்களையான்;—கொன்னே
வழங்கான்; பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும். 69

உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்தோய் மலைநாட!
உய்த்தீட்டும் தேனீக் கரி. 70

குறிப்பிட்ட வாழ்நாளின் எல்லையை யாரும் கடக்க முடியாது. எமனிடத்திலிருந்து தப்பி நீங்கிக் குதித்தோடிப் பிழைத்தவர் இங்கே எவரும் இலர். நாளைக்கே 'தழீஇம்' - 'தழிஇம்' எனச் சாப்பறை (சாவுமேளம்) கொட்டப்படலாம். எனவே, மிகவும் பெரும்பொருள் வைத்திருப்பவரே! உடனே பிறர்க்கு வழங்குவீராக. 66

நாடோறும் புதிதாய்த் தோன்றுகிற கதிரவனை அளக்கும்படியாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் எமனுனவன் உம் வாழ்நாளைத் தானியமாக அளந்து உண்டுவருகிறான்; எனவே, எவரும் இவ்வுலகில் பிறந்திருப்பினும், நல்லறம் புரிந்து, பிறவா நிலை யெய்திய பெரியோர்போல அருள் உடையவராகுக! 67

தாம் பெருஞ்செல்வர் என்றெண்ணித் தாம் செல்லப் போகும் மறுவுலகைப் பற்றி எண்ணாத அற்பரின் பெரிய செல்வம், இரவில் கரிய மேகத்தின் வாய்த் தோன்றிய மின்னல்போல் சிலகாலம் இருந்து, பின் வளரும்வழி முற்றும் அறக் கெட்டழியும். 68

ஒருவன் தானும் உண்ணாதவனாய், விளக்கமான நற்பெயரை நிலைநிறுத்தாதவனாய், உயர்ந்த புகழ்ச் செயல் புரியாதவனாய், பிறர்க்கும் வழங்காதவனாய், வீணே பொருளை வைத்துக் காத்திருப்பானே யாகில், ஆ! ஆ! அதனை இழந்துவிட்டான் என்றே எண்ணப்படுவான். 69

வானத்தை முட்டும் மலைநாடனே! நல்லுடை உடுக்காமலும், நல்லுணவு உண்ணாமலும், தம் உடலை வருத்தியும், அழியாத நல்ல அறச்செயல்களும் செய்யாதவராயும், பிறர்க்கும் வழங்காமலும் பொருளைச் சிறுகச் சேர்த்து வைத்திருப்பவர் பின்னர் இழந்துவிடுவர். தேனைக் கூட்டில் கொண்டுவந்து சேர்க்கும் தேனீக்களே இதற்குச் சான்றாம். 70

8. இளமை நிலையாமை.

நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்;—புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னாங் கெழுந்திருப் பார். 71

நட்புநார் அற்றன; நல்லாரும் அஃகினார்;
அற்புத் தளையும் அவிழ்ந்தன;— உட்காணாய் !
வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன கலி. 72

சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையின
ராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறும்—இற்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு. 73

தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும்—காழிலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்
கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று. 74

எனக்குத்தாய் ஆகியாள் என்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகி யவளும் அதுவானால் தாய்த்தாய்க்
ஏகும் அளித்திவ் வுலகு [கொண்(டு) 75

8. இளமையின் நிலை யில்லாமை

நல்லறிவினர் பின்னால் நரைதோன்றும் என முன்கூட்டியே உணர்ந்து இளமையிலேயே துறவு கொள்ளத் துணிந்தனர். குற்றம் நீங்காத-நிலையில்லாத இளமையை விரும்பி மகிழ்ந்து இறுமாந்திருந்தவர் பின்னர்த் தடி ஊன்றித் துன்பத்துடன் நடமாடுவர். 71

நண்பர்கள் நீங்கினர்; நல்லறிஞரும் நெருக்கம் குறைந்தனர்; மனைவி மக்கள் முதலானாரின் அன்புப் பிணிப்புகளும் அவிழ்ந்துபோயின. இதனை உள்ளுணர்ந்து காண்க. வீணே உயிர் வாழ்வதால் என்ன நன்மை ஏற்படும்? கடலில் மூழ்கும் கப்பலின் நிலைபோன்ற அழிவுத்துன்பம் இதோ வந்துவிட்டதே! 72

பேச்சு தளர்வுற்று, தடி ஊன்றி, நடை சோர்ந்து, பற்கள் கழன்று விழுந்து, இவ்வுடம்பாகிய பண்டம் இழித்துரைக்கப்படும்வரையும் இல்லறத்திலேயே இருந்து காம வழி ஒழுகும் ஊனக்கண் உடையவர்க்கு, மறுமைக்கு அரணான வீட்டு நெறி செல்லும் வழி இல்லை. 73

உடல் கூனிக் குனிந்து தளர்ந்து தலைநடுங்கித் தடி ஊன்றிக் கீழே விழுந்து இறக்கும் தறுவாயிலுள்ள இம் முதியவளிடத்தும், நெஞ்சுறுதியில்லாத-காம மயக்கம் கொள்கின்ற மாந்தருக்கு, இவள் ஊன்றும் கைத்தடி, தம் தாய் ஊன்றிய தடிபோல் தெரியும்போது மனத்திற்குத் துன்பம் தரும். 74

எனக்குத் தாயா யிருந்தவள் என்னை இங்கே விட்டுவிட்டு, தனக்குத் தாய் தேடி வேறு பிறவி எடுக்கச் சென்றுவிட்டாள்; அவளுக்குத் தாயானவளும் அவ்வாறே தாய் தேடிச் செல்கிறாள் எனில், இவ்வுலக உயிர்கள் தாயோ தாய் என்று தாயைத் தேடிக்கொண்டு அலையும் எளிமையுடையனவாம். 75

வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னு மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல். 76

பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ணள் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோற்கண்ணள் ஆகும் குனிந்து. 77

'பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை
இருசிகையும் உண்டீரோ' என்று—வரிசையால்
உண்ணுட்டம் கொள்ளப் படுதலால் யாக்கைக் கோள்
எண்ணுர் அறிவுடை யார். 78

'மற்றறிவாம் நல்வினை; யாமிளையம்' என்னுது
கைத்துண்டாம்போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்!
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு. 79

ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்—பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளம் கடைப்பிடித்தல் நன்று. 80

வேலன் (சாமியாடுபவன்) வெறியாடும் (சாமியாடும்) கொடிய கொலைக்களத்திலே (ஆட்டைக் கொல்லும் பலி பீடத்திலே), அவனது கையில் தளிரோடு கூடிய மணமிக்க மாலை முன்னால் விளங்க, வெட்டப்படவிருக்கும் ஆடு அந்தத் தளிர்இலையை உண்டாற்போன்ற நிலையற்ற இளமையின் போலியின்பம் அறிவாளரிடம் இராது. 76

இளமையானது, குளிர்ச்சி பொருந்திய சோலையில்உள்ள பயனுள்ள மரங்களெல்லாம் பழங்கள் இற்று வீழ்ந்தாற் போன்றது. எனவே, மிகப் பெரிதும் வேல்போன்றஅழகிய கண்ணுடையவள் என்று இந்த இளம் பெண்ணை விரும்பாதீர்கள்! மற்றபடி இவளும் பின்னர் உடல் கூனிக் குனிந்து கோலையே கண்ணாகக் கொண்டு நடப்பாள். 77

வயது எத்தனை ஆகியுள்ளது! பல்லின் வன்மை எப்படி? (ஒரு முறை மட்டுமா அல்லது) இரு முறையும் உண்கிறீர்களா? என்று முறைப்படி கேட்கப்பட்டுப் பிறரால் உடல் உள்ளாராய்ச்சி செய்யப் படுவதால், உடல் உறுதியை ஒரு பொருளாக அறிவுடையவர் மதிக்கார். 78

முதிர்ந்த பழம் மரத்திலேயே இருக்க, கொடிய காற்றால், நல்ல இளங்காய் விழுந்து போவதும் உண்டு. எனவே, இப்போது நாம் இளையவராயுள்ளோம்; நல்லறம் புரிதலைப் பிறகு பார்த்துக் கொள்வோம் என்று கருதாமல், கைப் பொருள் இருக்கும் இப்பொழுதே மறைக்காமல் நல்லறம் செய்க. 79

நாள் முடியும் ஆளைத் தேடி அலையும் அருள் அற்ற எமன் ஒருவன் இருப்பதால், தோளில் எடுத்துச் செல்லும் கட்டுசோறு போன்ற நல்லறத்தைக் காலத்தோடு செய்து பிழையுங்கள்! எமன், கருவைப் பிதுக்கித் தாய் அலறும்படிக் குழந்தையையும் கொண்டு செல்லுதலால், அவனது கபடு அறிந்து நடத்தல் நல்லது. 80

9. யாக்கை நிலையாமை

'மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத
துஞ்சினர்' என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினர் இவ்வுலகத் தில். 81

வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல். 82

மன்றம் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமாம் மாண்டார் மனம். 83

சென்றே யெறிப ஒருகால்; சிறுவரை
நின்றே யெறிப பறையினை;—நன்றேகாண்!
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக்கொண் டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து. 84

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்—
மணங்கொண்டீண்(டு)
உண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொண் என்னும் பறை. 85

9. உடம்பின் நிலையில்லாமை

மலைமேல் தோன்றும் முழு நிலாப்போல யானையின் பிடர் மேல் நிறுத்தப்பட்ட வட்ட வெண்குடைக்கீழ் அமர்ந்து சென்றஅரசர்களும்இறுதியில் இத்தரையில்இறந்துபட்டனர் என்று குறிப்பிட்டு எளிமையாய்ப் பேசப்படுகின்றனரே தவிர, இவ்வுலகில் இறவாமல் தப்பினவர் எவரும் இலர். 81

உள்ள வாழ்நாள் ஒவ்வொன்றையும் அராக்கும் அலகாக, ஒளிவீசும் கதிரவன் ஒருநாளும் வீணே தவறாமல் தோன்றிக் கொண்டே யிருத்தலால், இவ்வுலகின்மேல் எவரும் நிலைத்திரார்; எனவே, வாழ்நாள் முடியுமுன் உலகோடு ஒத்து உதவி வாழ்க! 82

மணஅரங்குஅதிர மணப்பறையாய் ஒலித்த இன்னியங்கள் (வாத்தியங்கள்) அப்போதே அங்கேயே அந்த மண மக்கட்கே மேற்கொண்டு பிணப்பறையாய் முழங்குதலும் உண்டு என்று உணர்ந்து, மாட்சிமையுடைய பெரியோர் உள்ளம், பிழைத்து ஏகக்கூடிய நல்லற வழியினையே அழுந்தப் பின்பற்றுமாம். 83

சாப்பறை அடிப்பவர் செத்த வீடு சென்று முதலில் ஒரு சுற்று அடிப்பார்கள்; பின்னர்ச் சிறிதுநேரம் இருந்து இரண் டாவது சுற்று பறைகொட்டுவர்; பின்பு மூன்றாவது சுற்று அடிக்கும்போது, பிணத்தைத் துணியால் போர்த்து நெருப்புச் சட்டி எடுத்துக்கொண்டு, செத்தவரைச் சாகப் போகின்றவர் சுமந்து செல்வர். இத்தகைய வாழ்க்கை நன்றோ? ஆராய்ந்து காண்க. 84

உறவினர் கூட்டமாய்க் கூடிக் 'கல்'என ஒலித்து அழுது புலம்ப, பிணத்தைச் சுமந்து சுடுகாட்டில் கொண்டுசெலுத் துபவரைக் கண்டும், இவ்வுலகில் மணம் புரிந்துகொண்டு, இன்பம் உண்டு—உண்டு—உண்டு என்று நம்பும் மயக்க உணர்வுடையோர்க்கு, இன்ப நிலையாமையைச் சாப்பறை யானது 'டொண் - டொண் - டொண்' எனக் கொட்டி உணர்த்தும். 85

நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்ருய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென பல்லோா பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால். 86

படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—
தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல். 87

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்
யாக்கையால் ஆய பயன்கொள்க-யாக்கை [பெற்ற
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றுங்கே
நிலையாது நீத்து விடும். 88

புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—'இன்னினியே
நின்ருன்; இருந்தான்; கிடந்தான்;தன் கேளலறச்
சென்ருன்' எனப்படுத லால். 89

கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து. 90

தோலாகிய பைக்குள் இருந்து தொழில் மிகவும் செய்து உணவூட்டிய உயிராகிய கூத்தாடி உடலை விட்டு வெளியே புறப்பட்டு விட்டால் அந்த வெற்றுடலை நார்கட்டி இழுத்தும் போனால் என்ன? நன்கு தூய்மை செய்து அடக்கம் செய்தால் என்ன? கண்டவிடத்தில் எறிந்தால் தான் என்ன? பலரும் பழித்தால்தான் என்ன? 86

பெய்யும் மழையில் தோன்றி மறையும் குமிழிபோல் பல முறையும் தோன்றி அழியக்கூடிய ஒருவித உடம்பு இது என்று எண்ணி, உலகியல் தடுமாற்றத்தை ஒழிப்போம் என்று உணர்ந்து செயல்படும் திண்ணிய அறிவினரை ஒப்பவர் இந்த நீண்ட உலகில் யார் உளர்? 87

உடம்பானது, மலைமேல் காணப்படும் மேகம்போல் சிறிது நேரம் தோன்றி மற்று அங்கேயே நிலையாமல் நீங்கிவிடக் கூடியது; எனவே, உடலை உறுதியாகப் பெற்றிருப்பவர், தாம் பெற்றுள்ள அவ்வுடம்பால் தகுந்த நல்லறப் பயனை நாடிக்கொள்க. 88

இதோ இப்போதுதான் நின்றுகொண் டிருந்தான் - பின்னர் அமர்ந்தான்-பின்பு படுத்தான்-பின் தன்உறவினர் அலறி அழ இறந்தேபோய்விட்டான் என்று வாழ்க்கைநிலை பேசப்படுதலால், உடலானது புல்நுனியிலுள்ள பனிநீர் போல் நிலையற்றது என்று உணர்ந்து, இப்போதே-ஆம்- இப்போதே அறச்செயல் புரிவீராக! 89

மாந்தர்கள், கோளாமலேயே உறவினராய்த் தாமாக வந்து வீட்டில் பிறந்து, கூடு மரத்திலேயே தங்க ஒன்றும் சொல்லாது வெகு தொலைவு பறந்து சென்றுவிடும் பறவை போல, தம் உடலைச் சுற்றத்தார்க்கு விட்டு ஒன்றும் சொல்லாமலேயே பிரிந்து போய்விடுகின்றனர். 90

10. அறன் வலியுறுத்தல்

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறுஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தால் தவஞ்செய்யா தார். 91

ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து
போவாம்நாம் என்னைப் புலைநெஞ்சே!—ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி எனினும்நின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை. 92

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்(து)
எல்லை இகந்தொருவு வார். 93

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனும் ஆற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோல் போகும் உடம்பு. 94

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்;
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர். 95

10. அறத்தின் வலிமையை வற்புறுத்தி அறிவித்தல்

முற்பிறப்பில் செய்த அறத்தால் (தவத்தால்) இன்பம் துய்த்து இப்பிறப்பில் அறம் செய்யாதவர்கள், அடுத்த பிறவியில், இவ் வீட்டில் உள்ளவரே நன்கு வாழ்பவராவர் என ஒரு வீட்டை அண்ணுந்து பார்த்துத் தாம் உள்ளே புக முடியாதவராய் வெளிக்கடைவாயிலைப் பிடித்துக்கொண்டு மிகவும் வருந்தி நிற்பர். 91

அற்ப மனமே ! நாம் வளர்ச்சியுற வேண்டும் ; ஆதலின் செல்வத்தை விரும்பி அறத்தை மறந்து விடுவோம் என்று கருதி, பொருளுக்காக ஓயாது நின்று முயன்று வாழ்கிருயென்ருலும், நின் வாழ்நாட்கள் இதோ சென்று விட்டனவே! இனி நீ செய்யப்போவதைக் கூறுக. 92

அறிவிலி பழைய தீவினைப் பயனுகிய துன்பம் வரின், வெப்பமாய்ப் பெருமூச்சு விட்டு மனம் சோர்வான். எனவே, அதனைப் பழவினைப் பயன்என்று அறிந்து தெளிந்தவரே, தடுமாற்றத்தின் எல்லையைக் கடந்து நீங்கிக் கடைத்தேறுவர். 93

பெறுதற்கரிய நல்லுடம்பைப் பெற்ற நற்பயனுல் பெரிய அறப்பயனையும் மிகவும் செய்து வைத்துக்கொள்வீராக. உடலானது, கரும்பு தரும் சாறுபோல் பின்னர் அறப்பயனை மிகவும் அளித்து, மற்று அக்கரும்பின் சக்கைபோல் தான் அழிந்துவிடும். 94

காலத்தோடு கரும்பை ஆலையில் இட்டு ஆட்டி வெல்லக் கட்டி பெற்றவர், பின் சக்கை தீயில் பொருந்தி எரியும் போது அங்கே துன்பம் உறமாட்டார்; அதுபோல, வருந்தி உழைத்து உடம்பினுல் அறப்பயன் சேர்த்துக்கொண்டவர் எமன் வரும்போது வருந்துவதில்லை. 95

'இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல்' என்
'பின்றையே நின்றது கூற்ற'மென் றெண்ணி [னுது
ஒருவுமின் தீயவை; ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம். 96

மக்களால் ஆய பெரும்பயனும் ஆயுங்கால்
எத்துணையும் ஆற்றப் பலவானல்—தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும். 97

உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்(கு)—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 98

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்;
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். 99

மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன இளிவினல் வாழ்வேன்மன்;—ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின். 100

எமன் இப்பொழுது வருவானே-அப்பொழுது வருவானே-எப்பொழுது வருவானே என்றெல்லாம் எண்ணுமல், அவன் நம் பின்னுலேயே மறைந்து நின்றுகொண்டிருக்கிருன் என்பதாக எண்ணி, தீ வினைகளை நீக்குக! முடிந்தவரையும் உயர்ந்தோர் வகுத்துள்ள அறங்களைச் செய்துவருக. 96

மக்கட் பிறவியால் ஆகக்கூடிய பெரும்பயனை ஆராயின், எவ்வளவோ மிகப் பல பயன்கள் உண்டாவதால், தடித்த உடம்புக்கு வேண்டிய உதவிகளைமட்டும் செய்துகொண்டிராமல், மேலுலகம் சென்று துய்ப்பதற்காக நல்லறங்கள் செய்யவேண்டும். 97

கிள்ளி யெறியும் அளவினதான ஒரு சிறிய ஆலம் விதை பெரிய மரமாய் விரிந்து மிகவும் பரந்த நிழலைப் பயப்பது போல, அறத்தின் பயனும் தான் சிறியதாயிருப்பினும் தகுந்தவர் கையில் செய்யப்பட்டால், வானம் சிறிதாக அதனைப் போர்த்தும் அளவு தான் பெரிதாகும். 98

நாடோறும் நாளானது தம் வாழ்நாளில் கைவைக்கிற தாக அந்நாளைக் கணக்கிட்டு உணராதவர், நாடோறும் நாள் வந்து கழிதலைப் பார்த்தும், தம் வயது குறைவதான அந்நுட்பம் உணராதவராய், நாடோறும் நாளை இன்பமாயிருக்கிறது என்றெண்ணி மகிழ்வர். 99

ஈனத் தொழில் செய்து உணவு ஊட்டியபோதும் இந்த உடம்பு அழியா உறுதி பெற்றுப் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்து நிலைத்து நிற்கும் என்றால், 'மானம்' என்னும் பெறுதற்கரிய அணிகலனை இழந்து, இரத்தல் (யாசித்தல்) என்னும் ஈனத்தனமான இழிசெயல் செய்தாவது யான் உயிர் வாழ்வேன். ஆனல் அது நடவாதே! 100

11. தூய் தன்மை

'மாக்கேழ் மடநல்லாய்!' என்றரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் புக்கில்லை—
யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல். 101

தோற்போர்வை மேலும் துளைபலவாய்ப்
பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித் துடம்பானல்-மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும். 102

தக்கோலம் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலம் செய்ய ஒழியுமே—எக்காலும்
உண்டி வினையுள் உறைக்கும் எனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல். 103

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேல்என்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
உண்ணீர் களைந்தக்கால் நுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன். 104

முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
எல்லாரும் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன். 105

11. உடம்பின் தூய்மை யற்ற தன்மை

உடம்பிலே ஓர் ஈயின் சிறகளவு தோலின் ஒரு பகுதி கழன்றாலும், அதைக் கொத்தாதபடி காக்கை ஓட்டுவதற்கு ஒரு கோல் வேண்டும்; எனவே, 'மாந்தளிர் நிறமும் இளமையும் உடைய அழகிய பெண்ணே' என்று பெண்களை நோக்கிப் பிதற்றும் 'பெரிய மனிதர்கள்', உடம்பு அற்பமான ஓர் ஒதுக்கிடம் என்பதை அறியார்போலும்! 101

உடம்பானது, தோலாகிய போர்வைக்குமேலும் பல துளைகளை உடையதாய்ப் பொய்த் தோற்றத்தை மறைக்கும் மேற்போர்வைத் துணியால் பொலிவுடையதாய்க் காணப்படுகிறது; ஆதலின், மேற்போர்வையால் பொய்ம்மையை மறைக்காமல் காமமும் பேசாமல் உட்புறம் வெளிப்புறமாகும்படி பையைத் திருப்பிப் பார்ப்பதுபோல் அவ்வுடலைத் திருப்பிப் பார்த்தால் உண்மை விளங்கும். 102

இவ்வுடம்பு எப்போதும் உண்ணும் செயலால் உறுதி பெறக்கூடியது (அதாவது, சோற்றால் அடித்தபிண்டம்) என்னும் உண்மையை உணர்ந்து பெரியவர்கள் வெளியழகு செய்வதைக் கைவிட்ட இவ்வுடலாகிய செத்தையின் இழிநிலை, தாம்பூலம் உண்டு தலை நிரம்ப மலர் அணிந்து பொய்யழகு செய்வதால் மறைந்து விடுமோ? 103

கண்ணின் உள்நீரை எடுத்துவிடின் பனை நுங்கைத் தோண்டியதுபோல் தெரியும் அக் கண்ணின் உண்மை நிலையை உணர்ந்து நன்னெறியில் நடக்கும் நான், பெண்களின் கண்களை, தெளிந்த நீரில் உள்ள குவளை மலர் போன்றன—துள்ளும் கயல் மீன் போன்றன-வேல் போன்றன-என்றெல்லாம் கண்ணற்ற அற்பர்கள் பிதற்றி மயக்குவதால் உறுதி தளர்வேனோ? 104

யாரும் காணும்படி சுடுகாட்டில் உதிர்ந்து சிந்திக் கிடக்கும் பல்லாகிய எலும்பைப் பார்த்து நல்வழி நடக்கும்நான், பெண்ணின் பல் முல்லை மொக்கு போன்றது-முத்து போன்றது-என்றெல்லாம் பிதற்றுகிற கல்லாத அற்பர்களின் மயக்கவுரையால் மனம் தளர்வேனோ? 105

குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தடியும் வழும்பும்ஆம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள். 106

ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தைப்— பேதை
'பெருந்தோளி! பெய்வளாய்!' என்னுமீப் போர்த்த
கருந்தோலால் கண்விளக்கப் பட்டு. 107

பண்டம் அறியார் படுசாந்தும் கோதையும்
கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்--மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தல்
முடைச்சாகா டச்சிற் றுழி. 108

கழிந்தார் இடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—
ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மின்; இற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து. 109

உயிர்போயார் வெண்டலை உட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்கும் செம்மாப் பவரைச்-செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ணம் என்பதனல் தம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர். 110

குளிர்ந்த பூமாலை சூடிய அழகிய பெண் எனப்படுபவள் குடலும் மூளையும் இரத்தமும் எலும்பும் தொடர்கின்ற நரம்பும் தோலும் நடுநடுவே யுள்ள தசையும் கொழுப்பு நிணமும் ஆகிய இவ்வுடற் பகுதிகளுள் எது என்று குறிப்பிடத் தக்கவளோ ? 106

ஊத்தைகள் ஊறி வெறுக்கத்தக்க ஒன்பது துளையிடங்களிலும் கிளறி மலக்குழம்பு ததும்பும் உடலாகிய குடத்தை மேலே மூடியுள்ள வழவழப்புத் தோலினால் கண்ணிற்கு அழகெனக் கொண்டு, 'பேரழகு பொருந்திய தோளை உடையவளோ—அணிந்த அழகு வளைய லுடையாளோ' என்றெல்லாம் மூடன் பிதற்றுவான். 107

உடம்பாகிய பண்டத்தின் உண்மைநிலை உணராதவர் அணிந்துள்ள சந்தனத்தையும் மாலையையும் பார்த்துப் பாராட்டுகின்றனர். இவர்கள், முடைநாற்றமுடைய உடம்பாகிய வண்டி உயிராகிய அச்சு முரிந்து இற்று விழுந்த பின், வலிய பெட்டைக்கழுகும் ஆண்கழுகும் பிணத்தை நெருங்கி யிழுத்துக் குத்தியுண்பதைக் கண்டதில்லை போலும் ! 108

இடுகாட்டில் இட்ட இறந்தவர் தலைகள், பார்ப்பவர் உள்ளம் அஞ்சும்படி, உள்குழிந்து ஆழ்ந்துள்ள கண்களுடன் தோற்றமளித்து, இறவாதிருப்பவரை நோக்கி 'நல்லறம் பேணி நல்வழியில் நில்லுங்கள்! இவ்வுடலின் இயல்பு இத்தகையதுதான்!' என மிகவும் நகைத்து எச்சரிக்கின்றன போலும்! 109

உயிர் போனவரின் வெள்ளைத் தலை, கண்டார் அஞ்சும் நகைத்து, இன்பத்தில் இறுமாந்திருப்பவரை எச்சரித்து குற்றத்திலிருந்து நீக்கும். குற்றம் நீங்கியவர் அது கண்டு இவ்வுடலின் தன்மை இத்தகையது என்று உணர்வதால் தம்மை யொருபொருளாக மதித்துத்தருக்கடைவதில்லை. 110

12. துறவு

விளக்குப் புகவிருள் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்;—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது. 111

நிலையாமை, நோய், மூப்புச், சாக்காடென்
றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்;-தொலைவில்லாச்
சத்தமும் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும்
பித்தரின் பேதையார் இல். 112

இல்லம், இளமை, எழில்வனப்பு, மீக்கூற்றம்,
செல்வம், வலியென் றிவையெல்லாம்—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்;
தலையாயார் தாமுய்யக் கொண்டு. 113

துன்பம் பலநாள் உழந்தும் ஒருநாளை
இன்பமே காமுறுவர் ஏழையார்;—இன்பம்
இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா(று)
அடைவொழிந்தார் ஆன்றமைந் தார். 114

கொன்னே கழிந்தன் றிளமையும்; இன்னே
பிணியொடு மூப்பும் வருமால்;—துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே! போதியோ
நன்னெறி சேர நமக்கு. 115

12. உலகப் பற்றைத் துறத்தல்

விளக்கு வெளிச்சம் ஏற்பட்டதும் இருள் நீங்கினாற்போல, ஒருவனது தவத்தின் முன்னே தீவினை நிற்காது. விளக்கின் நெய் தீர்ந்தபோது இருள் சென்று பாய்வதுபோல், ஒருவனது நல்வினை நீங்கியபோது தீவினை நிலைத்து விடும். 111

பொருள்களின் நிலையின்மை, பிணி, முதுமை, இறப்பு ஆகியவற்றை எண்ணி மேலோர் தமக்கேற்ற நல்வினைகளைச் செய்வர். எனவே, வேத சாத்திரம், சோதிடம் என்றெல்லாம் பிதற்றுகிற பித்தர்களினும் அறிவிலிகள் இல்லை. 112

வீடு, இளமை, எழுச்சி, அழகு, மேலான புகழ்ச்சொல், செல்வம், வலிமை என்ற இவை யாவும் நிலையற்றவை என மேலோர் மெல்ல ஆய்ந்துணர்ந்து, தாம் பிழைக்கும் வழிதேடி, காலம் தாழ்க்காது துறவுகொள்வர். 113

அறிவிலார், பலநாள் துன்பத்தில் உழல்வதானலும், ஒருநாள் இன்பத்திற்காக மனைவாழ்வை விரும்புவர்; கற்றமைந்த பெரியாரோ, இன்பம் இடையிடையே சிறிதளவு வருவதறிந்தும், துன்பமே மிகுதியானது என்றுணர்ந்தும் மனைவாழ்வைத் துறந்தனர். 114

இளமையும் வீணே கழிந்தது; இதோ - இப்போதே நோயுடன் முதுமை வருகிறது. எனவே, என்னோடு கலவாமல் துணிவுடன் எங்கெங்கோ செல்லும் என் மனமே! இனியாயினும் நமக்கு நல்வழி ஏற்படப் புறப்படுக. 115

மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால்—பூண்ட
மிடியென்னும் காரணத்தின் மேன்முறைக்
கடியென்றார் கற்றறிந் தார். [கண்ணே 116

ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்
தாக்கரும் துன்பங்கள் தாம்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்
காக்கும் திருவத் தவர். 117

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்(று)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன். 118

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும். 119

துன்பமே மீதூரக் கண்டும் துறவுள்ளார்
இன்பமே காமுறுவர் ஏழையார்;—இன்பம்
இசைதொறும் மற்றதன் இன்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதாம் மேல். 120

மனைவியிடம் மாட்சிமையான குணம் இல்லாமையுடன் மக்களைப் பெறும் மலர்ச்சியும் இல்லையென்றாலும் கணவன் அவளைக் கைவிட முடியாததலின், இப்படியான வறட்டுச் சூழ்நிலையின் காரணத்தால், கற்றறிந்த பெரியோர் முற்கால நூற்களிலே திருமணத்தைக் 'கடி' என்னும் சொல்லால் குறித்தனர். (கடி என்னும் சொல்லுக்கு, 'திருமணம்' என்றும், 'விலக்குதல்' என்றும் பொருள்கள் உண்டு) 116

ஊக்கத்துடன் தாம் மேற்கொண்ட நோன்புகள் குலையும் படி, தாங்க முடியாத துன்பங்கள் தலைநீட்டி வரினும், அவற்றை விலக்கி நோன்பை நிலைநிறுத்தும் வலிமை யுடையவரே நல்லொழுக்கம் போற்றும் அழகிய தவத்தோராவர். 117

பிறர் தம்மை இகழ்ந்து பேசியதைத் தாம் பொறுத்துக் கொள்வதல்லாமல், மேலும், இவர் எம்மை இகழ்ந்த தீவினைப் பயனால், மறுமையில் நரகத்தின் எரிவாயில் விழுந்து வருந்துவாரே என்று இரக்கப்படுவதும் துறவியரது கடமையாம். 118

மெய், வாய், கண், மூக்கு, காது எனப் பேர்கூறப்படும் ஐம்பொறிகளின் வாயிலாய் உண்டாகும் விருப்பையும் ஆவலையும் தன்கைவயமாய்க் கலங்காமல் தடுத்துக் காத்துச் செலுத்தும் வலிமை உடையவன் தவறாது வீடு (முத்தி) பெறுவான். 119

அறிவிலார், துன்பங்களே மேலிடக் கண்டும் துறவுகொள்ளாராய் இன்பத்தையே விரும்பி எதிர்பார்ப்பர். மேலோர் இன்பம் வருந்தோறும் மற்று அதில் மிக்குள்ள துன்பத்தை நோக்கி, இன்பத்தை விரும்புதல் செய்யார். 120

13. சினம் இன்மை

மதித்திறப் பாரும் இறக்க; மதியா
மிதித்திறப் பாரும் இறக்க;-மிதித்தேறி
ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயும் கதமின்மை நன்று. 121

தண்டாச் சிறப்பின்தம் இன்னுயிரைத் தாங்காது
கண்டுழி எல்லாம் துறப்பவோ-மண்டி
அடிபெயரா தாற்ற இளிவந்த போழ்தின்
முடிகிற்கும் உள்ளத் தவர். 122

காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லும்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்-ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து. 123

நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்;-ஓர்த்ததனை
உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாம் கீழ். 124

இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்;-எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. 125

13. கோபம் கொள்ளாமை

நம்மை மதித்து நன்கு நடப்பவரும் நடக்கட்டும்! மதிக்காமல் நம்மை மிதித்து நடப்பவரும் நடக்கட்டும்! அற்ப ஈயுங்கூட, நம் தலைமேல் மிதித்து ஏறி அமர்வதால், அவ்வுண்மை யுணர்ந்தவர், சுடும் சினம் கொள்ளாது பொறுத்தலே நல்லது. 121

அடிபெயர்க்கவும் முடியாமல் நெருக்கி மிகவும் இழிவு நேர்ந்தபோதும் எடுத்த நற்செயலை முடிக்கும் மனவுறுதி யுடையவர், நீங்காத பெருமைக்கு உரிய தமது இனிய உயிரைக் காக்காமல், பிறரால் துன்பம் கண்டபோதெல்லாம் வெறுத்து உயிரை விடுவரோ? 122

ஒருவன் தன் வாயை அடக்காமல் திறந்து பேசும் தீய பேச்சு, பின்னர் விடாமல் அவனையே சுட்டு வருத்துவதால், இடைவிடாது ஆராய்ந்து அமைந்த கேள்வி யறிவுடைய பெரியோர் எப்போதும் காயும் கடுஞ் சொற்களைச் சினந்து சொல்லார். 123

மேலானவர், தமக்கு நிகரற்ற கீழோர் பண்பற்ற பேச்சு பேசினால், அதற்காக வியர்த்துச் சினங் கொள்ளார். கீழோரோ, அப்பேச்சினைத் தம் உள்ளத்தால் அலசி ஆராய்ந்து ஊரார் கேட்கும்படி நெடுகச் சென்று பேசித் துள்ளிக் குதித்துத் தூணிலே முட்டிக்கொள்வர். 124

இளைஞனது அடக்கமே சிறந்த அடக்கம்; மேன்மேலும் கிளைக்கும் பொருள் வருவாய் இல்லாதவன் கொடுக்கும் கொடையே உயர்ந்த கொடைப் பயனும்; எவற்றையும் நொறுக்கவல்ல வலிமையும் திண்மையும் உடையவன் பொறுக்கும் பொறுமையே சிறந்த பொறுமையாகும். 125

கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னுச்சொல்
எல்லாரும் காணப் பொறுத்துய்ப்பர்-ஒல்லை
இடுநீற்ருல் பையவிந்த நாகம்போல் தத்தம்
குடிமையான் வாதிக்கப் பட்டு. 126

மாற்ருராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்ருமை என்னுர் அறிவுடையார்;-ஆற்ருமை
நேர்த்தின்னு மற்றவர் செய்தக்கால் தாமவரைப்
பேர்த்தின்னு செய்யாமை நன்று. 127

நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும்;-அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர்கொண்ட சான்ருேர் சினம். 128

உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்-உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவத்திஞல் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில். 129

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவிஞர் ஈங்கில்லை;-நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு. 130

உயர்ந்தோர், மந்தரித்து இட்ட திருநீற்ருல் விரைவில் படம் அடங்கிய பாம்புபோல, தத்தம் குடிப் பெருமையால் கட்டுண்டு, கீழோர் வாயிலிருந்து கல் வீசினுற்போல் வருங் கொடுஞ்சொல்லை யாவரும் அறியப் பொறுத்துக்கொண்டு போவர். 126

பகைவராய் நின்று தம்மோடு மாறுகொள்ளும் அற்பர்க்கு அடங்கி ஒதுங்கிப் போதலைக் கோழைமை என்று அறிவாளிகள் கருதார்; எனவே, அவர்கள் பொறுக்க முடியாதபடி எதிரிட்டுத் துன்பம் செய்தால் தாம் பதிலுக்கு அவர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே நல்லது. 127

கீழோரது சினம் நெடுநாள் ஆனுலும் நீங்குதல் இன்றி வளர்ந்து கொண்டேபோகும். சிறப்புடைய பெரியோர் சினமோ, காய்ச்சும்போது தண்ணீர் கொள்ளும் சூட்டைப் போல் சிறிதுநேரம் இருந்து பின்பு தானுகவே ஆறிவிடும். 128

தாம் உதவி செய்ததை உணராமல் ஒருவர் தமக்கு மிகவும் தீமையே செய்தாலும், தாம் பதிலுக்கு நன்மையே செய்வதைத் தவிர, அவரது தவறுக்காக அவர்க்குத் தீமை செய்ய முயலுதல், வானளவு உயர்வு மிக்க குடும்பத்தில் பிறந்த நல்லோரிடம் இல்லை. 129

நாயானது வெறிமிக்குக் கவ்விக் கடிக்கக் கண்டும், தம் வாயால் பதிலுக்கு அந்நாயைக் கடித்தவர் இவ்வுலகில் இல்லை. எனவே, கீழோர் பண்பு இன்றிக் கீழான சொற்களைச் சொன்னுல், மேலோர் தம் வாயால் பதிலுக்குத் திருப்பி அவ்வாறு சொல்வார்களோ ? 130

பொருட்பால்
அரசியல்
14. கல்வி

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல;-நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு. 131

இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்,
தம்மை விளக்குமால், தாம்உளராக் கேடின்றால்,
எம்மை உலகத்தும் யாம்காணேம்; கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. 132

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 133

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சை;மற் றல்ல பிற. 134

கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல;-தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே; நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 135

பொருட் பால்

அரசியல்

14. கல்வியின் சிறப்பு

மயிர் முடியின் அழகும் வளைந்த ஓரக்கரையிட்ட உடையழகும் பூசும் பூச்சழகும் ஒருவர்க்கு உண்மையான அழகாகமாட்டா. யாம் மனத்தால் நல்ல தன்மை உடையோம் என்னும் நடுநிலைப் பண்பை உண்டாக்கு வதால் கல்வி அழகே உண்மை அழகு. 131

கல்வியானது இவ்வுலக இன்பமும் அளிக்கும்; கொடுக்கக் கொடுக்கக் குறையாது வளரும்; தம் புகழை விளங்கச் செய்யும்; தம்மைப்புகழால்என்றும் உள்ளவராக்கி அழியாது நிற்கும்; இத்தகைய கல்வியைப் போல, அறியாமையாகிய மயக்கத்தைப் போக்கும் மருந்து யாம் எவ்வுலகிலும் கண்டதில்லை. 132

உவர் நிலத்தில் தோன்றிய உப்பை நன்செய் நிலத்தில் தோன்றிய நெல்போல் சிறந்ததாக உயர்ந்தோர் மதிப்பர் அதுபோல், தாழ் குடியில் பிறந்தவராயினும் கற்றறிந்தவர் களைத் தலைமையிடத்தில் வைத்துப் போற்றவேண்டும். 133

கல்வி, செல்வம்போல் வைத்த இடத்திலிருந்து யாராலும் கவரப்படாது; பாடம் கேட்பவர் வாய்க்கப் பெற்றுக் கற்றுத் தரின் அழியாது மேலும் வளரும்; மிகுந்த பெருமைக்குரிய வேந்தர் சினக்கினும் பறிக்க முடியாது; எனவே , ஒருவன் தனக்குப்பின் தன் பிள்ளைகட்கு வைப்பு நிதியாக அளித் துப்போக வேண்டியது கல்வி தவிர வேறில்லை. 134

கல்விக்கோ அளவில்லை; கற்பவரின் வாழ்நாட்களோ சிலவே; அந்நாட்களிலும், மெல்ல எண்ணிப் பார்க்குங்கால், நோய்கள் பல உள என்பது புலனுகும்; எனவே, நீரை நீக்கிப் பாலைமட்டும் பருகும் அன்னம் போல, தெளிவாக ஆராய்ந்து, நிறைவுடைய நல்ல நூற்களையே தேர்ந் தெடுத்து அறிவுடையோர் கற்பர். 135

தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார்;-காணாய்!
அவன்துணையா ஆறுபோ யற்றே;நூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல். 136

தவலரும் தொல்கேள்வித் தன்மை உடையார்,
இகலிலர், எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி. 137

கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின் றற்றே;-நுனிநீக்கித்
தூரின்தின் றன்ன தகைத்தரோ; பண்பிலா
ஈரம் இலாளர் தொடர்பு. 138

கல்லாரே ஆயினும் கற்றுரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்;-தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. 139

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா(து)
உலகநூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉம் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஓம் துணையறிவார் இல். 140

பார்க்குங்கால், ஓடம் செலுத்துபவன் பழங்குடியைச் சேர்ந்த இழிகுலத்தவனாயுள்ளான் என்று யாரும் இகழமாட்டார்கள்; அவன் துணையாக ஆற்றைக் கடந்து போவது போன்றதே, இழிகுலத்தா னாயினும் நல்ல நூற்களைக் கற்றவன் துணையாக நற்கருத்துக்களைக் கற்றுக்கொள்ளுதலுமாம் ! அறிவாயாக ! 136

குற்ற மற்ற பழைய நூற் கேள்வியும் நற்பண்பும் உடையவரும் பகைமை யில்லாதவரும் அறிவுவன்மை யுடையவருமாகிய கற்றவர்கள் குழுவில் கூடிப் பேசி மகிழ்வதனினும், அகன்ற விண்ணில் தேவர் வாழும் உயர்ந்த நகரம் இன்பம் தருமாயின் ஆண்டு சென்று பார்க்கலாம். 137

ஒலிக்கும் குளிர்ந்த கடல்துறை நாடனே ! கற்றுத் தெளிந்தவரது நட்பு, கரும்பை நுனியிலிருந்து அடி நோக்கித் தின்பதுபோல் போகப்போக இனிக்கும். பண்பும் அன்பும் இல்லாத அறிவிலிகளின் நட்போ, கரும்பை நுனியைவிட்டு அடியிலிருந்து நுனிநோக்கித் தின்பதுபோல் இனிமை குறைந்துவரும். 138

புதிய மட்பாண்டம், பழம் பெருமையும் நல்ல நிறமும் உடைய பாதிரிப்பூவைப் பெற்று அதன் மணத்தைத் தன்னிடமுள்ள தண்ணீருக்குக் கிடைக்கச் செய்தாற்போல, கல்லாதவர்களும் கற்றறிந்தவருடன் கலந்து பழகினால் அவர்தம் நல்ல அறிவு நாடோறும் கிடைக்கப் பெறுவர். 139

ஒருவர் அளவு மிக்க படிப்பினைகள் அமைந்த அறிவு நூற்களைக் கல்லாமல், வெற்று உலகியல் நூற்களை மட்டும் படிப்பதனாலெல்லாம், 'கல கல' வென்று வீணே கத்தும் அளவேயன்றி, நன்மை பெற்றுத் தடுமாற்றம் நீங்கும் அளவு உண்மை யுணர்ந்தவ ராகார். 140

15. குடிப்பிறப்பு

உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றூர்;
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று. 141

சான்ருண்மை, சாயல், ஒழுக்கம் இவைமூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது-வான்தோயும்
மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு. 142

இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன-குடிப்பிறந்தார்
குன்ரு ஒழுக்கமாக் கொண்டார்; கயவரோ(டு)
ஒன்ரு உணரற்பாற் றன்று. 143

நல்லவை செய்யின் இயல்பாகும்; தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்;-எல்லாம்
உணரும் குடிப்பிறப்பின் ஊதியம் என்னே
புணரும் ஒருவர்க் கெனின். 144

கல்லாமை அச்சம்; கயவர் தொழிலச்சம்;
சொல்லாமை உள்ளுமோர் சோர்வச்சம்;-எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை அச்சம்; மரத்தாரிம்
மாணுக் குடிப்பிறந் தார். 145

15. பிறந்த குடியின் (குடும்பத்தின்) பெருமை

அரிமா (சிங்கம்) பசித் துன்பம் மேலிட்டபோதும் கொடிப் புல்லைக் கடித்துத் தின்னுமா ? தின்னாது. அது போல, உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர், உடை சிதைந்து பசியால் உடம்பு மெலிந்தபோதும் (குறுக்கு வழியில் வாழ்வு பெறுவதற்காகத்) தமது உயர்ந்த குறிக்கோளிலிருந்து மாறார் 141

வானளாவிய-மேகம் தவழ்கின்ற மலைநாடனே! மாண்பும் பழகும் பதமும் நல்லொழுக்கமும் ஆகிய முப் பண்புகளும், வானளாவிய புகழ் மிக்க உயர் குடியில் பிறந்தார்க்கல்லாமல், பெருஞ் செல்வம் பெற்றபோதும் தாழ்குடியினர்க்கு அமையா 142

பெரியோர் வரின் இருக்கைவிட்டு எழுதலும் எதிர்சென்று அழைத்துவருதலும் அவரை வழியனுப்பும்போது சிறிது தொலைவு உடன் செல்லுதலுமாகிய இன்ன பல உயர் பண்புகளை, உயர் குடிப் பிறந்தவர் குறையாத இயற்கையொழுக்கமாகக் கொண்டிருப்பர். இவ்வொழுக்கம் அற்பரிடம் இருப்பதாகக் கருதமுடியாது. 143

ஒருவர்க்கு உயர்குடிப் பிறப்பு கிடைத்துள்ளது எனில், அவர் நல்லன செய்தால் உயர்குடிப் பிறப்பின் இயற்கையென்று உலகம் கூறும்; தீயன செய்தால், பலரும் தூற்றும் பழிக்கு இடமாகும்; எனவே, எல்லாம் உணர்ந்த உயர்குடியில் பிறந்ததால் அவருக்குச் சொந்த நன்மை என்னவோ ? 144

மாண்பற்ற தாழ்குடியில் பிறந்தவர், படிக்காத அச்சம், கயமைத் தொழில் செய்யும் அச்சம், நல்லோர் அவை நடுவே ஒன்றும் பேசவியலாமையை எண்ணிச் சோர்ந்துபோகும் அச்சம், எல்லாமே இரப்பவர்க்கு ஒன்றும் கொடுக்கமுடியாத அச்சம் ஆகிய அச்சங்களை உணராத மரக்கட்டைகளாய் மரத்துப்போவர். 145

இனநன்மை இன்சொலொன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை எல்லாம்-கனமணி
முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே உள. 146

செய்கை அழிந்து சிதல்மண்டிற் றுயினும்
பெய்யா ஒருசிறை பேரில் உடைத்தாகும்;
எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை. 147

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளங்குறூஉம் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார். 148

செல்லா இடத்தும் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்தும் செய்யார் சிறியவர்;-புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோல்
பொருமுரண் ஆற்றுதல் இன்று. 149

எற்றென்றும் இல்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தன் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்;
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும். 150

உயர்ந்த பல மணிகள் முத்துக்களோடு ஒளி வீசும்-ஒலிக்கின்ற குளிர்ந்த கடற்கரை நாடனே ! நல்லின நட்பு, இன்சொல் பேசல், இரப்பார்க்கு ஒன்று ஈதல், மேலும் மற்ற மனத்தூய்மைமுதலிய நற்பண்புகள் யாவும் நற்குடிப் பிறப்பாளரிடம் இருக்கும். 146

பெரிய மாளிகை ஒரு பக்கம் வேலைப்பாடு அழிந்திருந் தாலும், மற்றொருபக்கம் செல்நிறைந்து அரித்திருந்தாலும், இன்னொரு பக்கமாவது மழை பெய்யாத நல்ல இடத்தை உடைத்தா யிருக்கும். அதுபோல, நற்குடிப் பிறந்தோர், வறுமைத் துன்பத்தால் வருந்துங் காலத்தும், செய்ய வேண்டிய நற்செயல்களைச் செய்துகொண்டே யிருப்பர். 147

ஒரு பக்கம் பாம்பு (கிரகணம்) பற்றிக்கொண்டாலும், மற்றொரு பக்கத்தால், அழகிய இடத்தையுடைய பெரிய நிலவுலகை வெளிச்சத்தால் விளங்கச்செய்யும் நிலாவைப் போல, நற்குடியாளர், தம்மை வறுமை நன்கு பற்றி நிற்பினும், உலகிற்கு உதவுவதில் தளரார். 148

மான் உடம்பின்மேல் சேணம் போட்டுக் கொண்டாலும், பாய்ந்தோடும் குதிரைபோல் போர்முகத்தில் பகையை எதிர்த்தல் இயலாது; அதுபோல, உயர்குடிப் பிறந்தோர் செய்ய முடியாதபோதும் எப்படியாவது முயன்று செய்யும் நற்செயல்களை, தாழ்ந்தவர்கள் செய்ய முடிந்த போதும் செய்யமாட்டார்கள். 149

நீர் அற்றபோதும் அகழ்ந்த ஆற்றைத் தோண்டினால் விரைந்து தெள்ளத் தெளிந்த நீர் தோன்றி உதவும். உயர் குடியினரும் தம்மிடம் யாதொன்றும் இல்லாத போதும், வசதியற்றுத் தம்மை அண்டிய எளியார்க்கு, தளர்ந்த விடத்து உதவும் ஊன்றுகோல்போல் உதவுவர். 150

16. மேன்மக்கள்

அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்;-திங்கள்
மறுவாற்றும்; சான்றோர்அஃ தாற்றார்; தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின். 151

இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்;-விசையின்
நரிமா உளம்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல். 152

நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றம்கொண் டேறார்;-உரம்கவரு
உள்ளமெனும் நாரினால் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை. 153

செல்வழிக் கண்ணொருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையின் தோன்றப் புரிந்தியாப்பர்;
நல்வரை நாட! சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி. 154

புல்லா எழுத்தின் பொருளில் வறுங்கோட்டி
கல்லா ஒருவன் உரைப்பவும் கண்ணோடி
நல்லார் வருந்தியும் கேட்பரே மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து. 155

16. மேலான பண்பாளரின் மேன்மை

அழகிய இடத்தையுடைய விண்ணிலே அகன்ற நிலவொளியைவீசும் வெண்ணிலாவும் மேன்மக்களும் தம்முள் நிகராவர்; ஆனால், வெண்ணிலாவானது தன்னிடமுள்ள கறுப்புக் களங்கத்தைத் தாங்கிக்கொண்டுள்ளது. மேலோரோ, ஒரு களங்கம் உற்றால் அதைத் தாங்கமுடியாதவராய் மயங்கி அழிவர். 151

கருதியது கைகூடினும்-சரி கைகூடாவிடினும் சரி-பழி வராமல் பார்த்துக்கொள்வர் பெரியோர். விரைந்து பாய்ந்து நரியின் மார்பைப் பிளந்த அம்பைக்காட்டிலும், அரியின் (சிங்கத்தின்) மேல் வைத்த குறிதவறிய அம்பு தாழ்ந்ததா என்ன ? 152

உயர்ந்தோர் நரம்பு தெரிய மெலிந்து ஏழைமையுறினும், தம் வரம்பு கடந்து குற்றமான செயல்புரிந்து முன்னேற முயலார்; தம் அறிவைக் கருவியாகக்கொண்டு, ஊக்கம் என்னும் கயிற்றால் மனத்தைக் கட்டுப்பாடு செய்து, தம்மிடம் உள்ள அளவிற்குச் செய்யத்தக்க நற்செயல்களைச் செய்வர். 153

நல்ல மலை நாடனே ! கருங்கல் மலையிலும் ஒருசில நாள் மக்களின் காலடி பட்டாலேயே தேய்ந்த பாதை உண்டாகி விடும். பெரியவர்கள் செல்லும் வழியிலே ஒருவரை ஒருநாள் கண்ணால் கண்டாலும், தொன்றுதொட்டுப் பழகிய நட்புபோல் தெரியும்படி மிகவும் விரும்பிக்கட்டுண்டு பழகுவர். 154

எழுத்து (இலக்கணம்) அறியாத-ஒரு கருத்தும் உணர முடியாத வீண் கூட்டத்திலே கல்லாத போலி யொருவன் பேசவும், தவறி அங்குச் சென்ற நல்லார் அவனது பேச்சால் வருந்தினாலும், கண்டித்தால் அவன் பலர் நடுவே நாணுவானே என்று பரிவுகொண்டு இரக்கமுற்று வாளா கேட்டுக்கொண்டிருப்பார். 155

கடித்துக் கரும்பிணைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே ஆகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறுர்தம் வாயிற் சிதைந்து. 156

கள்ளார்;கள் உண்ணுர்; கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்;-தள்ளியும்
வாயிற்பொய் கூறுர்; வடுவறு காட்சியார்
சாயின் பரிவ திலர். 157

பிறர்மறை யின்கண் செவிடாய்த், திறனறிந்(து)
ஏதிலார் இற்கண் குருடனுய்த், தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு. 158

பன்னுளும் சென்றக்கால் பண்பிலார் தம்முழை
என்னுனும் வேண்டுப என்றிகழ்ப;-என்னுனும்
வேண்டினும் நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறும் செய்வர் சிறப்பு. 159

உடையார் இவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வர்;-உடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட இடத்து 160

கரும்பைப் பல்லால் கடித்தும் கணுக்கள் சிதறும்படி ஆலையில் இட்டு நொறுக்கியும் உரலில் இட்டு இடித்தும் எப்படி சாறு எடுத்தாலும், அது, இனியசுவையுடையதாகவே யிருக்கும். உயர்குடிப் பிறந்தவரும், தம்மை யொருவர் பழிபடத் திட்டிச் சென்றாலும் தம் வாயால் இழித்துப் பேசாது இனிக்கவே பேசுவார். 156

குற்றமற்ற நல்லறிவினர் திருடார்; கள்குடியார்; விலக்க வேண்டியவற்றை விலக்கி நீக்குவர்; பிறரை மட்டப்படுத்தி இகழ்ந்து பேசார்; தவறியும் வாயால் பொய் பேசார்; வாழ்வு சரிந்தால் துன்புறுதல் இலர். 157

பிறரது மறைச் செய்தியை (இரகசியத்தை) ஒட்டுக் கேட்பதில் செவிடனாகியும், முறையறிந்து ஒழுகி, அயலான் மனைவியைத் தீய நோக்குடன் காண்பதில் கண் குருடனாகியும், பிறரைப் பற்றிப் புறங்கூறித் தீயன பேசுவதில் ஊமையாகியும் ஒருவன் ஒழுகுவானேல், அம்மேலோனுக்கு யாதோர் அறமும் அறிவுறுத்த வேண்டியதில்லை. 158

நற்பண்பில்லாதவர், தம்மிடம் ஒருவர் பலநாளும் வந்தால், ஏதேனும் விரும்பிவருகிறார் என்று இகழ்ச்சியாக நடத்துவர். மேன்மக்களோ, ஒருவர் எதையும் விரும்பி வரினும் நல்லதே என்று மகிழ்ந்து, காணுந்தோறும் பெருமையுடன் நடத்துவர். 159

நற்குடியிற் பிறந்த நல்லாருடன் சேர்ந்தால், பொன்னும் மணியும் உடைய சுரங்கத்தை அடைந்ததுபோல் ஆகாதோ ஆகும்! இஃதறியாதார், இழிந்தவர் பின்னே சென்று இவர் பெருஞ்செல்வம் உடையவர் என்று உறுதியாகப் பற்றிப் (பல்லிளித்து) வாழ்வர். 160

17. பெரியாரைப் பிழையாமை

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்;-வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நல்நாட!
பேர்க்குதல் யார்க்கும் அரிது. 161

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும் - அன்னோ!
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் அறிவி னவர். 162

அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்
மிகைமக்க ளால் மதிக்கற் பால;-நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார். 163

விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேண்நின்றும் உட்கும்;
அருமை உடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை உடையார் செறின். 164

'எம்மை அறிந்திலிர்; எம்போல்வார் இல்'லென்று
தம்மைத்தாம் கொள்வது கோளன்று;-தம்மை
அரியரா நோக்கி அறனறியும் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள். 165

17. பெரியவரிடம் பிழைபட நடவாமை

ஒலிக்கின்ற அருவி ஓடும் அழகிய மலைநாடனே! குற்றமற்ற பெரியாரிடத்துங்கூட, பொறுத்துக்கொள்வாரென்று கருதி, வெறுக்கத்தக்க தீச்செயல்கள் புரியலாகாது; அவர் வெறுத்துவிடின், அதனால் ஏற்படும் இழப்பை நீக்குதல் யார்க்கும் இயலாது. 161

நல்ல நயம் அறியாத அறிவுபெற்ற மூடர், பொன்னையே தரினும் பெறுதற்கரிய பெரியாரை எளிதே - இலவசமாகச் சேரப்பெற்றுங்கூட, (அவரால் நன்மைபெறுமல்) பயனற்ற பொழுதாக நாளைக் கழிப்பர். அந்தோ! 162

ஒருவருடைய தாழ்வும் உயர்ந்த மதிப்பும் ஆகிய இரண்டும் மேன்மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டியவையாம். நயம் இல்லாத-ஒழுக்கமும் அறியாத அற்பமாக்கள் செய்யும் இகழ்ச்சியையும் எடுத்தோதும் புகழ்ச்சியையும், ஆராய்ந்த நூல்வல்லார் ஒரு பொருட்டாக மதியார். 163

படம் விரிக்கும் பளபளப்பான நிறமுடைய நல்ல பாம்பு ஆழமான வெடிப்புக்குள் இருப்பினும், இடியின் கடுமையான சினமுழக்கம் வெகுதொலைவில் தோன்றினும் அஞ்சும். அதுபோல, பிழை செய்தவரைப் பெரியவர் சினந்தால், புகுதற்கரிய காப்பிடத்தில் (அரணில்) புகுந்து கொள்ளினும் தப்ப முடியாது. 164

'எம்மைப் பற்றி நீவிர் அறியீர்; எம்மைப்போல் உயர்ந்தவர் எவரும் இல்லை' என்று ஒருவர் தம்மைத்தாமே உயர்த்திக்கொள்வது உயர்ந்த கோட்பாடாகாது; நல்லறம் அறிந்த பெரியோர், தம்மை அருமையானவர் என்று கருதிப் பெருமைக்கு உரியவர் என்று ஏற்றுக்கொள்வதே ஒருவர்க்கு உயர்வு. 165

நளிகடல் தண்சேர்ப்ப! நாள்நிழல் போல
விளியும் சிறியவர் கேண்மை;-விளிவின்றி
அல்கு நிழல்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு. 166

மன்னர் திருவும் மகளிர் எழில்நலமும்
துன்னியார் துய்ப்பர்; தகல்வேண்டா;-துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழைதங்கண் சென்றார்க் கொருங்கு. 167

தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்;-பெரிய
உலவா இருங்கழிச் சேர்ப்ப!யார் மாட்டும்
கலவாமை கோடி உறும். 168

கல்லாது போகிய நாளும், பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்,-ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலும் உரைப்பின்
படாஅவாம் பண்புடையார் கண். 169

பெரியார் பெருமை சிறுதகைமை; ஒன்றிற்(கு)
உரியார் உரிமை அடக்கம்;-தெரியுங்கால்
செல்வம் உடையாரும் செல்வரே தன்சேர்ந்தார்
அல்லல் களைப எனின். 170

குளிர்ந்த பெரிய கடற்கரை நாடனே! தாழ்ந்தோரது நட்பு முற்பகல் நிழல்போல் வரவரக் குறைந்து மறையும்; தொன்றுதொட்டு வரும் புகழாளரது நட்போ மறையாமல் பிற்பகல் நிழல்போல் போகப் போக நீண்டு நீண்டு வளரும். 166

அடர்ந்து தளிர் கொண்டு தாழ்ந்திருக்கும் குளிர்ந்த மரங்களெல்லாம் தம்மை யடைந்தார்க்கு ஒருசேர இடம் தரும். அரசரது செல்வத்தையும் மகளிரின் அழகு நலத்தையும் அடைந்தவர் நுகர்வர். இதில் தடையில்லை. 167

வற்றாத நீண்ட பெரிய நீர்க்கழிகளையுடைய கடற்கரை நாடனே! தெளிவுபட ஆராயும் அறிவிலாரையும் கூடியபின் பிரிவதென்றால் பெரிய பிரிவுத் துன்ப நோய் வருத்தும். எனவே, எவரிடமும் கூடாதிருப்பது கோடி நன்மையாகும். 168

நல்ல நூலைக் கற்காது வீணாகிய நாளும், பெரியோரிடம் சென்று பழகாதொழிந்த நாளும், இயன்றவற்றைப் பிறர்க்கு உதவாது கழிந்த நாளும், சொல்லப்போனால், நல்ல பண்பாளரிடம் காணப்படா. 169

பெரியவர்கட்குப் பெருமை பணிவு. உயர்ந்த பொருள் ஒன்றிற்கு உரியவரின் உண்மையான உரிமை அடக்கமே. ஆராயுங்கால், செல்வம் பெற்றவரும், தம்மை அண்டினவரது வறுமைத் துயரை நீக்குவார் எனில் உண்மையான செல்வராவர். 170

18. நல்லினஞ் சேர்தல்

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வும்-நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயில்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு. 171

அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். 172

அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியும் கேடும்
உடங்குடம்பு கொண்டார்க் குறலால்-தொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க அம்மாஎன் நெஞ்சு. 173

இறப்ப நினையுங்கால் இன்னா தெனினும்
பிறப்பினை யாரும் முனியார்—பிறப்பினுள்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின். 174

ஊர்அங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்;-ஒரும்
குலமாட்சி இல்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. 175

18. நல்லார் கூட்டுறவை நாடுதல்

வெயில் ஏறியதும் புல்லில் இருந்த பனி விட்டுநீங்கிளுற் போல, அறியாப்பருவத்திலே அடங்காத தீயவருடன் கூடி முறையற்ற செயல் புரிந்துவந்த தீயொழுக்கம், முறை யறிந்த நல்லினத்தோடு சேர்ந்து பழக விலகிவிடும். 171

நல்லறவழியை நாடி யறிக. எமனுக்கு அஞ்சித் தீவினை செய்யற்க. பிறர் சொல்லும் கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்க. வஞ்சகக் குணம் வராது தடுக்க. தீவினை செய்வாரது தொடர்பை வெறுத்திடுக பெரியோர் வாய்மொழியை என்றும் பெற்றுப் பின்பற்றுக. 172

கூடியவரைப் பிரிதலும் கொடிய பிணியும் சாவும் உடம்பு பெற்றவர்க்கு உடனுக்குடன் உண்டாவதால், ஆராயத் தொடங்கிப் பிறவி கொடியதுஎன்று உணரவல்ல பேரறிவாளரை என் மனம், அம்மாடி! மிகவும் சேர்வதாகுக. 173

மிகவும் எண்ணிப் பார்க்கின், பிறவி துன்பமானது என்றாலும், இந்தப் பிறவியில் பண்பு மிக்க உள்ளமுடைய பெரியார்களோடு என்றும் நட்புகொண்டு கூடியிருக்கப் பெறின், பிறவியை எவரும் வெறுக்கார். 174

ஊரிலுள்ள கழிவுநீர் வேறொரு பெரிய தூய நீரோட்ட இடத்தை அடைந்தபோது, கழிவு நீர் என்ற இழிந்த பேரும் நீங்கி, தூய தெய்வ நீர் எனப்படும். குடிப்பெருமை யில்லாத கீழோரும், நன்மாண்புடைய நல்லோரைச் சேர்ந்தால், மலைபோல் பெருமையால் உயர்ந்து தோன்றுவர். உணர்வீராக! 175

ஒண்கதிர் வாள்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்;
குன்றிய சீர்மையர் ஆயினும் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின். 176

பாலோ டளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் நிறம்தெரிந்து தோன்றாதாம்;-தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து. 177

கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஒல்காவே ஆகும் உழவர் உழுபடைக்கு;
மெல்லியரே ஆயினும் நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம். 178

நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தம்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்;-கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினம் சேரக் கெடும். 179

மனத்தால் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்;-புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால். 180

உயர்ந்த அழகிய இடமகன்ற விண்ணிலே வெண்கதிர் வீசும் விளக்கமுடைய வெண்ணிலாவின் நடுவே அமைந்து இருப்பதால், 'முயல்' என அழைக்கப்படும் கறுப்புக் களங்கமும் மக்களால் வணங்கப்படுகிறது. அதுபோல, ஒருவர் குறைந்த பெருமை யுடையவரானாலும், மலையன்ன பெரியாரின் நட்பைக் கொண்டால் நிறைந்த பெருமை பெறுவர். 176

பாலோடு கலந்த நீர் பாலாகுமே தவிர, நீரின் நிறம் தனியாய்த் தெரிந்து காணப்படாது. அதுபோல், ஆராயுங்கால், சிறந்த பெரியாரின் பெருந்தன்மையைச் சார்ந்தால் சிறியாரின் சிறுமைத்தனமும் தெரியாது மறையும். 177

பெரிய கொல்லைக் காட்டில் அடிமரக் கட்டையோடு சேர்ந்துள்ள புற்கள் உழவர் உழும் கலப்பைக்கு அசைய மாட்டா. மெலிந்தவரானாலும் நல்லினத்தாரைச் சார்ந்து உள்ளவர்பால் பகைவரின் சினம் செல்லாது. 178

நன்செய் நிலத்தின் நல்ல வளத்தால் நன்கு வளரும் நெற்பயிரேபோல், தாம் பிறந்த குடியின் பெருமையால் உயர்ந்தோர் உருவாகின்றனர். கப்பலின் கட்டமைப்பைக் கொடிய புயற்காற்று வீசிக் கட்டழிப்பதுபோல, ஒருவரின் பெருந்தன்மை தீய கூட்டத்தைச் சார்வதால் கெட்டழியும். 179

அறுவடை செய்யப்பட்ட கொல்லைக்காட்டில் தீவைக்கப் பட்டால், அதைச் சார்ந்து அருகேயுள்ள மணம் மிக்க சந்தன மரமும் வேங்கை மரமுங்கூட வெந்து போகும். அதுபோல, ஒருவர், மனத்திலே களங்கம் இல்லாதவரா யினும் தாம் சேர்ந்துள்ள தீய கூட்டுறவால் இகழப்படுவர். 180

19. பெருமை

ஈதல் இசையா திளமைசேண் நீங்குதலால்
காத லவரும் கருத்தல்லர்;—காதலித்(து)
'ஆதும்நாம்' என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள். 181

'இற்சார்வின் ஏமாந்தேம்; ஈங்கமைந்தேம்' என்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்;—அச்சார்வு
நின்றன போன்று நிலையா எனவுணர்ந்தார்
என்றும் பரிவ திலர். 182

மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மின்;— அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறும்; காரணம்
இன்றிப் பலவும் உள. 183

உறைப்பருங் காலத்தும் ஊற்றுநீர்க் கேணி
இறைத்துணினும் ஊராற்றும் என்பர்; - கொடைக்கடனும்
சாஅயக் கண்ணும் பெரியார்போல் மற்றையார்
ஆஅயக் கண்ணும் அரிது. 184

உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்
கல்லூற் றுழிஊறும் ஆறேபோல்;—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை. 185

19. பெருந்தன்மை

வறுமையால் ஒன்றும் உதவமுடியாது போக, இளமை நெடுந்தொலைவு விட்டு நீங்கியதால் காதல்கொண்டிருந்த பெண்டிரும் கருத்து செலுத்தாது விட்டனர்; எனவே, நாம் இன்னும் காதலித்து வாழ்வோம் என்னும் ஆவலைத் துறந்து மேல்நிலைக்குச் செல்லமுயல்வதே சிறந்த செயல் போலும் ! 181

இல்லறத்தைச் சார்ந்திருந்ததால் இன்புற்றோம் - ஈண்டு எல்லாம் நிறைவுற்றோம்-என்று கருதிப் பின்வருவதை மறந்து நடப்பர் அறிவிலிகள். அந்தவாழ்வு உள்ளதுபோல் தோன்றி நிலைக்காது போகும் என உணர்ந்த அறிஞர்கள் என்றும் துன்புறுதல் இல்லை. 182

மறுவுலக வாழ்விற்கு விதையாகிய நல்லறத்தை மயக்கமின்றிச் செய்து குறைவுபடாமல் நீவிர் அறிவுடையவராய் வாழ்வீராக! (ஏனெனில், இவ்வுடல்) நின்றவிடத்தில் நின்றபடியே நிலைமை மாறிப் போகும்; மற்றும் ஒரு காரணமும் தெரியாமலேயே பல்வகைச் சிக்கல்களும் உண்டாகும். 183

மழை யற்ற காலத்தும் ஊற்று நீருடைய கேணி சிறுக இறைத்து உண்டாலும் ஊர் முழுவதையும் காக்கும் என்று கூறுவர். பிறர்க்குக் கொடுக்கும் கடமையையுங் கூட, செல்வம் குறைந்த போதும் உயர்ந்தோர் செய்வதுபோல், செல்வம் உண்டானபோதும் மற்ற கீழ்மக்கள் ஆற்றுதல் இல்லை. 184

மிகுந்த நீரைத் தந்து உலகினரை உண்பித்து, நீர் அற்றபோதும் தோண்டும் ஊற்றுக்குழியில் நீர் ஊறி உதவும் ஆற்றைப் போல, உயர்ந்தோர் செல்வத்தைப் பலர்க்கும் பகிர்ந்தளித்து, செல்வம் வற்றிய போதும் சிலருக்காயினும் உதவிபுரிந்து செய்யவேண்டிய நற் கடமைகளைச் செய்வர். 185

பெருவரை நாட! பெரியார்கண் தீமை
கருநரைமேல் சூடேபோல் தோன்றும்; - கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினும் சிறியார்மேல்
ஒன்றானும் தோன்றாக் கெடும். 186

இசைந்த சிறுமை இயல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம்;—அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கண்
பகையேயும் பாடு பெறும். 187

மெல்லிய நல்லாருள் மென்மை; அதுவிறந்(து)
ஒன்னாருள் கூற்றுட்கும் உட்குடைமை; எல்லாம்
சலவருள் சாலச் சலமே; நலவருள்
நன்மை வரம்பாய் விடல். 188

கடுக்கி ஒருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினும் மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்கம் இலாதவர் தூய மனத்தார்
விளக்கினுள் ஒண்சுடரே போன்று. 189

முன்துத்தும் துத்தினை நாளும் அறம்செய்து
பின்துத்துத் துத்துவர் சான்றவர்;—அத்துத்து
முக்குற்றம் நீக்கி முடியும் அளவெல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும். 190

பெரிய மலைநாட்டனே! பெரியோரது குற்றம், பெரிய காளைமாட்டின்மேல் போட்ட சூட்டைப்போல் நன்கு தெரியும். அந்தப் பெரிய காளையைக் கொன்றதுபோன்ற கொடுமைகள் புரியினும் இழிந்தவர்மேல் ஒரு பழியும் தெரியாது மறைபடும். 186

சிறுமை பொருந்திய நற்பண்பு இல்லாதவரிடம் ஒட்டி உறவாடும் வரையும் துன்பமேயாம். கலக்கத்திற்குரிய தீமைகளை விளையாட்டாகவும் செய்ய விரும்பாத நல் லறிஞரிடம் கொண்ட பகையும் பெருமை பெறும். 187

மென்மைத்தன்மையுடைய நல்லவரிடம் மென்மைத்தன் மையும், அது கடந்து நடக்கும் பகைவரிடம் எமனும் அஞ்சும்படியான கடுமை கலந்த வன்மையும், எல்லாமே வஞ்சகமாய் நடப்பவரிடம் மிகவும் வஞ்சகத் தன்மையும், நல்லவரிடம் நன்மையின் உயர் எல்லையும் காட்டுவீராக! 188

கலக்கம் இல்லாத திண்ணியர், ஒருவன் தம்மைக் கடுகடுக்கச்செய்து கொடிய கோள் சொல்லி மயக்கினாலும், மன மாறுபாடு ஒருசிறிதும் இன்றி, விளக்கில் எரியும் விளக்கமான சுடரேபோல் விளங்கித் தூய்மையுடைய உள்ளத்தராய்த் தோன்றுவர். 189

முன்னால் உண்ணத்தக்க சிறப்புணவை நாடோறும் பிறர்க்கு அளித்துவிட்டு, பின் எஞ்சியுள்ள உணவை உயர்ந்தோர் உண்ணுவர். அங்ஙனம் உணவுண்பது, காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும் போக்கி முடிந்த அளவெல்லாம் அவரைத் துயரத்தினின்றும் விலக்கிக் காக்கும். 190

20. தாளாண்மை

கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுப; [போல்
வாளாடு கூத்தியர் கண்போல் தடுமாறும்
தாளாளர்க் குண்டோ தவறு. 191

ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும்;
வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்தான்
தாழ்வின்றித் தன்னைச் செயின். 192

உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியும் தின்னும்;—அறிவினால்
கால்தொழில் என்று கருதற்க; கையினால்
மேல்தொழிலும் ஆங்கே மிகும். 193

இசையா தெனினும் இயற்றிஓர் ஆற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை;—இசையுங்கால்
'கண்டல் திரையலைக்கும் கானலம் தண்சேர்ப்ப!
பெண்டிரும் வாழாரோ மற்று. 194

நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை;-தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவங்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம். 195

20. முயற்சி உடைமை

கொள்ளத்தக்க நீரை மிகவும் தன்னிடத்திலேயே வைத்திராமல் வெளிவிடும் குளத்தின் கீழ்மட்டத்தில் உள்ள பசுமையான பயிர்போல, முயன்று உழைக்கும் தலைமைச் சுற்றத்தார் கொடுப்பதை உண்டு மற்ற சுற்றத்தார்கள் துன்பின்றி வாழ்வர். வாள் சுழற்றி ஆடும் கூத்தாட்டு மகளிரின் கண் சுழல்வதுபோல் சுழன்று உழைக்கும் அம் முயற்சியாளர்க்குத் தவறிப்போகும் செயலும் உண்டோ ? 191

அசைகின்ற கொம்பாக வழியிலே நின்றிருந்த இளஞ் சிறுமரம், வயிரம் பாய்ந்த பெருமரமான போது யானையையும் கட்டக்கூடிய தறியாக அமையும். ஒருவன் தான் தன்னைத் தாழச்செய்யாது முயன்று வளர்த்துக்கொண்டால், அவனது வாழ்வும் அந்த மரம்போலவே உறுதிபெறும். 192

வலிய புலி பெரிய இறைச்சி யுணவு கிடைக்காமல் ஒரு நாளைக்குச் சிறிய தேரையையும் பிடித்துத் தின்னும். எனவே, நுமது அறிவை நோக்க, கிடைத்துள்ள தொழில் காலால் செய்யும் அற்பத் தொழில் என்று எண்ணற்க; கைத்திறமையால் செய்யும் மேலான தொழிலும் அங்கே கிடைக்கக் கூடும். 193

தாழையை அலைகள் மோதும் சோலைகளையுடைய அழகிய குளிர்ந்த கடற்கரை நாடனே ! ஒன்று எளிதில் முடியாதாயினும் ஒருவகைத் திறமையுடன் முயன்று முடித்துக் கலங்காது நிற்பதே ஆண்மையாம் ! எளிதில் முடியுமானால் மற்றபடி பெண்களும் செய்து வாழ்வார்களே ! 194

உயர் குலம் என்றும் இழிகுலம் என்றும் சொல்லளவே தவிரப் பொருள் அளவில் ஒன்றுமில்லை. பழம்பெருஞ் சிறப்புடன், நல்ல செல்வம் ஒன்று போதுமா ? தவம், கல்வி, முயற்சி என்ற இவற்றுலெல்லாந்தான் உயர்குடிப் பெருமை உளதாகும். 195

ஆற்றும் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார்;-ஊக்கம்
உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. 196

சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழ்ஊன்றி யாங்குக்
குதலைமை தந்தைகண் தோன்றின்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். 197

ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ - யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்தாள்
அரிமா மதுகை யவர். 198

தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்றம் இழந்தாஅங்(கு)-ஓங்கும்
உயர்குடி யுள்பிறப்பின் என்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை இல்லாக் கடை. 199

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்;-கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும். 200

நல்லுணர்வாளர் செயல் முடிக்கும் வரையும் தம் அறிவுத்திறமையை வெளியாக்காது உள்ளடக்கி, தம் மன ஊக்கத்தையும் சொல்லிக்கொண்டிருக்க மாட்டார்கள். பிறரது ஊக்கத்தை அவரது உறுப்புக்களின் குறிப் பினலேயே ஆராய்ந்தறியும் அறிவுடையவரின் நோக்கத் தின்படி உலகம் நடக்கும். 196

செல்லால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை மற்ற அதன் விழுதுகள் தூண்களாய் நின்று தாங்கிக் காப்பது போல, தந்தையிடம் தளர்ச்சி காணப்படின், அது, அவன் பெற்ற மைந்தன் முயன்று உழைத்து மறைக்க நீங்கும். 197

யானையின் புள்ளி பொருந்திய முகத்தைப் புண்படுத்தக் கூடிய கூரிய நகங்களையும் வலிய கால்களையும் உடைய அரிமா (சிங்கம்) போன்ற வலிமை (உறுதி) உடைய வர்கள், இல்லறத்தில் இருந்துகொண்டு தாழ்வுபட ஒரு பொருளும் இல்லாமல் வறுமையால் இறப்பதாயினும், பெருமை குன்றி இழிவுதரும் செயல் செய்வரோ ? 198

இனிய கரும்பு ஈன்ற திரண்ட காலோடும் பிடரி மயிர் போன்ற சோலையோடுங் கூடியதான கருப்பம் பூ, தேன் போல் மணக்கும் மணத்தை இழந்தாற்போல, தமது புகழ்ப் பெயரைப் பொறித்து நிலைநாட்டும் பெரிய ஆண்மைக்குரிய முயற்சிகளை ஒருவர் செய்யாதபோது, உயர்ந்த குடியில் பிறந்ததனல் என்ன பயன் ? 199

பெரிய முத்தரைய மன்னர் போன்ற செல்வர்கள் மிகவும் மகிழ்ந்து அளிக்கும் பொரியல் வகையோடு கூடிய விருந்துணவை அற்பர்களே ஆர்வத்துடன் உண்பர். பொரியல்களின் பேரும் அறியாத உழைப்பாளர் மிகவும் விரும்புதற்குரிய தமது உழைப்பால் பெற்ற நீருணவும் (நீராகாரமும்) அமிழ்தமாகும். 200

நட்பியல்

21. சுற்றம் தழால்

வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகன்கண்டு தாய்மறந் தாஅங்(கு)
அசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும். 201

அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்கட்
கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்—
பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன். 202

அடுக்கல் மலைநாட ! தன்சேர்ந் தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர்;—அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு. 203

உலகறியத் தீரக் கலப்பினும் நில்லா;
சிலபகலாம் சிற்றினத்தார் கேண்மை;—
நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்கம் இலாளர் தொடர்பு. 204

இன்னர் இனையர் எமர்பிறர் என்னும்சொல்
என்னும் இலராம் இயல்பினால்—துன்னித்
தொலைமக்கள் துன்பம்தீர்ப் பாரேயார் மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார். 205

நட்பியல்

21. சுற்றத்தாரைத் தழுவிக் காத்தல்

தாயானவள் கருக்கொண்ட மசக்கை நோயினையும் கருவைச் சுமக்குங் காலத்துத் துன்பத்தினையும் குழந்தையைப் பெறும்போது உண்டாகும் வலியினையும் மகனைத் தொடையின்மேல் வைத்துப் பார்க்குங்கால் மறந்து விடுவதுபோல, ஒருவன் தளர்ச்சியால் தான் உற்ற துன்பம், நலம் விசாரிக்கும் தன் நல்ல உறவினரைக் காணுங்கால் நீங்கப்பெறுவான். 201

வெப்பம் மிக்க காலத்தில் தன்னை அடைந்தவர்க் கெல்லாம் நிழல்தரும் நெடுமரம்போல எவரையும் ஒரு நிகராகக் கருதிக் காத்து, பழுத்த மரம்போல் தன்னிடம் பலரும் பயன் நுகர, தனக்குப் பற்றுமையால் தான் வருந்தியும் உயிர் வாழ்வதே நல்ல ஆண் மகனுக்கு உரிய கடமையாகும். 202

அடுக்கியதுபோல் அமைந்துள்ள மலைகள் நிறைந்த நாடனே! தம்மை அடைந்தவரை எடுத்து ஆதரிக்க மாட்டோம் என்று பெரியவர் கூறார். மேலும் மேலும் திண்மையான காய்கள் பலப்பல காய்த்தாலும் அந்தத் தன் காய்களைத் தாங்க முடியாத கிளைகள் இல்லை. 203

சிறுமையுடையவரின் நட்பு முதலில் உலகம் அறியும்படி முற்றும் கலந்திருப்பதுபோல் காணப்படினும் பின்னர் நிலைக்காது; சில நாட்களேயிருந்து மறைந்துவிடும். என்றும் தளராத நல்லோரது நட்போ, தம்நிலையிலிருந்து மாறாது ஒழுகும் தவத்தோர் நல்வழியடையத் தவநெறியில் நிலைத்திருப்பதுபோல் நிலைத்திருக்கும். 204

இவர் இத்தகையவர், இவர் இவ்வளவு உடையவர், இவர் எம் உறவினர், இவர் அயலார் என்று பாகுபடுத்திப் பேசும் சொல் ஒருசிறிதும் இல்லாத உயர்ந்த பண்புடன் பொருந்தி, தமக்கு அப்பாற்பட்ட மாந்தரின் துன்பத்தையும் போக்குப வரே, எவர்க்குள்ளும் மேன்மக்களாகக் கருதப் பெறுவர். 205

பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலின்
உப்பிலிப் புற்கை உயிர்போல் கிளைஞர்மாட்(டு)
எக்கலத் தானும் இனிது. 206

நாள்வாய்ப் பெறினும்தம் நள்ளாதார் இல்லத்து
வேளாண்மை வெங்கருணை வேம்பாகும்;-கேளாய்!
அபரானப் போழ்தின் அடகிடுவ ரேனும்
தமராயார் மாட்டே இனிது. 207

முட்டிகை போல முனியாது வைகலும்
கொட்டிஉண் பாரும் குறடுபோல் கைவிடுவர்;
சுட்டுக்கோல் போல எரியும் புகுவரே
நட்டார் எனப்படு வார். 208

நறுமலர்த் தண்கோதாய்! நட்டார்க்கு நட்டார்
மறுமையும் செய்வதொன் றுண்டோ?-இறுமளவும்
இன்புறுவ இன்புற் றெழீஇ அவரோடு
துன்புறுவ துன்புறுக் கால். 209

விருப்பிலார் இல்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருணை வேம்பாம்; விருப்புடைத்
தன்போல்வார் இல்லுள் தயங்குநீர்த் தண்புற்கை
என்போ டியைந்த அமிழ்து. 210

பொன் கலத்தில் இட்ட - புலிநகம் போன்ற வெண்மை யான சோற்றைச் சர்க்கரையோடும் பாலோடும், உள்ளன் பில்லாதவர் கையிலிருந்து பெற்று உண்பதைக் காட்டிலும், உப்பில்லாத புல்லரிசிக் கஞ்சியை உயிர்போன்ற உண்மை உறவினரிடத்திலிருந்து எந்தக் கலத்தில் (பாத்திரத்தில்) பெற்று உண்டாலும் இனிக்கும். 206

தம்மொடு பொருந்தாதவரது வீட்டில் விருந்தோம்பலாக விருப்பத்திற்குரிய பொரியல்களோடு கூடிய சிறப்புணவு நேரத்தோடு கிடைக்கப்பெற்றாலும் அது வேப்பங்காயாகும். மேலும் கேட்பாயாக ! நேரங்கெட்ட நேரத்தில் கீரையுணவு இட்டாலும் தம்மைச் சேர்ந்தவரிடத்திலிருந்து கிடைப்பது இனிக்கும். 207

நாடோறும் சலிக்காது சம்மட்டியைப் போல அதட்டி மிரட்டி உண்டுவந்தவரும், பொருளை நெருப்பில் இட்டு நீங்கிவிடும் குறடுபோல் துன்பக் காலத்தில் நீங்கிவிடுவர். உண்மை நண்பர் எனப்படுவார், பொருளோடு நெருப்பிலே நிற்கும் உலையாணிக்கோல்போல, நண்பருடன் தாமும் நெருப்பொத்த துன்பத்துள் தோய்ந்திருப்பர். 208

மணம் மிக்க குளிர்ந்த மலர்மாலை உடையவளே ! நண்பர்க்கு நண்பர் இறுதிவரையும் இன்புறவேண்டிய வற்றுள் எழுச்சிகொண்டு இன்புற்று அவருடன் துன்புற வேண்டியவற்றுள் துன்புறுவிடின், மறுவுலகத்திற்காகச் செய்யத்தக்க நற் செயல் வேறொன்று உளதோ? 209

விரும்பாதவர் வீட்டில் வேறுபட அமர்ந்து உண்கிற - பூனைக்கண்போல் பளபளக்கும் விருப்பத்திற்குரிய கறிக ளோடு கூடிய சிறப்புணவும் வேப்பங்காய் போன்றதாம். விருப்பமுடைய தம்மொத்தவரது வீட்டிலே பெற்ற தெளிந்த குளிர்ந்த புல்லரிசி நீர்க்கஞ்சி, எலும்பையும் உயிர்ப்பிப்பதற்கேற்ற அமிழ்தமாம். 210

22. நட்பாராய்தல்

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ்
ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே;—குருத்திற்(கு)
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு. 211

இற்பிறப் பெண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடை கொண்டமை அல்லது—பொற்கேழ்
புனல்ஒழுகப் புள்இரியும் பூங்குன்ற நாட!
மனம்அறியப் பட்டதொன் றன்று. 212

யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்!—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்த
வேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 213

பலநாளும் பக்கத்தார் ஆயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோ டொட்டார்;—பலநாளும்
நீத்தார் எனக்கை விடல்உண்டோ தம்நெஞ்சத்(து)
யாத்தாரோ டியாத்த தொடர்பு. 214

கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி;—தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பின்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல். 215

22. ஆராய்ந்து நட்பு கொள்ளுதல்

பொருளுணர்ந்து கற்றுத் தெளிந்த நல்லோர் நட்பு, கரும்பை நுனிக்குருத்திலிருந்து அடிநோக்கித் தின்பது போல் வர வர என்றும் இனிக்கும். என்றும் இனிய பண்பு இல்லாதவரது நட்போ, குருத்திற்கு எதிரிலிருந்து - அதாவது, அடியிலிருந்து நுனி நோக்கித் தின்பதுபோல் வரவர இனிமை குன்றும். **211**

(பொன் கொழித்துப்) பொன்னிறத்துடன் அருவி ஓட (அந்த ஒலி கேட்டுப்) பறவைகள் பறந்தோடும் பொலிவு மிக்க மலைநாடனே! ஒருவரது உயர்குடிப் பிறப்பை எண்ணி, அவர் நடுவிலே மாறுபடமாட்டார் என்ற ஒரு நற்காரணத்தால் நட்புகொள்வது தவிர, மற்றபடி, ஒருவரது உள்மனம்உண்மையாய்அறியப்படக்கூடிய ஒன்றன்று. **212**

யானை போன்றவரது நட்பை விலக்கி நாய் போன்றவரது நட்பைப் பொருந்திக் கொள்ளவேண்டும். ஏனெனில், யானையானது பலநாள் அறிந்து பழகியும் பாகனையே கொல்வதுண்டு. நாயோ, (தனது தலைவன் தன்மேல்) எறிந்த வேல் உடம்பிலே பாய்ந்திருக்கவும் வாலைக் குழைத்து அன்புகாட்டும். **213**

பலநாளும் பக்கத்திலேயிருந்து பழகினாலும் சிலநாளாவது மனத்தோடு பொருத்தப்படாதவரோடு பெரியோர் பொருந்தார். தம் மனத்தோடு பொருந்தியவரோடு பெருந்திய நட்பை, அவர் பலநாளாய்ப் பிரிந்திருக்கிறார்என்பதற்காகப் பெரியோர் கைவிடுதல் உண்டோ? (இல்லை) **214**

மரக்கிளையில் நிலையாக மலர்ந்திருக்கும் பூக்களைப்போல, பிறகு குன்றாது என்றுமே அகம் மலர்ந்து நட்புகொண்டது நட்புகொண்டதாகவே இருப்பதுதான் உண்மையான நட்பு ஆளுதலாகும். தோண்டப்பட்ட குளத்திலே உள்ள தாமரை முதலிய மலர்களைப்போல முதலில் நட்பு மலர்ந்து பிறகு குன்றிவிடுபவரை விரும்புபவரும் நண்பராய்க் கொள்பவரும் இல்லை. **215**

கடையாயார் நட்பில் கமுகனையர்; ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்;—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை உடையார் தொடர்பு. 216

கழுநீருள் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்;—விழுமிய
குய்த்துவைஆர் வெண்சோறே ஆயினும்
மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய். 217

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணியர் ஆயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னும்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும்
செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு. 218

தெளிவிலார் நட்பின் பகைநன்று; சாதல்
விளியா வருநோயின் நன்றால்;—அளிய
இகழ்தலின் கோறல் இனிதே;மற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று. 219

மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு. 220

நட்பு கொள்வதில், கடைப்பட்டவர், பாக்கு மரம்போல் மிக்க உதவியும் உழைப்பும் தேவைப்படுவர். இடைப் பட்டவர் தென்னைபோல் ஓரளவு உதவியும் உழைப்பும் எதிர்பார்ப்பர். முதன்மையான பண்பாளர் பழைய நண்பருடன் கொள்ளும் தொடர்பு, (நட்டதைத் தவிர வேறு உதவி வேண்டாத) எண்ணுதற்கரிய சிறப்புடைய பனை மரம் போன்று, நட்பு கொண்டபோது இருந்த நிலையிலேயே என்றும் இருந்து சிறக்கும். 216

கழுநீரில் கழுவி ஆக்கிய கரிய கீரை உணவாயினும், ஒருவன் சிறந்த அன்புடன் கிடைக்கப்பெற்று உண்டால் அஃது அமிழ்தமாம். உயர்ந்த தாளிதம் உடைய துவையல் முதலியவற்றோடு கூடிய வெண்மையான சோறுயிருப் பினும், பொருந்தாதாரின் கையிலிருந்து உண்ணுதல் கசக்கும் எட்டிக்காயாம். 217

நாயின் காலில் மிக அண்மையிலுள்ள சிறிய விரல்கள் போல மிகவும் அருகிலிருந்து பழகுபவர் ஆனாலும், ஈயின் கால் அளவுகூடச் சிறு உதவியும் செய்யாதவரது நட்பினால் பயன் என்ன? (தொலைவிலிருந்து நீரைக் கொண்டு வந்து) நிலத்தை விளைவிக்கும் வாய்க்கால் போன்றவரின் நட்பைத் தொலைவில் தேடிச் சென்றாயினும் பெற வேண்டும். 218

தெளிவில்லாதாரின் நட்பினும் பகை நல்லது; நீங்காமல் நீடிக்கின்ற நோயைவிட இறப்பே மேல்; அளிந்துநெளியும் படி ஒருவரை இகழ்வதனினும் கொல்லுதல் இனியதாம்; அடுத்து, இல்லாதவற்றைக் கூறிப் பொய்யாகப் புகழ் வதனினும் திட்டுதலே நல்லதாம். 219

பலரோடு பலநாள் கலந்து பழகிப் பார்த்துப் பொருத்த மறிந்து, ஒரு பொருளாக மதிக்கத்தக்கவரது நட்பையே கொள்ளவேண்டும்; ஏனெனில், கடித்து உயிர்போக்கும் பாம்போடாயினும் கூடிப் பிறகு பிரிவதென்பது துன்பமே! 220

23. நட்பிற் பிழை பொறுத்தல்

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக் குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ் பூவிற்கும் உண்டு. 221

செறுத்தோ றுடைப்பினும் செம்புனலோ டூடார்
மறுத்தும் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்;
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு. 222

இறப்பவே தீய செயினும்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ?—
நிறக்கோங்(கு)
உருவவண் டார்க்கும் உயர்வரை நாட !
ஒருவர் பொறைஇருவர் நட்பு. 223

மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப !
விடுதற் கரியார் இயல்பிலரேல் நெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ. 224

இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும்;—
பொன்னொடு
நல்லில் சிதைத்ததீ நாடொறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால். 225

23. நண்பரது குற்றத்தைப் பொறுத்தல்

நல்லவர் என்று எண்ணித் தாம் முதலில் மிகவும்விரும்பி நட்பு கொண்டவரை, பிறகு நல்லவர் அல்லர் என்று அறியினும், அவரது குற்றத்தை உள்ளேயே அடக்கிக் கொள்ளவேண்டும்; ஏனெனில், நெல்லுக்கும் உமி உள்ளது; நீருக்கும் நுரை உள்ளது; பூவுக்கும் அழகற்ற புற இதழ் உள்ளது. 221

தண்ணீரை விரும்பி நோக்கி வாழும் உழவர், வயலில் மடைகட்டுந்தோறும் உடைத்துக் கொண்டாலும் அந்தச் செவ்விய நீரிடம் சினங்கொள்ளார்; மீண்டும் நீரை மடக்கிக் கட்டுப்படுத்துவர்; அதுபோல, தாம் விரும்பிப் பெற்றவரது நட்பை, அவர் வெறுக்க வெறுக்கக் குற்றம் புரியினும் நல்லோர் விடாது பொறுப்பர். 222

நல்ல நிறமுடைய கோங்க மலரிலே அழகிய வண்டுகள் ஒலிக்கும் உயர்ந்த மலைநாடனே! மிகவும் தீமைசெய்யினும் தம் நண்பரைப் பொறுத்தல் தக்கதொரு செயலேயல்லவா? ஒருவரது பொறுமையாலேயே இருவரது நட்பு நிலைக்கும். 223

மடிந்து விழும்அலைகள் கொழிக்கும் உயர்ந்த ஒளியுடைய முத்துக்களும் மிக்கவேகமுடைய மரக்கலங்களும்கரையிலே மோதியலையும் கடல் நாடனே ! விடமுடியாதபடி நட்பு செய்யப் பெற்றவர் நற்பண்பு இல்லாதவரானால், அவர் நமது உள்ளத்தை எரிக்க மூட்டிய நெருப்பாவார். 224

பொன்னுடன் நல்ல வீட்டையும் முன்னொருநாள் பற்றி எரித்துவிட்ட நெருப்பை நாம் நாள்தோறும் நாடி நம் வீட்டில் சமையலுக்காக வளர்ப்பதால், துன்பம் செய்யினும் விடத்தகாத நண்பரைப் பொன்னேபோல் போற்றி வைத்துக் கொள்ளவேண்டும். 225

இன்னு செயினும் விடுதற் கரியாரைத்
துன்னுத் துறத்தல் தகுவதோ?—துன்னரும்சீர்
விண்குத்தும் நீள்வரை வெற்ப! களைபவோ
கண்குத்திற் றென்றுதம் கை? 226

இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னு செயினும்
கலந்து பழிகாணுர் சான்றோர்;—கலந்தபின்
தீமை எடுத்துரைக்கும் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரின் கடை. 227

ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினும்
நோதக்க தென்னுண்டாம் நோக்குங்கால்—
காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட!
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று. 228

தமர்என்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமர்அன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமர்அன்மை
தம்முள் அடக்கிக் கொளல். 229

குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல்—நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக. 230

அடைதற்கரிய சிறப்புடைய-விண்ணை முட்டும் நீண்ட மூங்கில்கள் நிறைந்த மலைநாடனே! துன்பம் செய்தாலும் கைவிட முடியாதவரைச் சேர்க்காது விலக்குதல் தகுமோ? கண்ணைக் குத்திவிட்டதென்று தம் கையையே எவரேனும் வெட்டிவிடுவரோ? 226

விளங்கும் நீரையுடைய குளிர்ந்த கடற்கரைத் தலைவனே! பெரியோர் கலந்து , பழகியபின் நண்பரிடம் குற்றம் காணமாட்டார் அவ்வாறு பழகியபின் குற்றம் எடுத்து கூறுகிற-உறுதியான அறிவு இல்லாத அற்பர்கள், தாமும் அந்த நண்பரைப் போலவே கடைப்பட்டவரர்வர். 227

ஒலிக்கும் அருவி ஓடும் மலைநாடனே! அயலார் செய்தது மிகவும் தீயதே என்றாலும், பார்க்குமிடத்து, அதற்காக வருந்துவது என்னவேண்டிக் கிடக்கிறது? எனவே, நம் மிடம் அன்புமிக்கவர் தவறிச் செய்த தீமையும் நெஞ்சிலே நின்று ஆராயப்படுங்கால் நல்லதேயாம் ! 228

தம்மைச் சேர்ந்தவர் என்று நம்பித் தம்மால் முன்பு நட்பு கொள்ளப்பட்டவரை, தம்மைச் சேர்ந்தவர் அல்லர் என்று பின்பு தாம் அறியின், அவரைத் தம் உறவினரினும் நன்கு மதிப்பதுபோல் வெளிக்குக் காட்டி, அவர் தம்மவர் அல்லர் என்பதைத் தமக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்க. 229

ஒருவனை நண்பனுக்கொண்டபின் அவனது குற்றத்தை யும் மற்ற குணத்தையும் யான் ஆராய்ந்து திரிவேனே யாயின், ஒலிக்கும் கடல் சூழ்ந்த இவ்வுலகம் எள்ளி நகைக் கும்படி, நண்பனது மறைச்செய்தியை (இரகசியத்தை)க் காக்காமல் வெளிவிட்டவன் அடையும் இடத்தை(நரகத்தை) யானும் அடைவேனாக ! 230

24. கூடா நட்பு

செறிப்பில் பழங்கூரை சேறணை ஆக
இறைத்துநீர் ஏற்றும் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நல்நாட!
தம்கருமம் முற்றும் துணை. 231

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம்;—மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரிலார் நட்பு. 232

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்;- நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று. 233

பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதும் செல்லாதே நந்தும்–அருகெல்லாம்
சந்தனநீள்சோலைச் சாரல் மலைநாட!
பந்தம் இலாளர் தொடர்பு. 234

செய்யாத செய்தும்நாம் என்றலும் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலும்—
மெய்யாக
இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும் அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும். 235

24. பொருந்தா நட்பு

கறுப்பான் குன்றுகளிலே பொங்கும் அருவி வீழும் நீர்வளம் மிக்க நல்ல மலை நாடனே! நல்ல கட்டமைப்பு இல்லாத பழைய கூரையின்கீழ் மழைபெய்யும்போது சேற்றைஅணையாகக் கட்டியும் ஓரிடத்தில் நீரை இறைத்து மற்றோரிடத்தில் கலங்களை (பாத்திரங்களை) ஏந்தி நீரைப் பிடித்தும் துன்புறுவதுபோலச் சிலர் தம் காரியம் கைகூடும் வரை நம் துன்பங்களில் பங்கு கொள்ளும் நண்பர் போல் நடிப்பர். 231

வெண்மையான அருவி ஓடும் மலை நாடனே! மேலோர் நட்பு உயர்ந்த பெருமையுடையதாய், மழைபோல் சிறந்த பயனளிக்கும். சிறந்த வாழ்வு வந்தபோதும் சிறப்பு அமையாத கீழோர் நட்பு, மழை வறண்டாற்போல் பயனில தாகும். 232

நுண்ணிய அறிஞருடன் பழகி நுகரும் இன்பம், விண்ணுலக இன்பம்போல் விருப்பத்திற் குரியதாகும். நுண்ணிய நூலறிவு இல்லாதவராகிய பயனிலிகளுடன் பழகுதல் நரக வேதனையுள் ஒன்றாகும். 233

பக்கங்களி லெல்லாம் நீண்ட சந்தனச் சோலைகள் நிறைந்த மலைச்சாரல் நாடனே! உண்மைப் பற்று இல்லாதவரது நட்பு முதலில் வளர்வதுபோல் தோன்றி, பின்னர், வைக்கோல் போரில் பிடித்த நெருப்பைப்போல் சிறு பொழுதும் நில்லாது மறையும். 234

செய்ய முடியாததை யாம் செய்வோம் என்று பொய்ப் பெருமை பேசுதலும் செய்யக்கூடியதைச் செய்யாமல் காலந் தாழ்த்தி நீட்டிக்கொண்டு போதலும் (ஆகிய இரண்டும்), உண்மையில் இன்புறும் நுகர்வை வெறுத்த துறவியர்க்குங்கூட அப்பொழுதே துன்புறும் நிலைமையை உண்டாக்கும். 235

ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை ஆம்பல்ஒக் கல்லா;
பெருநீரார் கேண்மைகொளினும்நீர் அல்லார்
கருமங்கள் வேறு படும். 236

முற்றல் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலால் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கும் மலைநாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு. 237

முட்டுற்ற போழ்தின் முடுகிஎன் ஆருயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வையம் நக. 238

ஆன்படு நெய்பெய் கலனுள் அதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ-தேம்படு
நல்வரை நாட! நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு. 239

உருவிற் கமைந்தான்கண் ஊராண்மை இன்மை
பருகற் கமைந்தபால் நீரளாய் அற்றே;
தெரிவுடையார் தீயினத்தார் ஆகுதல் நாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று. 240

ஒரே நீர்நிலையில் தோன்றி ஒன்றாக நீண்டு வளர்ந்த போதும், மலர்ந்த நேர்த்தியான குவளை மலரை ஆம்பல் மலர் ஒவ்வாது. அதுபோல, பெருந்தன்மையாளரின் நட்பைப் பெறினும், பெருந்தன்மை யில்லாத அற்பரின் செயல்கள் மாறுபடும். 236

ஓரளவு வளர்ச்சி யடைந்த சிறு குரங்கு, உணவுப் பொருளுடன் தன் எதிர்ப்பட்ட தந்தைக் குரங்கைக் கண்டதும், பயற்றங்காய் நெற்றைக் கண்டாற்போன்ற தன் கைவிரலால் தந்தையின் கையைக் குத்தி விரித்திட்டு அதிலுள்ள உணவைப் பறித்து உண்ணும் மலை நாடனே! ஒற்றுமை இல்லாதாரின் நட்பு இனிக்காது. 237

நண்பனுக்கு நெருக்கடி நேர்ந்தபோது விரைந்து சென்று எனது அரிய உயிரை அந்த ஒப்பற்ற ஒரே ஒரு நண்பன் கையில் ஒப்படைக்கேனே யானால், தன் நண்பன் மணந்து கொண்ட மனைவியைக் கற்பழித்தவன் செல்லும் நரகத்திற்கு, நீண்ட புகழுடைய இவ்வுலகத்தார் எள்ளி நகையாடும்படி யானும் செல்வேனாக! 238

தேன் உண்டாகும் நல்ல மலை நாடனே! நயம் அறிந்தவரின் நட்பை விட்டு அற்ப அறிவினருடன் கொண்ட நட்பு, பசு நெய் இருந்த பாண்டத்தில் அதை நீக்கிவிட்டு வேப்ப நெய்யைப் பெய்து வைத்தது போன்றதாகும். 239

உருவத்தில் அழகாய் அமைந்திருப்பவனிடம் ஊருக்கு உதவும் பண்பு இல்லாமை, அருந்துதற்கு ஏற்ற அளவு அமைந்துள்ள பாலில் மிகுதியாய் நீர் கலந்தாற்போலும்! தெளிந்த அறிவாளர் தீயவருடன் சேர்ந்து மாறுதல், நாகப்பாம்பு பெட்டைவிரியன் பாம்போடு உடல் உறவாடினாற்போலும்!

இன்ப இயல்

25. அறிவுடைமை

பகைவர் பணிவிடம் நோக்கித் தகவுடையார்
தாமேயும் நாணித் தலைச்செல்லார்; காணாய்!
இளம்பிறை ஆயக்கால் திங்களைச் சேரா(து)
அணங்கருந் துப்பின் அரா. 241

நளிகடல் தண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்(கு)
அணிகலம் ஆவ தடக்கம்;—பணிவில்சீர்
மாத்திரை இன்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரம் கூறப் படும். 242

எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா;
தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றான் ஆகும் மறுமை; வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர். 243

வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்;—ஆங்கே
இனம்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது. 244

கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும்; மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனையர் அல்லர்; எறிகடல்தண் சேர்ப்ப!
மனத்தனையர் மக்களென் பார். 245

இன்ப இயல்

25. நல்லறிவு உடைமை

வருத்துதற்கரிய வலிமையுடைய இராகு என்னும் பாம்பு, சிறிய இளம் பிறையாய் இருக்கும்போது நிலாவைப் பிடிக்கச் செல்லாது. அதுபோல, தகுதிவாய்ந்த மேலோர் பகைவர் பணியும் நிலைமை பார்த்து, அவர்க்காகத் தாமே நாணி, அவர்மேல் போருக்குச் செல்லார். அறிவாயாக.

பெரிய குளிர்ந்த கடற்கரை நாடனே! வறுமையுற்ற மாந்தர்க்கு அடக்கம் அணிகலமாகும். ஒருவன் பணி வில்லாத் தன்மையுடன் அளவு மீறி நடப்பானாயின், அவன் வாழும் ஊராரால் அவனது குடி குறைத்துப் பேசப்படும். 242

எட்டி மரத்து விதையை எந்த மண்ணில் நடினும் தென்னைமர மாகாது. தென்னாட்டில் (யமதிசையில்) பிறந்த வரும் விண்ணுலகம் அடைவதால், மறுவுலக வாழ்வு தன் செயலுக்கு ஏற்பத்தான் அமையும். வடநாட்டிலும் நல்லன செய்யாத வீணர் மிகப் பலர் உளர். 243

வேப்பிலைக்குள் வைத்துப் பழுக்க வைத்தாலும் வாழைப் பழத்தின் இனிய சுவை சிறிதும் மாறாது. அதுபோலவே, பழகும் குழு தீயது என்றாலும். நற்பண்புடையவரது நட்பு, மனம் கெடும் எல்லைக்குச் செல்வதில்லை. 244

அலை வீசும் குளிர்ந்த கடற்கரை நாடனே! கடற்கரையை யடுத்தும் இனிய தண்ணீர் கிடைக்கும்; மலைச்சாரலை யடுத்தும் உப்புத் தன்மை மிக்க உவர்ப்புத் தண்ணீர் கிடைக்கும்; ஆதலால், மக்கள் எனப்படுபவர் தம்தம் இனத் திற்கு ஏற்பமட்டும் இருப்பவரல்லர்; தம்தம் மனத்திற்கு ஏற்பவும் மதிக்கப்படுவர். 245

பராஅரைப் புன்னை படுகடல்தண் சேர்ப்ப!
ஒராஅலும் ஒட்டலும் செய்பவோ நல்ல
மரூஉச்செய்து யார்மாட்டும் தங்கும் மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று. 246

உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்;-புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய். 247

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். 248

கரும வரிசையால் கல்லாதார் பின்னும்
பெருமை உடையாரும் சேறல்-அருமரபின்
ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப!
பேதைமை அன்ற தறிவு. 249

கருமமும் உள்படாப் போகமும் துவ்வாத்
தருமமும் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்றும் முடியுமேல் அஃதென்ப
பட்டினம் பெற்ற கலம். 250

பருத்த அடியையுடையபுன்னைமரங்கள் நிறைந்தகுளிர்ந்த கடற்கரை நாடனே! யாரிடத்தும் நல்ல நட்பு கொண்டு நிலைத்துத் தங்கும் மனமுடையவர், நண்பரை விட்டுப் பிரிதலும் பிறகு சேர்தலும்செய்வரோ? (மாட்டார்.) எனவே, கண்டபடி கலந்து பழகாதிருத்தல் நல்லது. 246

எதையும் விளங்க ஆராய்ந்துணரும் அறிவுடையாரைச் சேரின் இன்பமும் சேரும். விளங்க உணரும் உணர்ச்சி யில்லாரோடு தவறிச் சேர்ந்து பழகின், அவரை விட்டு நீங்கும்போது துன்பமும் விட்டு நீங்கும். 247

தன்னை நல்நிலைமையில் நிறுத்திவைப்பவனும், தன்னை நன்னிலையிலிருந்து கலங்கச்செய்து தாழ்மைப்படுத்துபவனும், இருக்கும் நிலையைக்காட்டிலும் மேலும் மேலும் உயரச் செய்து தன்னை நிலை நிறுத்துபவனும், தன்னை யாவர்க்கும் தலைவனுகச் செய்பவனும் தானே தான் (பிறன் அல்லன்)248

அரிய இயல்புடைய அலைகள் ஆரவாரித்து ஒலிக்கும் குளிர்ந்த கடற்கரை நாடனே! ஒரு செயல் முடிக்கும் காரணத்தால், கல்லாதவர் பின்னே பெருமைக்குரிய கற்றோர் செல்லுதலும் அறியாமை அன்று; அஃது அறிவு உடைமையே! 249

செயலும் உருவாகச்செய்துமுடித்து, இன்பமும் துய்த்து, அறமும் தகுந்தவர்க்குச் செய்து, இப்படியாக ஒருசேர மூன்றும் முட்டுப்பாடு இல்லாமல் முடியுமாஞல், அந்நிலைமை, (வெளிநாட்டு வாணிகத்திற்குச் சென்று ஊதியத்துடன்) உள்நாட்டுப் பட்டினக் கரையை வந்தடைந்த மரக்கலத்தின் வெற்றிக்கு ஒப்பாகும் என்பர். 250

26. அறிவின்மை

நுண்ணுணர் வின்மை வறுமை; அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்;-எண்ணுங்
(கால்
பெண்ணவாய் ஆணிழந்த பேடி அணியாளோ
கண்ணவாத் தக்க கலம். 251

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழப்ப தறிதிரேல்-தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து. 252

'கல்'லென்று தந்தை கழற அதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்-மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும். 253

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு-மெல்ல
இருப்பினும் நாய்இருந் தற்றே; இராஅ(து)
உரைப்பினும் நாய்குரைத் தற்று. 254

புல்லாப்புன் கோட்டிப் புலவர் இடைப்புக்குக்
கல்லாத சொல்லும் கடையெல்லாம்; கற்ற
கடாஅயினும் சான்றவர் சொல்லார் பொருள்மேல்
படாஅ விடுபாக் கறிந்து. 255

26. நல்லறிவு இல்லாமை

நுட்பமான அறிவு இல்லாமையே ஏழைமையாகும். அந்த நுண்ணறிவு உடைமையே கெப்பும் கிளையுமாய் மிக வளர்ந்த பெருஞ்செல்வமாகும். நினைத்துப் பார்க்கின், பெண்மையை விரும்பி ஆண்மையை இழந்த பேடியானவள் கண்கவர்ந்துவிரும்பத்தக்க அணிகலன்களை அணியமாட்டாளோ? (அணிவாள்)- எனவே, அறிவிலார் செல்வம் பேடியின் நகைபோன்றது. 251

பல வகையாய் நிறைந்த கேள்வியறிவின் பயன் உணர்ந்த கற்றோர் சிறப்பிழந்து வறுமைத் துயரால் வருந்துவதை அறிகின்றீர் எனில் அதன் காரணம் இதோ: தொன்று தொட்ட சிறப்புடைய நாக்கிற்கு உரிய கலைமகள் கற்றவரிடம் சேர்ந்திருத்தலால், தாமரைப் பூவிற்கு உரிய திருமகள், மருமகளாகிய கலைமகளோடு பிணங்கிக் கற்றவரைச் சேராதிருக்கிறாள். 252

கற்பாயாக என்று இளமையில் தந்தை சொல்லியும், அதனை ஒரு சிறந்த சொல்லாகக் கொள்ளாமல் புறக்கணித்துக் கல்லாது கழிந்த ஒருவன், எழுதிய ஓலையைப் பலர் முன்னே மெல்ல நீட்டிப் படிக்கும்படி கூறினால், உடனே சினந்து குற்றமாகக் கோலை அடிக்க எடுத்துக் கொள்ளுவான். 253

கற்காமல் நீண்டு வளர்ந்த ஒருவன் உலகில் நல்ல அறிஞர்களின் நடுவிலே புகுந்து ஒன்றும் பேசாமல் மெல்ல அமர்ந்திருப்பினும், அது, நாய் வாளா இருப்பது போலாம்; அவன் வாளா இராமல் ஏதாவது பேசினாலும், அது, நாய் குலைப்பது போலாம். 254

கடைப்பட்டவர் எல்லாரும், அறிவோடு பொருந்தாத அற்பர் குழுவைச் சார்ந்த பொய்ப் புலவர்களின் நடுவிலே புகுந்து, தாம் நூற்களில் கல்லாத வீண் செய்திகளைச் சொல்வர். பெரியோர்களோ, தாம் கற்றறிந்த கருத்துக்களைக் கீழோர்கேட்பினும்,அக்கருத்துக்களில் ஆழ்ந்து தோயாமல் மேலோடு விடுவதை அறிந்திருப்பதால் ஒன்றும் பேசார்.

கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி;
மற்றையர் ஆவார் பகர்வர்; பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும்; எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி. 256

பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்;
குன்றின்மேல் கொட்டும் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு. 257

பாலால் கழீஇப் பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக் கிருந்தன்று;
கோலால் கடாஅய்க் குறினும் புகல்ஒல்லா
நோலா உடம்பிற் கறிவு. 258

பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா(து)
இழிந்தவை காமுறூஉம் ஈப்போல்-இழிந்தவை
தாம்கலந்த நெஞ்சினார்க் கென்னாகும் தக்கார்
(வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொல் தேர்வு. 259

கற்றார் உரைக்கும் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ் சுதைத்தலான்-மற்றுமோர்
தன்போல் ஒருவன் முகம்நோக்கித் தானுமோர்
புன்கோட்டிகொள்ளுமாம் கீழ். 260

படித்துணர்ந்த நாவன்மையாளர் தமக்குச் சோர்வு உண்டாகலாம் என்று அஞ்சிக் கண்டபடி பேசமாட்டார். மற்றவரோ கண்டபடி நிரம்பப் பேசுவர். வற்றிய பனையின் ஓலை 'கலகல' என ஒலிக்கும். வற்றாத பசுமையான ஓலைக்கு என்றும் ஒலி (ஓசை) இல்லை. 256

நல்லதை உணராத மாக்களுக்கு அறவழி உணர்த்தினால், அது, பன்றிக்குக் கூழ் வார்க்கும் தொட்டியில் இனிய மாம்பழச் சாற்றைப் பிழிந்தாற்போலும்; மற்றும் அது, மலைமேல் அடிக்கும் கட்டுத்தறிபோல் சிதைந்து, அவர்தம் செவிக்குள் சென்று புகாதாகும். 257

பலநாள் பாலால் கழுவி வெய்யிலில் உலர்த்தினாலும் கரிக்கு வெண்மைத் தன்மை உண்டாகாது. நல்வினை செய்யாத உடம்பிலே கோலினால் குத்தித் துளைத்துச் செலுத்தினாலும் அறிவு புகாது. 258

தேன் சொரிந்து இனிமையாக மணக்கினும் மலர்மேல் மொய்க்காமல் இழிந்த கழிவுப் பொருள்களை விரும்பி மொய்க்கும் ஈக்களைப்போல இழிந்தவற்றையே தாம் விரும்பும் மனமுடையார்க்கு, தகுந்த பெரியோர் வாயிலிருந்து வரும் இனிமை பொருந்திய தெளிவான பேச்சின் ஆராய்ச்சி முடிவு என்ன பயன் தரும்? 259

கற்றறிந்தவர் கூறும் குற்றமற்ற நுண்ணிய கருத்துக்களைக் கேட்பதை விரும்பாமல் தன்மனம் புறக்கணித்துத் தள்ளுவதால், கீழ்மகன், தன்னைப்போன்ற மற்றொருவனது முகத்தைப் பார்த்துத்தானும்ஓர் இழிந்த மேடைப்பேச்சைத் தொடங்கிவிடுவான். 260

27. நன்றியில் செல்வம்

அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா;
பெரிதணியர் ஆயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று. 261

அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ ஆயினும்
கள்ளிமேல் கைந்நீட்டார் சூடும்பூ அன்மையால்;
செல்வம் பெரிதுடைய ராயினும் கீழ்களை
நள்ளார் அறிவுடை யார். 262

மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கண் சென்றுண்பர்;
செல்வம் பெரிதுடையர் ஆயினும் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை. 263

புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே;
உணர்வ துடையார் இருப்ப-உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டும் துகிலும் உடுத்து. 264

நல்லார் நயவர் இருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணம்-தொல்லை
வினைப்பயன் அல்லது, வேல்நெடுங் கண்ணாய்!
நினைப்ப வருவதொன் றில். 265

27. நன்மை அளிக்காத செல்வம்

அருகிலே அமைந்து (ஒடு முடிய) பல பழங்கள் பழுத்திருப்பினும், பொரி பொரியான அடிமரத்தையுடைய விளா மரத்தினை வௌவால்கள் அடையமாட்டா. அதுபோல, மிகவும் அருகில் உள்ளவரானாலும் பெருமையில்லாதவரது செல்வம், ஏழைகளால் எண்ணிப் பார்க்கும் முறைமையும் உடையதன்று. 261

அள்ளிக் கொள்ளலாம் போன்ற அழகுடைய சிறுசிறு அரும்புகளை உடைத்தாயிருப்பினும், கள்ளிப்பூ அணியும் பூ அல்லவாதலால், கள்ளிச் செடியை நோக்கி எவரும் கையையும் நீட்டார். அதுபோல, செல்வம் மிக உடையவ ரானாலும் கீழ்மக்களை அறிஞர் அணுகார். 262

மிகுந்த அலைகளையுடைய கடற்கரையிலே வாழ்ந்தாலும், உவர்ப்பு இல்லாத-விரைந்த ஊற்றை உடைய கிணற்றை நெடுந்தொலைவு சென்று அடைந்தே மக்கள் நீர் எடுத்து உண்பர். அதுபோல, மிக்க செல்வமுடைய கருமிகள் அருகில் இருப்பினும், நெடுந்தொலைவு செல்வதாயினும் கொடுப்பவரிடத்திலேயே மக்களின் விருப்பம் திரும்பும். 263

நல்லுணர்வு உடையவர் வறியவராய் வாடி யிருப்ப, நல்லுணர்ச்சி யற்ற-முள்ளிச் செடியும் கண்டங்கத்தரிச் செடியும் போன்ற கீழ்மக்கள் பட்டாடையும் உயர்ந்த மெல்லிய பருத்தியாடையும் உடுத்து வசதியாக வாழ்வர். நீர் அடர்ந்த கடல் சூழ்ந்த இவ்வுலகில் புண்ணியமோ வேறு வகையாயிருக்கிறதே! 264

வேல் போன்ற நீண்ட கண்ணையுடையவளே ! நல்லவர்கள்-நயமுடையவர்கள் வறியவர்களாய் இருக்க, நயமே இல்லாத-கல்லாத மூடர்க்கு ஒரு செல்வம் உண்டாகியிருப்பதன் காரணம், முன்பு செய்த நல்வினைப் பயனே யல்லாமல், நினைக்குங்கால் வேறொன்றும் தெரியவரவில்லை. 265

நாருத் தக்கடேபோல் நன்மலர்மேற் பொற்
(பாவாய்!
நீருய் நிலத்து விளியரோ;-வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து. 266

நயவார்கண் நல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கண் செல்வம் பரம்பப்-பயின்கொல்
வியவாய்காண்; வேற்கண்ணுய்! இவ்விரண்டும்
(ஆங்கே
நயவாது நிற்கும் நிலை. 267

வலவைகள் அல்லாதார் காலாறு சென்று
கலவைகள் உண்டு கழிப்பர்;-வலவைகள்
காலாறும் செல்லார்; கருணையால் துய்ப்பவே
மேலாறு பாய விருந்து. 268

பொன்னிறச் செந்நெல் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்றுகுக்கும்;
வெண்மை யுடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்
வண்மையும் அன்ன தகைத்து. 269

ஓதியும் ஓதார் உணர்விலார்; ஓதாதும்
ஓதியனையார் உணர்வுடையார்;-தூய்தர்க
நல்கூர்ந்துஞ் செல்வர் இரவாதார்; செல்வரும்
நல்கூர்ந்தார் ஈயார் எனின். 270

நல்ல தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பொன்னனைய திருமகளே! நீ, பொன் போன்ற நல்ல மாந்தரைவிட்டு நீங்கி, மாறுபட்ட அற்ப மாந்தர் பக்கம் சேர்ந்துள்ளாய்; ஆதலின், மணமற்ற மலரிதழ் போல் மதிப்பிழந்து, இவ் வுலகில் சாம்பலாய் அழிந்து போ! 266

வேல் விழியாளே! நயமான நல்லவரிடம் உள்ள வறுமைக்கு நாணம் இல்லைபோலும்! பிறர்க்குப் பயன் படாதவரிடம் உள்ள செல்வம் அவரிடமே பெருகி ஒட்டிக் கொண்டிருக்கப் பிசிறு என்ன! இவ்விரண்டும் ஆங்காங்கே பொருந்தாது மாறி நிற்கும் நிலைமையைக் கண்டு வியப்பாயாக! 267

நாணயக்கேடும் - நயவஞ்சக்முும் இல்லாத நல்லோர் காலால் வழிகடந்து வருந்திச் சென்று கலவைக்கீரை முதலான உணவுகளை உண்டு காலங்கழிப்பர். நாணயக் கேடும் - நயவஞ்சகமும் உள்ளவர்கள் (வலவைகள்), காலால் நடந்து வேறிடம் செல்லார்; வீட்டிலேயே உணவின்மேல் பாலாறு - நெய்யாறு முதலியன பாய, பொரியல் வகையுடன் தாம்மட்டும் விருந்து உண்பார்கள். 268

பொன்னிறமான செந்நெல்பயிர் கதிர்ப்பொதியுடன் உள்கரு வாடிக்கிடக்க, மின்னல் வீசும் மேகமானது கடலிலே நீரைக் கக்கிச் சொரிவதுண்டு. அறியாமையுள்ள அற்பர் பெரிய செல்வம் அடைந்தபோது, அவரது கொடை யும் அம்மேகம் போன்றதே! 269

நல்லுணர்வு இல்லாதவர் கற்றிருப்பினும் கல்லாதவரே யாவர்; நல்லுணர்வு உடையவர் கற்றில்லாவிடினும் கற்ற வர் போன்றவரே! தூய உள்ளத்துடன் ஒழுகி, பிறரிடம் ஒன்றும் இரவாதவர் வறுமையுற்றிருப்பினும் செல்வரே யாவர்; செல்வரும் பிறர்க்கு ஒன்றும் உதவார் என்றால் வறியவரே! 270

துன்ப இயல்

28. ஈயாமை

நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்;- அட்ட(து)
அடைத்திருந் துண்டொழுகும் ஆவதில்
மாக்கட்(கு)
அடைக்குமாம் ஆண்டைக் கதவு. 271

எத்துணை யானும் இயைந்த அளவினால்
சிற்றறம் செய்தார் தலைப்படுவர்;-மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்கால் 'பின்னறிதும்'
(என்பார்
அழிந்தார் பழிகடலத் துள். 272

துய்த்துக் கழியான்; துறவோர்க்கொன் றீகலான்;
வைத்துக் கழியும் மடவோனை-வைத்த
பொருளும் அவனை நகுமே; உலகத்(து)
அருளும் அவனை நகும். 273

கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்(து)
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும். 274

எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்;
மறுமை அறியாதார் ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 275

துன்ப இயல்

28. பிறர்க்குக் கொடுக்காத கருமித் தன்மை

நண்பர்க்கும் சரி-நண்பர் அல்லாதவர்க்கும் சரி—தம்மிடம் இருக்கும் அளவுக்குச் சமைத்த உணவைப் பகிர்ந்து அளித்து உண்ணுதலே, உண்மையில் சமைத்து உண்ணும் குடும்பஒழுக்கமாகும். சமைத்ததைக்கதவைஅடைத்து விட்டு உண்ணும் உருப்படாத மாக்களுக்கு அவ்வுலகக் (மோட்சக்) கதவு அடைத்திருக்குமாம். 271

எவ்வளவாயினும்-தம்மால் முடிந்த அளவு சிறு அறமாயினும் செய்தவர் மேன்மையடைவர். மற்று, பெருஞ் செல்வம் அடைந்தபோதும், பின்பு அறம் செய்வோம் என்று தள்ளிப் போடுபவர் பழி என்னும் கடலுள் ஆழ்ந்து அழிவர். 272

பொருளைத் தானும் நுகர்ந்து செலவழிக்காதவனாய், துறவியர்க்கும் ஒன்றும் உதவாதவனாய், பொருளை வீணே பூட்டிவைத்து ஒழிந்துபோகும் அறிவிலியை நோக்கி, அவன்வைத்துச்சென்ற பொருளும் இகழ்ந்து சிரிக்கும்; உலகில் அருள் என்னும் பண்பும் அவனை எள்ளி நகையாடும். 273

பிறர்க்கு ஈதலும் தான் நுகர்தலும் அறியாத கருமித் தன்மை மிக்க உள்ளம் உடையவன் பெற்றுள்ள பெரிய செல்வம், வீட்டில் பிறந்த அழகிய பெண்ணை அயலான் மணந்து அனுபவிப்பது போல, உரியதொரு காலத்தில் அயலான் எவனாலாவது அனுபவிக்கப்படும். 274

அலை வீசும் நீர் மிக்க பெரிய கடற்கரையை அடுத்து வாழ்ந்தாலும், நீர் அற்ற சிறிய கிணற்றடியில் ஊறும் சிறிய ஊறல் நீரை எதிர்பார்த்திருந்தே மக்கள் உண்பர். எனவே, மறுவுலகிற்கு உரிய நல்வினையை அறிந்து செய்யாதவரின் செல்வத்தைக் காட்டிலும், உயர்ந்தவரின் மிக்க ஏழமையே மேலானது. 275

'எனதென' தென்றிருக்கும் ஏழை பொருளை
'எனதென' தென்றிருப்பன் யானும்; தனதாயின்
தானும் அதனை வழங்கான்; பயன்துவ்வான்;
யானும் அதனை அது. 276

வழங்காத செல்வரின் நல்கூர்ந்தார் உய்ந்தார்;
இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்;-உழந்ததனைக்
காப்புய்ந்தார்; கல்லுதலும் உய்ந்தார்; தம்
(கைந்நோவ
யாப்புய்ந்தார்; உய்ந்த பல. 277

தனதாகத் தான்கொடான்; தாயத் தவரும்
தமதாய போழ்தே கொடார்; தனதாக
முன்னே கொடுப்பின் அவர்கடியார்; தான்கடியான்
பின்னை அவர்கொடுக்கும் போழ்து. 278

இரவலர் கன்றுக ஈவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை;-விரகின்றி
வல்லவர் ஊன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாம் கீழ். 279

ஈட்டலும் துன்பம்; மற்றீட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்;-காத்த
குறைபடின் துன்பம்; கெடின்துன்பம்; துன்பக்(கு)
உறைப்பதி மற்றைப் பொருள். 280

'என்னுடையது-என்னுடையது' என்று எண்ணிக்கொண்டிருக்கும் அறிவில்லாத கருமியின் செல்வத்தை யானும் 'என்னுடையது – என்னுடையது' என்று எண்ணிக் கொண்டிருப்பேன். தனதாயிருந்தும், அவன் அதனைப் பிறர்க்கும் வழங்குவதில்லை- தானும் பயன் துய்ப்பதில்லை; அந்தச் செல்வத்தைப் பொறுத்தமட்டிலும் யானும் அது போலத்தான்! 276

பிறர்க்கு உதவாத செல்வரைக் காட்டிலும் வறியவர்கள் தப்பிப் பிழைத்தார்கள்; அதாவது: முதலாவதாக, செல்வத்தை இழந்துவிட்டார் என்னும் துன்பத்திலிருந்து தப்பினர்; அடுத்து, வருந்தி அதனைக் காக்கும் தொல்லையிலிருந்து தப்பினர்; மூன்றாவதாக, கீழே புதைப்பதற்காக மண்ணைத்தோண்டும் துன்பத்திலிருந்து தப்பினர்; அடுத்து, தம் கைவலிக்கப் பொருளைப் பிடித்துக் கொண்டிருக்கும் தொல்லையிலிருந்து தப்பினர்; இப்படியாக இன்னும் பல துன்பங்களிலிருந்து தப்பினர். 277

பொருள் தனதாக இருக்கும்போது தான் வழங்கான். (தான் இறந்தபின்) தன் மரபினர் தம்முடைய தாக்கிக் கொண்டபோது அவர் வழங்கார்; இவன் தனதாக இருந்தபோது முன்பு கொடுத்திருந்தால் தன் மரபினர் தடுத்திரார். இவன் இறந்தபின் அவர்கள் வழங்கும்போது இவன் தடுக்க முடியாது. 278

இரப்பவர் கன்றாகவும் கொடுப்பவர் பசுவாகவும் ஆர்வத்துடன் (பால் போல்) பொருளைச் சொரிந்து கொடுப்பதே வள்ளன்மையாகும். ஆர்வமின்றி, வலிதாய்க் கறப்பவர் ஊன்றியிழுக்கப் பாலைச் சொட்டும் பசுப்போல, வழி வகுத்துக் கொல்வதுபோல் வருத்தினாலேயே கீழ்மக்கள் பொருளைச் சுரப்பர். 279

பொருளைத் தேடுதலும் துன்பம்; அப்படித் தேடி ஈட்டிய நல்ல பொருளைக் காத்தலும் அங்கே கடுந்துன்பம்; காவல் குறை பட்டாலும் துன்பம்; பொருள் அழியினும் துன்பம்; இவ்வாறாக அந்தப் பொருள் துன்பத்திற்கே உறைவிடமாகும். 280

29. இன்மை

அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்;
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை. 281

நீரினும் நுண்ணிது நெய்யென்பர்; நெய்யினும்
யாரும் அறிவர் புகைநுட்பம்;-தேரின்
இரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து. 282

கல்லோங் குயர்வரைமேல் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம்;-கொல்லைக்
கலாஅல் கிளிகடியும் கானக நாட!
இலாஅஅர்க் கில்லை தமர். 283

உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே;-வண்டாய்த்
திரிதரும் காலத்துத் தீதிலிரோ என்பார்
ஒருவரும் இவ்வுலகத் தில். 284

பிறந்த குலம்மாயும்; பேராண்மை மாயும்;
சிறந்ததம் கல்வியும் மாயும்;-கறங்கருவி
கன்மேற் கழூஉம் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு. 285

29. இன்மையின் (வறுமையின்) கொடுமை

காவி படிந்த உடையை இடுப்பிலே உடுத்து வாழ்ந் தாலும், கையில் பத்தோ எட்டோ பொருள் உடைத்தா யிருப்பது பலர் நடுவே பெருமையடையச் செய்யும். பொருத்தமான உயர்குடியில் பிறந்திருப்பினும், ஒரு பொருளும் இல்லாத ஏழையர் செத்த பிணத்தினும் தாழ்ந்த வராய்க் கருதப்படுவர். 281

நீரைக்காட்டிலும் நெய் நுட்பமானது என்று சொல்வர். நெய்யைவிட புகை நுட்பமானது என்பதை எவரும் அறிவர். நினைத்துப் பார்க்கின், வறுமைத் துன்பம் உடையவன் புகையும் புக முடியாத வாயிலுக்குள்ளும் நுழைந்து புகுந்து விடுவான். 282

தினைப் புனத்தில் கல்லால் கிளி ஓட்டும் காட்டு நாடனே! கற்கள் ஓங்கி உயர்ந்துள்ள மலைச்சாரலில் காந்தள் பூ மலராவிடின், சிவந்த புள்ளிகளையுடைய வண்டினங்கள் செல்லமாட்டா. அதுபோல, பொருள் இல்லார்க்கு உற வினரும் இலராவர். 283

உடம்பு அழிந்தபோது அதனைத் தின்னக் கூடும் காகங்கள் போல, செல்வம் உண்டானபோது, அடிமையாக ஆயிரக் கணக்கானவர் வந்து சேர்வர். தேனுக்குத் திரியும் வண்டுபோல் வறுமையுற்று உணவுக்குத் திரிந்து கொண்டிருக்கும் காலத்தில், கேடு இன்றி நலமா யிருக்கிறீரோ என்று வினவுபவர் இவ்வுலகில் ஒருவரும் இலர். 284

ஒலிக்கும் அருவி கல்மேல் விழுந்து கறையைக் கழுவுகிற கூட்டமான குன்றுகள் சூழ்ந்த நல்ல நாடனே! வறுமை யால் கவ்வப்பட்டவர்க்கு, பிறந்த குலப்பெருமை போகும் பெரிய ஆண்மையும் அழியும்; தமது சிறந்த கல்வியுங்கூட குன்றும். 285

உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்(கு)
உள்ளூர் இருந்துமொன் றாற்றாதான்—உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தினன் ஆதலே நன்று. 286

நீர்மையே அன்றி நிரம்ப எழுந்ததம்
கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்;-கூர்மையின்
முல்லை அலைக்கும் எயிற்றாய்! நிரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார். 287

இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்
நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டும்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று. 288

கடகம் செறிந்ததம் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண் டட்டுக்-குடைகலனா
உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால். 289

ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழிகொம்பின்மேற் செல்லாவாம்:-நீர்த்தருவி
தாழா உயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட!
வாழாதார்க் கில்லை தமர். 290

வயிற்றுள் மிகுகின்ற பசியினுல் தன்னிடம் விரும்பி வந்தவர்க்கு, உள்ளூரில் வாழ்ந்தும் ஒன்றும் கொடுக்காத கருமி, உள்ளூரிலே இருந்து உயிர் வாழ்க்கையை வீணுய்க் கழிக்காமல், தான் வெளியூருக்கு அல்லது விண்ணுலகிற்கு விருந்தினுய்ப் போய்விடுதலே நல்லது. 286

கூர்மையுடைய முல்லை மொக்கைத் தோற்கடிக்கும் பற்களை யுடையவளே! வறுமையென்னும் துன்பம் சேரப் பெற்றவர்கள், தம் உயர் பண்பையே யன்றி, மிகவும் எழுச்சியுற்றிருந்த தம் அறிவுக் கூர்மையையும் இன்னும் எல்லாவற்றையும் ஒருசேர இழந்துவிடுவர். 287

வறுமையால் இடுக்குற்று ஒன்று கேட்டவர்க்குக் கொடுக்கமுடியாமல் முட்டுப்பாடடைந்து வருந்தி முயன்று உள்ளூரிலே வாழ்வதனினும், நெடுந்தொலைவிலுள்ள வேற்றூர் சென்று, ஆங்கு வரிசையாய் உள்ள வீடுகளில் கையேந்திக் காலங்கழிக்கும் மாண்பு கெட்ட வழியில் வாழ்வதே நல்லது. 288

செல்வம் சென்றழிந்துவிடின், முன்பு கடகம் அணிந் திருந்த தம் கைகளால் கிளைகளை வளைத்து வாங்கி இலைகளைப் பறித்துக்கொண்டு போய்ச்சமைத்து, குடைவாக வளைக்கப்பட்ட பனையோலைப் பட்டையையே பாண்டமாகக் கொண்டு அதில் உப்பில்லாமல் வெந்த இலைக்கறியை இட்டுத் தின்று உள்ளம் அழிந்து வாழ்க்கை நடத்துவர். 289

நீர் நிறைந்து அருவி தாழ்ந்து பாயும் உயர்ந்த சிறப்புடைய குளிர்ந்த நல்ல மலைநாடனே! ஆரவாரிக்கின்ற புள்ளிகள் பொருந்திய-அழகு விளங்கும் வண்டினங்கள், பூத்து உதிர்ந்துபோன வெற்றுக் கிளைகளிடம் செல்ல மாட்டா. அதுபோல, வாழ்வு அற்றவர்க்கும் உறவினர் இலர். 290

30. மானம்

திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதம் கண்டக் கடைத்தும்—எரிமண்டிக்
கானம் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம். 291

என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்?—தம்பா(டு)
உரையாமை முன்னுணரும் ஒண்மை யுடை
(யார்க்(கு)
உரையாரோ தாமுற்ற நோய்? 292

'யாமாயின் எம்மில்லம் காட்டுதும்; தாமாயிற்
காணவே கற்பழியும்' என்பார்போல்—நாணிப்
புறங்கடை வைத்தீவர் சோறும்; அதனால்
மறந்திடுக செல்வர் தொடர்பு. 293

இம்மையும் நன்றாம்; இயல்நெறியும் கைவிடா(து)
உம்மையும் நல்ல பயத்தலால்,—செம்மையின்
நானம் கமழும் கதுப்பினாய்! நன்றே;காண்!
மான முடையார் மதிப்பு. 294

பாவமும் ஏனைப் பழியும் படவருவ
சாயினும் சான்றவர் செய்கலார்;—சாதல்
ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம்; அவைபோல்
அருநவை ஆற்றுதல் இன்று. 295

30. மானம் உடைமை

செல்வத்தின் வன்துணையால் நல்லதகுதி யில்லாதார் புரியும் செருக்கான செயல்களைக் கண்ட மாத்திரத்திலும், எரியுற்றுக் காட்டைப்பற்றிய நெருப்பைப்போல மானம் உடையவரது உள்ளம் கொதிகொதிக்கும். 291

மானத்தைத் தம் உடைமையாகக்கொண்டவர்,(வறுமை யால் உடல்) எலும்பாகிச் சிதைவதானாலும், நற்பண்பு இல்லாத கயவர் பின்னே சென்று தமது துன்பத்தைக் கூறுவரோ? (கூறார்). தமது துயரை உரைப்பதற்கு முன்பே அவராக உணர்ந்து போக்கும் அறிவுடைய நல்லோரிடம் தாம் அடைந்த துன்பத்தைக் கூறுதிருப் பாரோ? (கூறுவர்.). 292

ஏழையராகிய யாங்கள் செல்வர்க்கு விருந்தளித்தால் எம் மனைவியரைக் கொண்டே பரிமாறச் செய்வோம். அச் செல்வர்கள் எமக்கு உணவு அளிப்பின், அவர்தம் மனைவி யரை யாம் கண்டாலேயே கற்பழிந்துவிடும் என்று கருதி யவர்போல மனம் நாணி, எம்மை வெளிவாயிலில் அமர வைத்தே யாரைக் கொண்டாயினும் சோறிடுவர். அதனுல் செல்வரது தொடர்பை மறந்திடுவீர்! 293

மிக நன்ருய்க் கத்தூரிப் புழுகு மணக்கும் கூந்தலை யுடையவளே! மானம் உடையவரது மாண்பு, இவ்வுலக வாழ்விலும் நன்மைதரும்; ஒழுகவேண்டிய நன்னெறியைக் கைவிடாததால் மறுவுலகத்திலும் நல்லனவே அளிக்கும்; ஆதலின், அது மிக உயர்ந்தது! அறிவாயாக! 294

பாவமும் அடுத்துப் பழியும் உண்டாகும்படியான தீச் செயல்களை, பெரியோர் உயிர் சாய்ந்து மாய்வதாயினும் செய்யார்; ஏனெனில், சாதல் என்பது, ஒருநாளில்-ஒரு சிறு நேரத்தில் மட்டும் துன்பம் தரும்; அந்தப் பாவமும் பழியும் போல தாங்குதற்கு அரிய துன்பங்களை என்றும் தருவ தில்லை. 295

மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாம்
செல்வர் எனினும் கொடாதவர்—நல்கூர்ந்தார்;
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார். 296

கடையெலாம் காய்பசி அஞ்சும்;மற் றேனை
இடையெலாம் இன்னாமை அஞ்சும்;—புடைபரந்த
விற்புருவ வேல்நெடுங் கண்ணாய்! தலையெல்லாம்
சொற்பழி அஞ்சி விடும். 297

'நல்லர்;பெரிதளியர்;நல்கூர்ந்தார்' என்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்—கொல்லன்
உலையூதும் தீயேபோல் உள்கனலும் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்! 298

நச்சியார்க் கீயாமை நாணன்று; நாளும்
அச்சத்தால் நாணுதல் நாணன்றாம்;-எச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண். 299

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்;—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின். 300

வளப்பம் மிக்க பெரிய இவ்வுலகில் வாழும் மாந்தருக்குள் எல்லாம், செல்வம் உடையவராயினும் பிறர்க்கு வழங்காதவர்கள் ஏழைகளே. வறுமையுற்றவிடத்தும் செல்வரிடம் சென்று இரக்காதவர்கள், பெரு முத்தரையர் என்னும் மன்னர் மரபினர்போல் செல்வரேயாவர். 296

பக்க வாட்டத்தில் பரவியுள்ள வில் போன்ற புருவத்தையும் வேல் போன்ற நீண்ட கண்ணையும் உடையவளே! கடைப்பட்டவர்கள் வருத்தும் பசிக்கு அஞ்சி எதையும் செய்வர். மற்றைய இடைப்பட்டவர்கள் மற்ற துன்பங்கட்கு அஞ்சி அதற்காக ஏதும் செய்வர். முதன்மையான பண்பாளரோ, உலகம் சொல்லும் பழிக்கு அஞ்சித் தீயன செய்யார். 297

இவர் நல்லவர்-பெரிதும் இரக்கமுடையவர் • அதனால் இப்போது ஏழையாகிவிட்டார் என்று இகழ்ச்சியாகப் பேசிச் செல்வர்கள் நல்லவரைப் பார்க்கும் ஏளனப் பார்வையைக் காணும் போது, சிறந்த பெரியோரது உள்ளம், கொல்லனது உலைக்களத்தில் ஊதியெழுப்பும் நெருப்பைப் போல உள்ளே கொதிக்கக் கூடும்போலும்! 298

தம்மிடம் விரும்பி வந்தவர்க்கு ஒன்று கொடுக்காதது கூட அவ்வளவு பெரிய நாணமன்று; நாள்தோறும் பலவகை அச்சத்தால் நாணுதலுங்கூட மிகப்பெரிய நாணமன்று; ஆனால், செல்வக் குறைவினால் தாம் மெலிந்திருக்க, தம்மினும் மேலானவர் தமக்குச் செய்த உதவியை நன்றியுடன் வெளியில் சொல்லாதிருப்பதே மிகவும் பெரிய நாணமாகும். 299

மதமுடைய யானையை அடித்து வீழ்த்திய-காட்டில் வாழும் வேங்கைப் புலியானது, தன் வலப்பக்கம் வீழாமல் இடப்பக்கம் வீழின் அந்த யானையை உண்ணாமல் பட்டினியால் இறந்து போகும். பெரியோர்களுங்கூட, இடம் அகன்ற விண்ணுலகமே கிடைப்பதாயினும் மானம் கெட்டு வருவதானால் அதனை விரும்பார். 300

31. இரவச்சம்

'நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தார்; எஞ்ஞான்றும்
தம்மாலாம் ஆக்கம் இல்'ரென்று—தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமும்
தெருண்ட அறிவி னவர். 301

இழித்தக்க செய்தொருவன் ஆர உணவின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ?
விழித்திமைக்கு மாத்திரை அன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு. 302

இல்லாமை கந்தா இரவு துணிந்தொருவர்
செல்லாரும் அல்லர் சிறுநெறி;—புல்லா
'அகம்புகுமின் உண்ணுமின்'என்பவர்மாட்டல்லால்
முகம்புகுதல் ஆற்றுமோ மேல்? 303

திருத்தன்னை நீப்பினும் தெய்வம் செறினும்
உருத்த மனத்தோ டுயர்வுள்ளின் அல்லால்
அருத்தஞ் செறிக்கும் அறிவிலார் பின்சென்(று)
எருத்திறைஞ்சி நில்லாதாம் மேல். 304

கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை;—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்; என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு! 305

31. இரத்தலுக்கு அஞ்சுதல்

'இந்த வறியவர் நம்மால்தான் செல்வர் ஆக முடியும்; தம்சொந்த முயற்சியால் ஈட்டும் செல்வம் உடையவராகார்' என்று தம்மைத் தாமே பெரிதாய் அலட்டிக்கொள்ளும் மனமுடைய செல்வர் பின்னே, தாங்களும் தெளிந்த அறிவுடையவராயுள்ள நல்லோர் செல்வார்களோ? 301

ஒருவன் இறந்து மீண்டும் பிறக்கும் பிறப்பு என்பது, மூடிய கண்களை விழித்து இமைக்கின்ற அளவினது அல்லவா? எனவே, ஒருவன் (அழியும் உடலை வளர்க்க) இழி செயல்கள் செய்து வயிறு நிரம்ப உண்ணுவதனினும், பழிச்செயல்கள் செய்யாதவனுப் பசித்து அழிதல் தவறுகுமோ? 302

(பொதுவாக உலகியலில்)ஒருசிலர், ஏழைமை காரணமாக இரக்கத் (யாசிக்கத்) துணிந்து இழிந்த வழியில் செல்லாமல் இருப்பதுமில்லை. ஆனுலும், மேன்மக்கள், 'எம் வீட்டிற்கு வருக! விருந்து உண்க!' என்று விரும்பி அழைப்பவரிடமல்லாமல், மற்றவரிடம் தம் முகம் காட்டிச் செல்லுதலைச் செய்வரோ? 303

திருமகள் தன்னைத் துறப்பினும், தெய்வமே சினந்து வருத்தினும், மேன் மகன், ஊக்கமான உள்ளத்துடன் உயர் நெறி நிற்றலை எண்ணுவதல்லாமல், பொருளை இறுக்கி வைக்கும் அறிவிலிகளின் பின்னே சென்று தலை வணங்கி நிற்கவேமாட்டான். 304

மறைக்காது அளிக்கும் உறுதியான அன்புடைய கண் போல் சிறந்தவரிடத்தும் சென்று இரவாமல் வாழ்வதே உயர்ந்த வாழ்க்கையாகும். இரப்பதை எண்ணும்போதே உள்ளம் நாணத்தால் உருகுகின்றதே? இரந்து ஒன்று பெற்றுக்கொள்ளும்போது பெற்றுக்கொள்பவரின் மனக் குறிப்பு எங்ஙனம் கூசுமோ! 305

'இன்னு இயைக; இனிய ஒழி'கென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்(கு)
என்னைகொல்
காதல் கவற்றும் மனத்தினல் கண்பாழ்பட்(டு)
ஏதி லவரை இரவு. 306

என்றும் புதியார் பிறப்பினும் இவ்வுலகத்(து)
என்றும் அவனே பிறக்கலான்;—குன்றின்
பரப்பெலாம் பொன்னெழுகும் பாயருவி நாட!
இரப்பாரை எள்ளா மகன். 307

புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
நன்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
'ஈயாய் எனக்'கென் றிரப்பானேல், அந்நிலையே
மாயானே மாற்றி விடின்? 308

ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றி
வழிபடுதல் வல்லுதல் அல்லால்—பரிசழிந்து
'செய்யீரோ என்னுனும்' என்னும் சொற் கின்னதே
பையத்தான் செல்லும் நெறி. 309

பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானும் செய்க;—கிழமை
பொருஅர் அவரென்னிற் பொத்தித்தம்
நெஞ்சத்(து)
அருஅச் சுடுவதோர் தீ. 310

'எனக்குத் துன்பமே வருக! இன்பம் ஒழிக!' என்று எண்ணித் தன் மனத்தைத் தானே நிறைவு (திருப்தி) செய்துகொள்ளத் தீர்ந்துபோகக்கூடிய வறுமைக்காக, பொருள் விருப்பத்தால் கவலைப்படும் மனத்துடன் கண் குழிந்து அயலாரிடம் சென்று இரப்பது ஏனோ? 306

குன்றின் பரப்பு முழுதும் பொன் கொழித்து அருவி பாய்ந்து ஓடும் மலை நாடனே! இவ்வுலகில் என்றும் புதியவர் பிறந்துகொண்டே யிருப்பினும், என்றும் (இன்னும்) பிறவாதவன் ஒருவன் உள்ளான் எனில், இரப்பவரை இகழாத மனிதன்தான் அவன். (மற்றவர் எவரும் இரப்பவரை இகழ்கின்றனர்.) 307

வெளியே வறுமை தன் உடலை மெலியச் செய்ய, உள்ளே உள்ள தன் நல்லறிவை நீக்கி நிறுத்திவிட்டு, இன்னொருவனை அடைந்து எனக்கு ஈவாயாக என்று ஒருவன் இரப்பானேயாயின், அவன் தர மறுத்துவிட்டால், அப்போதே இவன் நாணத்தால் மாய்ந்துபோகமாட்டானோ? 308

ஒருவர் மற்றொருவரை அடைந்து அவர்க்கு ஏற்ப நடந்து காட்டி அவரை வணங்குவதில் வல்லவராய் இருப்பதல்லாமல், (மேலும்,) தன்மை கெட்டு ஏதேனும் உதவி செய்ய மாட்டீரா என்று கேட்கும் இழிவுப் பேச்சைவிட; மெல்லத் தான் சென்றுகொண்டிருக்கும் வறுமைப் பாதை துன்பம் தராதே! 309

ஒருவர் பழைய நட்பு துணையாக முன்பு பழகிய முறையில் வந்து கேட்கும் உரிமையில், தான் ஏதேனும் இயன்ற அளவு செய்யவேண்டும். அவர் உரிமையை ஏற்றுக் கொள்ளாது கைவிடப்பட்டார் எனில், அவரது நெஞ்சைக் கவிந்துகொண்டு ஒருவகைத் துன்பத் தீ அருமல் சுட்டெரிக்கும். 310

பொதுவியல்

32. அவை யறிதல்

மெய்ஞ்ஞானக் கோட்டி உறழ்வழி விட்டாங்கோர்
அஞ்ஞானம் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானம் கொண்டொழுகும் காரறி வாளர்முன்
சொன்ஞானம் சோர விடல். 311

நாப்பாடம் சொல்லி நயமுணர்வார்
போற்செறிக்கும்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்;—தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கும்; அல்லாக்கால்
தோட்புடைக் கொள்ளா எழும். 312

சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்;
கற்றாற்றல் வன்மையும் தாம்தேறார்;—கற்ற
செலவுரைக்கும் ஆறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கும் மாந்தர் பலர். 313

கற்றதூஉம் இன்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்;—மற்றதனை
நல்லார் இடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும். 314

வென்றிப் பொருட்டால் விலங்கொத்து
மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ(டு)—ஒன்றி
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுள்
சுரைவித்துப் போலுந்தம் பல். 315

பொது இயல்

32. அவையை அறிந்து அதற்கேற்ப ஒழுகல்

மெய்யறிவுடையோரது அவையில் ஒத்துப் பழகும் நல் வழியை விட்டு, அங்கே அறியாமைக்கு உரிய ஒரு செய்தியைக் கூறி, அதுவே சரியென்று மிகவும் பரப்புதல் செய்து, கீழான அறிவுடன் நடந்துகொள்ளும் கரிய உள்ள முடையவரின் முன்னே, சொல்லத்தக்க நற்கருத்தை நல்லோர் சொல்லாது விடுவாராக! 311

நாவால் பாடம் பண்ணியதை ஒப்பித்து, பாடலின் நயம் உணர்ந்தவர்போல் மிகவும் காட்டிக்கொள்ளும் தீய பொய்ப் புலவனை, நிறைந்த அறிவுடையவர் அடையார். ஏனெனில், அந்தத் தீய புலவன், அவையிலே, பெருமை குன்றும்படி இவரது குடிப்பிறப்பைப் பழித்துப்பேசுவான்; அல்லாமலும், தோள் தட்டிக்கொண்டு அடிபிடி மல்லுக்கு எழுவான். 312

வீணுகப் பல பேசும் மாந்தர் பலர், சொல்லையே தார்க் குச்சியாகக் கொண்டு பிறரைக் குத்தி, தினவு கொண் டெழுந்து பேச விரும்புவர்; சான்றோரது கல்வியறிவின் வலிமையைத் தாம் அறியார்; தாம் கற்றவற்றையும் பிறர் நெஞ்சில் பதியும்படி எடுத்துச் சொல்லும் வழியறியார்; தமது தோல்வியையும் அறியமாட்டார். 313

அறிவிலி தான் சிறப்பாகக் கற்றது ஒன்றும் இன்றி, ஆசிரியர் சொல்லிய பாடத்தின் வாயிலாக ஏதேனும் ஒரு செய்யுளை மனப்பாடம் செய்துவைத்திருப்பான். மேலும், அப்பாடலை, நல்லவர் அவையிடையே புகுந்து நாணமின்றி ஒப்பித்துத் தன் மட்ட அறிவைக் காட்டிவிடுவான். 314

பிறரை வெல்வது காரணமாக, விலங்குபோன்ற தன்மை யுடன், உண்மைப் பொருள் உணராதவராய், சினந்து கறுவி எழுந்து கொதிக்கும் தீயவரோடு சேர்ந்து தமது பேச்சுத் திறனைக் காட்ட முயல்பவர், தம் கைக்குள் சுரை விதையைப் போன்ற தம் பற்களைக் காண்பர். (அதாவது பல் உதிர்க்கப் படும்) 3

பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால்—கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே;மற்றவரை
ஈன்றாட் கிறப்பப் பரிந்து. 316

பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல்;—மற்றம்
முறிபுரை மேனியர் உள்ளம்போன் றியார்க்கும்
அறிதற் கரிய பொருள். 317

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்--மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே;பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு. 318

பொழிப்பகலம் நுட்பம்நூல் எச்சமிந் நான்கிற்
கொழித்தகலம் காட்டாதார் சொற்கள்—பழிப்பில்
நிரையாமா சேர்க்கும் நெடுங்குன்ற நாட!
உரையாமோ நூலிற்கு நன்கு? 319

இற்பிறப் பில்லார் எனைத்துநூல் கற்பினும்
சொற்பிறரைக் காக்கும் கருவியரோ?—இற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூல் தேற்றாதார்
புல்லறிவு தாமறிவ தில். 320

செய்யுள் பாடத்தை மட்டும் படித்து அதன் பொருள் அறிவைத் தெளியாத மூடர்கள் வெறுக்கத்தக்க சொற்களை சொல்லும்போது, கெடுதல் இல்லாத சிறப்பினை உடைய பெரியோர், மற்று அந்த மூடர்களைப் பெற்ற தாய்மார்க்காக மிகவும் இரங்கி வருந்தி வாளா இருப்பர். 316

நூற்கள், கிடைக்கும் பொருளைப் பெற்றுக்கொள்ளும் வேசியரின் தோளைப்போல, ஒருவழிப்பட்டுப் படிப்பவர்க்கெல்லாம் எளிமையாகக் கிடைக்கும்; ஆனால் மாந்தளிர் போன்ற மேனியுடைய அந்த வேசியரின் உள்ளத்தைப் போல, யார்க்கும் புரிந்துகொள்ள முடியாத நுண்பொருள் உடையனவாயிருக்கும். 317

நூற்களை மிகுதியாகச் சேர்த்து வைத்தும் அவற்றின் பொருள் அறியாராய், கொண்டுவந்து சேர்த்து வீடு முழுவதும் நிறைத்து வைப்பினும், மற்றபடி அந்நூற்களை இப்படியாகப் (பூசை போட்டு) போற்றிக் காக்கின்ற பொய்ப் புலவரும் வேறானவரே! நூற்பொருளைப் புரிந்து பிறர்க்கு எடுத்துச் சொல்லும் மெய்ப்புலவரும் வேறானவரே! 318

குற்றமற்ற கூட்டமான காட்டுப் பசுக்களைக் கொண்டுள்ள நீண்ட மலைநாடனே! தொகுப்புரை, அகல விரிவுரை, நுட்ப உரை, நூலில் எஞ்சி மறைந்து கிடப்பதை எடுத்துக்கூறும் ஆராய்ச்சியுரை ஆகிய இந் நால்வகை உரைகளின் வாயிலாக நூலின் கருத்தைக் கொழித்தெடுத்து விளக்கம் செய்து காட்டமுடியாதவரின் சொற்கள், ஒரு நூலுக்கு நல்ல உரையாக முடியுமா? 319

நற்குடிப் பிறப்பு இல்லாதவர் எவ்வளவு நூற்கள் கற்றிருப்பினும், தம் சொல்லால், பிறரைப் போற்றிக் காக்கத்தக்க கருவி போன்றிருப்பரோ? நற்குடியில் பிறந்த நல்லறிஞர், பெரியோர் இயற்றிய நூற்பொருளை அறியாத மூடரின் அற்ப அறிவைத் தாம் பொருட்படுத்துவதில்லை. 320

பகையியல்

33. புல்லறிவாண்மை

அருளின் அறமுரைக்கும் அன்புடையார்
வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்;-பொருளல்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும்; பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு. 321

அவ்வியம் இல்லார் அறத்தா றுரைக்குங்கால்
செவ்வியர் அல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்;
கவ்வித்தோல் தின்னும் குணுங்கர்நாய்
பாற்சோற்றின்
செவ்வி கொளல்தேற்ரு தாங்கு. 322

இமைக்கும் அளவில்தம் இன்னுயிர்போம் மார்க்கம்
எனைத்தானும் தாங்கண் டிருந்தும்-தினைத்
துணையும்
நன்றி புரிகல்லா நாணில் மடமாக்கள்
பொல் [illegible] பொன்ருக்கா லென். 323

உளநாள் சில்வால்; உயிர்க்கேமம் இன்ருல்;
பலர்மன்னும் தூற்றும் பழியால்;-பலருள்ளும்
கண்டாரோ டெல்லாம் நகாஅ தெவனெருவன்
தண்டித் தனிப்பகை கோள். 324

எய்தி இருந்த அவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதான் ஒருவன் ஒருவனை;-வைய
வயப்பட்டான் வாளா இருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழும் எனின். 325

பகை இயல்

33. புல்லிய சிற்றறிவு உடைமை

அருளினால் நல்லறம் கூறும் அன்புடையவரது வாய் மொழியை அறிவுள்ள புலவர் உயர்ந்த பொருளாக ஏற்றுக் கொள்வர். பால் ஊற்றிய கூழைத் (பாயசத்தை) துழவும் அகப்பை சுவைத்துணராதது போல, உண்மைப் பொருள் உணராத அறிவிலி அவர் வாய்மொழியை இகழ்ந்து பேசுவான். 321

தோலைக் கவ்வித் தின்னுகிற புலைநாயானது பால் சோற்றின் சுவையை அறிந்து கொள்ளாதது போல, பொறுமையில்லாத நல்லவர் அறநெறியை எடுத்துச் சொல்லும்போது, ஒழுங்கானவர் அல்லாதவர் அதனைக் காது கொடுத்துங் கேளார். 322

கண்ணிமைக்கும் நேரத்தில் தமது இனிய உயிர் பிரிந்து போகலாம் என்னும் உண்மையை எத்தனையோ விதங்களாலும் தாம் அறிந்திருந்தும், தினையளவும் நல்லது செய்யாத-நாணம் இல்லாத-மடத்தனம் உடைய மாக்கள் செத்தால்தான் என்ன! சாவாமல் இருந்தால்தான் என்ன! 323

உள்ள வாழ்நாட்களோ சிலவே! உயிர்க்கோ பாதுகாப்பு இல்லை. பலரும் தூற்றிப்பேசும் பழியோ மிகுதி! எனவே, உலக மக்கள் பலருள்ளும் கண்டவரோடெல்லாம் சிரித்துப் பேசாமல், ஒருவன் மாறுபட்டு விலகித் தனித்துப் பகை கொள்வது ஏனோ ? 324

பலர் கூடியிருந்த அவை முன்னே போய் ஒருவன் மற்றொருவனை வைதானாக, வையப்பெற்றவன் ஒன்றும் செய்யாது வாளா இருப்பானேயானால், வைதவன் வாழ்வு கெடுவான் - அங்ஙனம் கெடானாயின், வியக்கப்படத்தக்கவனேயாவான் ! 325

மூப்புமேல் வாராமை முன்னே அறவினையை
ஊக்கி அதன்கண் முயலாதான்-நூக்கிப்
'புறத்திரு! போ'கென்னும் இன்னாச்சொல்
இல்லுள்
தொழுத்தையால் கூறப் படும். 326

தாமேயும் இன்புறார்; தக்கார்க்கும் நன்றாற்றார்;
ஏமஞ்சார் நன்னெறியும் சேர்கலார்;-தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார். 327

சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்-இறுகிறுகிப்
பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார்
கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம். 328

வெறுமை இடத்தும் விழுப்பிணிப் போழ்தும்
மறுமை மனத்தாரே யாகி - மறுமையை
ஐந்தை அனைத்தானும் ஆற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார். 329

என்னேமற் றிவ்வுடம்பு பெற்றும் அறம்நினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை;-அன்னோ!
அளவிறந்த காதல்தம் ஆருயிர் அன்னார்க்
கொளவிழைக்கும் கூற்றமும் கண்டு. 330

முதுமை மேலிட்டு வருவதற்கு முன்பே நல்ல அறச் செயலை ஊக்கத்துடன் தொடங்கி அதனிடம் முயற்சி கொள்ளாதவன், பின் முதுமையில் தன் வீட்டிலேயே ஒதுக்கப்பட்டு, 'வெளியிலேயே இரு-எங்கேயாவது போ' என்னும் இனிமையற்ற சொற்களை வேலைக்காரியாலும் இகழ்ந்து சொல்லப்படுவான். 326

அற்ப அறிவினர் தாமும் செல்வத்தை நுகரமாட்டார்; தகுதியுடைய பிறர்க்கும் நன்மை செய்யார்; பாதுகாப்பு பொருந்திய நல்லறவழியையும் பின்பற்றுர்; தாம் செல்வத்தில் மயங்கித் தூங்கி வீணே வாழ்நாளைக் கழிப்பர். 327

மறுவுலகம் செல்லும்போது தமக்கு வேண்டிய அறமாகிய சோற்றை, இளமையிலேயே, இறுக இறுகத் தோளிலே மாட்டிச்செல்லும் கட்டுசோற்றைப் போல் உண்டாக்கி வைத்துக் கொள்ளாதவராய், பொருளை இறுக்கி இறுக்கி வைத்து, பிறகு அறம் செய்வோம் என்று தள்ளிப்போடும் அறிவிலிகள், (இறக்கும்போது பேசமுடியாமையால்) கையால் குறிப்புக்காட்டும் பொன்னுருண்டையும், புளித்த விளாங்காய் கேட்பதாகச் சுற்றத்தாரால் கருதப்படும். 328

வறுமை யுற்றபோதும் பெரிய நோய் கொண்டபோதும் மறுவுலகைப் பற்றி எண்ணும் மனத்தை உடையவராயிருந்து, அவை நீங்கி ஆறுதல் பெற்ற காலத்தில், மறுவுலகைப் பற்றிக் கடுகு அளவாயினும் அற்ப அறிவினர் எண்ணுர். 329

அந்தோ! அளவற்ற அன்பிற்கு உரிய-தம் அரிய உயிர்போன்ற நெருங்கிய உறவினரைக் கொண்டுபோக முயலும் எமனைப்பற்றி அறிந்தும், பெறுதற்கரிய இந்த மனித உடலைப் பெற்றிருந்தும் அறம் செய்ய எண்ணுராய், வீணே தம் வாழ்நாளைக் கழிப்பர் சிலர். என்னே கொடுமை இது! 330

34. பேதைமை

கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே;
கொலைவல் பெருங்கூற்றம் கோள்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு. 331

பெருங்கடல் ஆடிய சென்றார், 'ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும்' என்றற்றால்;
'இற்செய் குறைவினை நீக்கி அறவினை
மற்றறிவாம்' என்றிருப்பார் மாண்பு. 332

குலம், தவம், கல்வி, குடிமை, மூப் பைந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும்-நலஞ்சான்ற
மையறு தொல்சீர் உலகம் அறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றின் நேர். 333

கல்நனி நல்ல கடையாய மாக்களின்;
சொல்நனி தாமுணரா வாயினும்-இன்னினியே
நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதலென்(று)
உற்றவர்க்குத் தாமுதவ லான். 334

பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டும்-கறுவினால்
கோத்தின்னா கூறி உரையாக்கால் பேதைக்கு
நாத்தின்னும் நல்ல சுனைத்து. 335

34. மடமை

கொல்லுதல் வல்ல கொடிய யமன் உயிரைப் பிடிக்க நாளும்-கோளும் பார்த்திருக்க, இவ்வுலக இன்பமாகிய வலையில் அகப்பட்டு இறுமாந்திருப்பவரது தன்மை, கொலைகாரர் ஆமையைத் தண்ணீரில்போட்டு உலையிலே வைத்துக் கீழே தீ மூட்ட, ஆமையானது சிறிது நேரத்தில் தாம் இறக்கப்போவதை அறியாமல் அந்தத் தண்ணீருக்குள் மூழ்கி விளையாடுவது போன்றதாகும். 331

குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய செயல்களின் குறைகளை நீக்கி நிறைவு செய்து, பிறருக்குச் செய்யத்தக்க நல்ல அறச் செயல்களைப் பிறகு பார்த்துக் கொள்வோம் என்று தள்ளிப் போடுபவரின் தன்மை, பெரிய கடலில் குளிக்கச் சென்றவர், ஒருசேர அலையோசை அடங்கிய பின் குளிப்போம் என்று காத்திருப்பது போன்றதாகும். 332

உயர்குலம், தவம், கல்வி, நற்குடிப் பிறப்பு, முதுமை ஆகிய ஐந்தையும் குறையாமல் ஒருவன் அடைந்திருப்பினும், நன்மை மிக்க-குற்றம் அற்ற-பழம் பெருஞ் சிறப்புடைய உலக நடைமுறையை அறியாது ஒழுகுதல், (பாலில் வேக வைத்துச் சமைத்தாலும்) நெய்யில்லாத சோற்றை உண்பதற்கு நேராகும். 333

கருங்கல் பாறைகள், பிறர் சொல்லும் சொற்களைத் தாம் நன்கு உணரமாட்டா என்றாலும், தம்மை அடைந்தவர்க்கு, அப்பொழுது-அப்பொழுதே, தம்மேல் நிற்பதற்கும் அமர்வதற்கும் படுப்பதற்கும் நடப்பதற்கும் ஆகப் பலவகையில் தாம் உதவியாயிருப்பதால், கீழ்ப்பட்ட மக்களினும் மிகவும் நல்லவையாம். 334

சினந்து பேசுவதால் பெறக்கூடிய நன்மை ஒன்றும் இல்லையாயினும் ஏதோ பெற்றவன்போலக் கறுவிக்கொண்டு தமக்கு ஒப்பாகாத உயர்ந்தோரிடத்தும், சினத்தினால் இனிமையற்ற சொற்களைத் தொடுத்துப் பேசித் திட்டாவிடின், அறிவில்லாதவனுக்கு, நாக்கு தன்னைத் தின்று வருத்தும் சுனை உடையதாயிருக்கும். 335

தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குதும் என்பவர்-புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலரும் கடற்சேர்ப்ப!
கற்கிள்ளிக் கையிழந் தற்று. 336

ஆகா தெனினும் அகத்துநெய் உண்டாகின்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்; - யாதும்
கொடாஅர் எனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர். 337

நல்லவை நாடோறும் எய்தார்; அறம்செய்யார்;
இல்லாதார்க் கியாதொன்றும் ஈகலார்;-எல்லாம்
இனியர்தோள் சேரார்; இசைபட வாழார்;
முனியார்கொல் தாம்வாழும் நாள். 338

விழைந்தொருவர் தம்மை வியப்ப ஒருவர்
'விழைந்திலேம்' என்றிருக்கும் கேண்மை-
தழங்குகுரல்
பாய்திரைசூழ் வையம் பயப்பினும் இன்னாதே
ஆய்நலம் இல்லாதார் மாட்டு. 339

கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும்; தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தின் தணியாத
பித்தனென் றெள்ளப் படும். 340

நல்ல தளிரையுடைய புன்னை பூத்துக் குலுங்கும் கடற்கரை நாடனே! தம்மிடம் நல்ல பண்பு இல்லாதவரின் பின்னே போய், அவரை எப்படியாவது எம் வழிப்படுத்தி விடுவோம் என்று எண்ணுபவரின் அற்ப நட்புமுயற்சி, கருங்கல்லைக் கிள்ளிக் கிள்ளிக் கையைக் கெடுத்துக் கொண்டது போலாம். 336

கிடைக்காது என்றாலும் ஒரு கலத்துள்ளே நெய் இருக்குமாயின், விட்டுப் போகாமல் எறும்புகள் வெளியே சுற்றிக் கொண்டேயிருக்கும். அதுபோல், யாதொன்றும் உதவார் என்றாலும், செல்வமுடையவரை உலகினர் பின்பற்றி விடாது சுற்றுவர். 337

அறிவிலிகள், நல்லவர் அவையை நாடோறும் அடைந்து பழகார்; நல்லறம் செய்யார்; வறியார்க்கு யாதொரு பொருளும் ஈயமாட்டார்; எல்லா வகையிலும் இனிய தம் மனைவியர் தோளைத் தழுவார்; புகழ் உண்டாக வாழமாட்டார்; இத்தகையவர்கள் தாம் வாழும் நாளை வெறுக்க மாட்டார்களோ ? 338

ஒருவர் இன்னொருவரை விரும்பி வியந்து நட்புகொள்ள, இவரை யாம் விரும்பமாட்டோம் என்று புறக்கணிக்கும் படியான போலி நட்பு, ஆராயும் அறிவுநலம் இல்லாத அவரைப் பொறுத்தமட்டில், முழங்கும் ஒலியுடன் பாயும் அலைகடல் சூழ்ந்த இவ்வுலகமே கிடைப்பதாயினும் துன்பமே ! 339

ஒருவன் கற்ற கலைகளையும் கண்ணிரக்கம் மிக்க மென்மைப் பண்பையும் உயர்குடிப் பிறப்பையும் பக்கத்திலுள்ள மற்றவர் பாராட்டினாலேயே பெருமை ஏற்படும். தானே சொல்லிக்கொண்டால், (பரிகசிக்கும்) மைத்துனர் மார்கள் பலர் ஏற்பட்டு, மருந்தினால் தீராத பைத்தியக் காரன் என்று இகழப்படுவான். 340

35. கீழ்மை

கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினும்
குப்பை கிளப்போவாக் கோழிபோல்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும். 341

காழாய கொண்டு கசடற்றார் தம்சாரல்
தாழாது போவாம் எனவுரைப்பின்-கீழ்தான்
'உறங்குவாம்' என்றெழுந்து போமாம்; அஃதன்றி
மறங்குமாம் மற்றொன் றுரைத்து. 342

பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா(து)
ஒருநடையர் ஆகுவர் சான்றோர்;-பெருநடை
பெற்றக் கடைத்தும், பிறங்கருவி நன்னாடா!
வற்றும் ஒருநடை கீழ். 343

தினையனைத்தே ஆயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்றோர்;-பனையனைத்து
என்றும் செயினும், இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு. 344

பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்; அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யும்
கருமங்கள் வேறு படும். 345

35. இழிந்த தன்மை

நொய்போன்ற தானியக் கப்பியைப் போதுமானதாகக் காலையிலேயே தன் வாய் நிறைய உடையவன் ஊட்டினாலும் குப்பை கிளறுதலை நிறுத்தாத கோழியைப் போல, மிகுந்த பெருமை பொருந்திய நூற்பொருளை எடுத்து விரித்துக் கூறினாலும், கீழ்மகன் தன் மனம் விரும்பிப் போகிற போக்கிலேயே மிகுதியும் போவான். 341

திட்பமான அறிவு பெற்றுக் குற்றமின்றி வாழும் நல்லோர் இடத்தைக் காலம் தாழ்த்தாது அடைவோம் - வருக என்று அழைத்தால், கீழ்மகன், தூங்கலாம் என்று எழுந்து போய்விடுவான்; அல்லாவிடின், வேறு ஏதேனும் ஒரு காரணம் கூறி வர மறுத்துவிடுவான். 342

விளங்கும் அருவிபாயும் நல்ல மலை நாடனே! பெரியோர் இடையிலே தாம் பெருவாழ்வு பெற்றாலும், தம் உயர் பண்பிலிருந்து தவறாமல் என்றும் ஒரு சீராகவே ஒழுகுவர். கீழ்மகன் இடையிலே பெருவாழ்வு பெற்றபோதும் தன்னுடைய தாழ்ந்த ஒரு போக்கையே பின்பற்ற வல்லவனும். 343

விளங்கும் அருவி ஓடும் நல்ல மலைநாடனே! தமக்குப்பிறர் செய்த நன்றியொன்று இருக்குமானால் அது தினையளவே யானாலும் அதனைப் பனையளவு பெரிதாகப் பெரியோர் மதிப்பர். நன்றியுணர்வு இல்லாதார்க்கு என்றும் பனையளவு பெரிய நன்மை செய்யினும் பயன் இல்லை. 344

பொன் கலத்திலே உணவிட்டு ஊட்டிக் காப்பாற்றினாலும் நாயானது பிறரது எச்சில் சோற்றிற்காக இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும். அத்தன்மை போல, கீழ்மக்களைப் பெருமையுடையவராக நடத்தினாலும், அவர்கள் செய்யும் செயல்கள் தாழ்ந்து வேறுபடும். 345

சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்;-எக்காலும்
முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனு எண்ணி விடும். 346

மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினும் செருப்புத்தன் காற்கேயாம்;
எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும். 347

கடுக்கெனச் சொல்வற்றும்; கண்ணோட்டம்
இன்றும்;
இடுக்கண் பிறர்மாட் டுவக்கும்;-அடுத்தடுத்து
வேக முடைத்தாம்; விறன்மலை நன்னுடா!
ஏகுமாம்; எள்ளுமாம் கீழ். 348

பழையர் இவரென்று பண்ணுட்பின் நிற்பின்
உழையினியர் ஆகுவர் சான்றோர்;-விழையாதே
கள்ளுயிர்க்கும் நெய்தல் கனைகடல் தண்சேர்ப்ப!
எள்ளுவர் கீழா யவர். 349

கொய்புல் கொடுத்துக் குறைத்தென்றும்
தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை!-ஐய; கேள்!
எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும். 350

ஆழியுருட்டும் அரசச் செல்வம் பெற்றாலும், மேலோர் எப்போதும் வரம்பு மீறிய பேச்சுப் பேசமாட்டார்கள். கீழ் மகன், முந்திரி (1/320) அளவுக்குமேல் காணி (1/80) அளவு பொன் மிகுதியாகப் பெற்றாலும் தன்னை எப்போதும் இந்திரனாகவே எண்ணிக்கொள்வான். 346

குற்ற மற்ற பசும்பொன் தகட்டின்மேல் சிறந்த மணி களைப் (இரத்தினங்களைப்) பொருத்திச் செய்யப்பட்ட தென்றாலும் செருப்பு தன் காலின் கீழே இருத்தற்கு உரியதேயாம். அதுபோலவே, கீழோர் மிகத் திரண்ட செல்வமுடையவ ரானாலும் அவர் செய்யும் செயலால் அவரைக் கீழானவர் என அறிந்து கொள்ளலாம். 347

வன்மையான நல்ல மலை நாடனே! கீழ்மகன், பிறர் உள்ளம் கடுக்கும்படிப் பேசவல்லவனும்; கண்ணிரக்கமே இல்லாதவனும்; பிறரிடம் துன்பம் உண்டானால் மகிழ்வான்; அடிக்கடி சினம் உடையவனாவான்; எங்கும் செல்லுவான்; யாரையும் இகழ்வான். 348

தேன் தளும்பும் நெய்தல் மலர் நிறைந்த-ஒலிக்கின்ற குளிர்ந்த கடற்கரை நாடனே! இவர் பழைய நண்பர் என்று பல நாளும் தம் பின் வந்து நின்றாலும், உயர்ந்தோர், வந்தவரிடம் இனிமையாகப் பழகுவர். கீழ்மக்களோ, வந்த வரை விரும்பாமல் இகழ்வர். 349

ஐயனே, கேள்! அறுத்த புல்லைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து என்றும் ஊட்டி வளர்த்தாலும், சிறிய எருதுகள் தேரை இழுக்கமாட்டா. திரண்ட செல்வம் உடையவ ரானாலும், செய்யும் செயலைக்கொண்டு கீழ்மக்களை அடை யாளம் கண்டுகொள்ளலாம். 350

36. கயமை

ஆர்த்த அறிவினர் ஆண்டிளைய ராயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப;-மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார். 351

செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்
வழும்பறுக்க கில்லாவாம் தேரை;-வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணும் நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி அரிது. 352

கணமலை நன்னாட! கண்ணின் றொருவர்
குணனேயும் கூறற் கரிதால்-குணனழுங்கக்
குற்றம் உழைநின்று கூறும் சிறியவர்கட்(கு)
எற்றால் இயன்றதோ நா. 353

கோடேந் தகலல்குல் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயல்தேற்றார்;-கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர். 354

தளிர்மேலே நிற்பினும் தட்டாமல் செல்லா
உளிநீரர் மாதோ கயவர்;-அளிநீரார்க்(கு)
என்னானும் செய்யார் எனைத்தானும் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின். 355

36. மிகவும் தாழ்ந்த தன்மை

நிறைந்த அறிவுடையோர் வயதில் சிறியவ ரானுலும் தம் பண்பைப் போற்றிக் காத்து அடக்கமாய் ஒழுகுவர். அற்ப அறிவினரோ, வயது முதிருந்தோறும் கெட்ட செயல்களேயே மிகவும் செய்து கழுகுபோல் ஊர் சுற்றித் திரிந்து குற்றத்திலிருந்து விடுபடார். 351

செழுமையான பெரிய தடாகத்திலே வாழ்ந்தாலும், தவளேகள் எப்போதும் தம்மேலுள்ள ஒருவகை வழுவழுப் பான அழுக்கைப் போக்கிக்கொள்ளமாட்டா. அதுபோல், குற்றமற்ற சிறப்புடைய நல்ல நூற்களேக் கற்றபோதும், நுட்ப அறிவு ஒருசிறிதும் இல்லாதவர், நூற்பொருளே ஆராய்ந்து தெளியும் ஆற்றல் இலர். 352

கூட்டமான குன்றுகள் நிறைந்த நல்ல நாடனே ! ஒருவரது கண் எதிரே இல்லாமல் புறத்தே அவரது நற்பண்புகளேக் கூறற்கும் என்னவோபோல் இருக்கிறது. ஆனல், அவரது பண்பு இழுக்கடையும்படி அவர் பக்கத்தில் நின்றே குற்றங்களேத் தூற்றும் அற்பர்கட்கு நாக்கு எதனுல் செய்யப்பட்டதோ - தெரியவில்லேயே ! 353

பக்கம் உயர்ந்து அகன்ற அல்குலே (வயிற்றின் கீழ்ப் பாகம்) உடைய குடும்பப் பெண்கள், தமது பெண்மைக்கு உரிய ஒப்பனேயைத் (அலங்காரத்தைத்) தோழியர் செய்வதுபோல் செய்ய அறியார். ஆனல், அவரல்லாத விலே மாதரோ, திரண்டு புதுநீர் பெருகுவதுபோல, தம் பெண்மையழகைத் தாமே அணிசெய்து காண்பித்துத் தம்மைப் பெரிதாய் மதித்து வரம்பு கடந்து செல்வர். 354

அற்பர்கள் அருளாளர்க்கு யாதொன்றும் உதவார்; தமக்குத் துன்பம் செய்பவரைக் காணின், அவருக்கு எவ்வளவு உதவியும் செய்வர். ஆதலின் அந்த அற்பர்கள், தளிரின்மேலே வைக்கப்பட்டிருப்பினும் ஒருவர் தட்டாமல் உள்ளே செல்லாத உளியின் தன்மையராவர்-அந்தோ! 355

மலைநலம் உள்ளும் குறவன்; பயந்த
விளைநிலம் உள்ளும் உழவன்; சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர்; கயம்தன்னை
வைததை உள்ளி விடும். 356

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர், -கயவர்க்(கு)
எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறும் தீதாய் விடும். 357

ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்தும் செய்யார்முழுமக்கள்; -கோட்டை
வயிரம் செறிப்பினும் வாட்கண்ணாய்! பன்றி
செயிர்வேழ மாகுதல் இன்று. 358

'இன்றாதும்; இந்நிலையே ஆதும்; இனிச்சிறிது
நின்றாதும்' என்று நினைத்திருந்(து)-ஒன்றி
உரையின் மகிழ்ந்துதம் உள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர். 359

நீருள் பிறந்து நிறம்பசிய தாயினும்
ஈரம் கிடையகத் தில்லாகும்; -ஓரும்
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்தும்
அறைப்பெருங்கல் அன்னார் உடைத்து. 360

வேடன் மலையின் வளத்தைப் பற்றி எண்ணுவான்; உழவன் பயன்தந்த விளை நிலத்தைப் பற்றி நினைப்பான்; பெரியோர் தமக்கு ஒருவர் சிறப்பாகச் செய்த நன்றியை மறவாது எண்ணிக்கொண்டிருப்பர்; கயவனோ, தன்னை ஒருவன் திட்டியதைப் பற்றியே நினைத்துக்கொண் டிருப்பான். 356

உயர்ந்தோர், தமக்கு முதலில் ஒரு நன்றி செய்தவர் பின்பு மனம் ஒப்பிச் செய்த நூறு பிழைகளையும் பொறுத் துக்கொள்வர். கீழோர்க்கு எழுநூறு நன்மைகள் செய்து பின்பு தவறி ஒரு தீமை செய்யினும், அந்த எழுநூறு நன்மைகளும் தீமைகளாகிவிடும். 357

வாள்போன்ற கண்ணுடையவளே! தன் தந்தத்தை வைரப் பூணால் பூட்டினாலும் பன்றியானது, சினந்து போரிடும் யானையாகுதல் இல்லை. அதுபோல, நற்குடிப் பிறந்தவர், தாழ்ந்த வறுமைக் காலத்தும் செய்யக்கூடிய நற்செயல்களை, முழுமுடர் செல்வத்தால் மேம்பட்டபோதும் செய்யார். 358

இன்றைக்குச் செல்வராகிவிடுவோம் - இப்படியே இப் பொழுதே செல்வராவோம் - அல்லது, இனிச் சிறிது நாள் தள்ளிச் செல்வராகிவிடுவோம் என்றெல்லாம் எண்ணி யிருந்து - அந்த எண்ணத்தோடு ஒன்றி அதைப் பற்றிப் பேசுவதிலே மகிழ்ச்சியுற்று, இறுதியில் தம் மனம் மாறு பாடுற்று (நீர்அற்ற) தாமரை இலைபோல் அழிந்தார் பலர். 359

நீரிலே தோன்றி நிறம் பசுமையா யிருப்பினும் நெட்டிக் கோரைக்குள் ஈரம் இருக்காது. நிறைந்த பெருஞ் செல் வத்தில் திளைத்திருந்தபோதும், பெரிய பாறைக்கல் போன்ற மனம் உடையவரையும் இவ்வுலகம் உடையது. உணர்வாயாக ! 360

பன்னெறி யியல்

37. பன்னெறி

மழைதிளைக்கும் மாடமாய் மாண்பமைந்த
காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னும்-விழை
தக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு. 361

வழுக்கெனைத்தும் இல்லாத வாள்வாய்க் கிடந்தும்
இழுக்கினைத் தாம்பெறுவ ராயின்-இழுக்கெனைத்தும்
செய்குறுப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது. 362

'எறி'யென் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி;-அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. 363

'கடி'யெனக் கேட்டும் கடியான்; வெடிபட
ஆர்ப்பது கேட்டும் அதுதெளியான்;-பேர்த்துமோர்
இற்கொண் டினிதிருஉம் ஏமுறுதல் என்பவே
கற்கொண் டெறியும் தவறு. 364

தலையே தவமுயன்று வாழ்தல்; ஒருவர்க்(கு)
இடையே இனியார்கண் தங்கல்;-கடையே
புணராதென் றெண்ணிப் பொருள்நசையால்
தம்மை
உணரார்பின் சென்று நிலை. 365

பன்னெறி இயல்

37. பல வகை இயல்புகள்

விரும்பத்தக்க மாண்புடைய மனைவியைப் பெற்றில்லாதவனது இல்லம், மேகம் தவழும் அளவு உயர்ந்த மாடமாளிகையாய், சிறப்புடைய காவல் பொருந்தியதாய், நூல் திரிவிளக்கு என்றும் அணையாது நிலையாக எரியக்கூடியதாயிருப்பினும் என்ன பயன்? அது, பார்த்தற்கும் முடியாத ஒரு காடேயாம். 361

வழுக்குதல் சிறிதும் இல்லாத வாள் முனையில் காவலில் வைக்கப்பட்டிருப்பினும், தாம் இழுக்கான வழியில் செல்வாராயின், மென்மையான மொழிபேசும் பெண்கள் யாதும் தவறு செய்யாத காலம் சிறிதளவே; கற்பொழுக்கம் இல்லாத காலமே பெரிதாகக் கருதப்படும். 362

(கணவன் சினங்கொள்ளின்) 'என்னை அடி' என்று எதிர்த்து நிற்பவள் கணவனுக்கு எமனாவாள்; விடியற்காலையிலேயே சமையற்கட்டில் புகுந்து வேலை தொடங்காதவள் கொடிய நோயாவாள்; சமைத்ததனை நல்ல உணவாகக் கணவனுக்கு இடாதவள் வீட்டில் வாழும் பேயாவாள். இம்மூவகைப் பெண்டிரும், கொண்ட கணவனைக் கொல்லும் படைக்கலங்களாகும். 363

திருமணத்தைக் கைவிடுக என்று சொல்லக்கேட்டும் கைவிடவில்லை; (முதல் மனைவி இறந்தபோது) வெடியோசை படச் சாப்பறை முழங்கியதைக் கேட்டும் தெளிவு பெற்றானில்லை. மீண்டும் ஒரு மனைவியை மணந்து கொண்டு இன்பமாய் வாழ்வதாக நினைக்கும் மயக்கம், தன்மேல் தானே கல்லை எறிந்துகொண்ட தவறு போன்றதாகும் என்று சொல்வர் அறிஞர். 364

தவஞ்செய்ய முயன்று வாழ்தல் ஒருவர்க்கு முதன்மைப் பண்பு; இனிய மனைவியருடன் தங்கிவாழ்தல் நடுத்தரமான செயல்; சேராது என்று நினைத்துப் பொருளாசையால் தம் பெருமை உணராதவர் பின்சென்று நிற்றல் கடைப்பட்ட செயல். 365

கல்லாக் கழிப்பர் தலையாயார்; நல்லவை
துவ்வாக் கழிப்பர் இடைகள்; கடைகள்
'இனிதுண்ணேம்; ஆரப் பெறேம்யாம்' என்னும்
முனிவினுல் கண்பா டிலர். 366

செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே ஆகி விளைதலால்-அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர!
மகனறிவு தந்தை அறிவு. 367

உடைப்பெருஞ் செல்வரும் சான்ருேரும் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களும் கீழும் பெருகிக்
கடைக்கால் தலைக்கண்ண தாகிக் குடைக்கால்
போல்
கீழ்மேலாய் நிற்கும் உலகு. 368

இனியார்தம் நெஞ்சத்து நோயுரைப்ப அந்நோய்
தணியாத உள்ள முடையார்-மணிவரன்றி
வீழும் அருவி விறன்மலை நன்னுட!
வாழ்வின் வரைபாய்தல் நன்று. 369

புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல;-புதுப்புனலும்
மாரி அறவே அறுமே; அவரன்பும்
வாரி அறவே அறும். 370

தலையாயவர் நன்னூற்களைக் கற்பதில் காலங் கழிப்பர்; இடையாயார் நல்ல இன்பங்களை நுகர்ந்து காலம் போக்குவர்; கடைப்பட்டவர்கள், யாம் இனிய உணவு உண்டிலேம் - செல்வமும் நிரம்பப் பெற்றிலேம் என்னும் கசப்பால் தூக்கம் இன்றிக் கிடப்பர். 366

அழகிய நெல் வயல் நிறைய விளையும் வளப்பமான மருதநில நாடனே! செந்நெல்லிலிருந்து உண்டான செழுமையான விதைமுளை மீண்டும் அந்தச் செந்நெல்லாகவே விளைவதால், மகனது அறிவு தந்தையிடமிருந்து வந்த அறிவே! 367

பெருஞ் செல்வ முடையவரும் பெரியோரும் கெட்டுப் போக, வைப்பாட்டியின் பிள்ளைகளும் கீழ்மக்களும் வளர்ச்சியுற, இப்படியாக, கடைசியில் கால்மாட்டில் இருக்க வேண்டியது தலைமாட்டிற்கு வந்துவிட, (விரித்துப் பிடிக்கும்போது கீழேயும் மடக்கித் தொங்கவிடும்போது மேலேயும் வந்துவிடும்) குடையின் காம்பைப் போல, உலகம் கீழ் மேலாய் நிற்கக்கூடியது. 368

மணிகளை வாரிக்கொண்டு வந்து வீழ்கின்ற அருவிகளையுடைய வன்மையான நல்ல மலைநாடனே! இனிய நண்பர் தம் உள்ளத்தில் உள்ள துன்பத்தை எடுத்துரைக்கவும், அத்துன்பத்தை நீக்க எண்ணாத நெஞ்சம் உடைய கொடியோர், வாழ்வதனினும் மலையினின்றும் கீழே வீழ்ந்து இறத்தல் நல்லது. 369

புது வெள்ளமும் பொலிவான காதணியுடைய வேசையர் தொடர்பும் ஆகிய இரண்டையும் பரபரப்பு இன்றி அமைதியாக ஆராயின் இரண்டும் வேறல்லவாம். புதுவெள்ளமும் மழை அற்றால் தானும் அற்றுப் போகும். வேசையர் அன்பும் பொருள் வருவாய் அற்றால் தானும் அறும். 37(

3. காமத்துப் பால்

இன்ப துன்ப வியல்

38. பொதுமகளிர்

விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின்வே றல்ல;-விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே; அவரன்பும்
கையற்ற கண்ணே அறும். 371

அங்கோட் டகலல்குல் ஆயிழையாள் நம்மொடு
செங்கோடு பாய்துமே என்றுள்மன்;-செங்கோட்டின்
மேல்காணம் இன்மையால் மேவா தொழிந்தாளே
கால்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து. 371

அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்
செங்கண்மால் ஆயினும் ஆகமன்;-தம்மைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளிர் அன்னர்
விடுப்பர்தம் கையால் தொழுது. 373

ஆணமில் நெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்
காணமில் லாதார் கடுவனையர்;-காணவே
செக்கூர்ந்து கொண்டாரும் செய்த பொருளுடை
யார்
அக்காரம் அன்னர் அவர்க்கு. 374

பாம்பிற் கொருதலை காட்டி, ஒருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டும்; ஆங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார். 375

3. காமத்துப் பால்

இன்ப துன்ப இயல்

38. விலைமாதரின் இழிதகைமை

விளக்கின் ஒளியும் விலைமாதரின் தொடர்பும் ஆகிய இரண்டையும் குற்றமற ஆராயின் இரண்டிற்கும் வேறுபாடில்லை. விளக்கின் ஒளியும் எண்ணெய் அற்றபோது அற்றுப் போகும் விலைமாதரின் அன்பும் கைப்பொருள் அற்றபோது அற்றுவிடும். 371

அழகிய பக்கம் அகன்ற அல்குலேயும் சிறந்த அணி கலனையும் உடைய விலைமகள், இறப்பதானால் நம்முடன் மலையின் நெடிய உச்சியிலிருந்து வீழ்ந்து இறப்போம் என்று சொன்னாள். ஆனால், நம்மிடம் பொன்-பொருள் தீர்ந்துவிட்டதால், காலிலே வாயுவுநோய் என்று காட்டி அழுது, மலையின் நெடிய உச்சியை ஏறியடையாது பிரிந்துபோய்விட்டாள். 372

அழகிய இடமுடைய விண்ணுலகில் தேவர்கள் தொழும் செங்கண்ணுடைய இந்திரனே ஆனாலும் ஆகட்டுமே! தம் கையிலிருந்து கொடுக்கும் பொருள் ஒன்றும் இல்லாத வரை, கொய்யும் தளிர் போன்ற மேனியுடைய வேசியர், தம் கையால் ஒரு கும்பிடு போட்டு அனுப்பிவிடுவர். 373

அன்பு இல்லாத மனமும் அழகிய நீலமலர் போலும் கண்களும் உடைய வேசியர்க்கு, பொன்-பொருள் இல்லாதவர் நஞ்சு போன்றவராவர். எல்லாரும் காணச் செக்கு ஓட்டிக்கொண்டிருந்தவரும் ஈட்டிய பொருள் மிக உடையவரானால், அம்மாதர்க்குச் சர்க்கரை போன்றவராவர். 374

பிடிக்கவரும் பாம்பிற்குப் பாம்பு போன்ற தலைப் பக்கத்தைக் காட்டி, மற்றொரு பக்கமாகிய வாலை, இனிமை பொருந்திய தெளிந்த நீர் மிக்க தடாகத்தில் உள்ள மீனுக்குக் காட்டக் கூடியதான விலாங்கு மீனைப்போன்ற இரட்டைச் செயலுடைய வேசியரின் தோளை, விலங்கு போன்ற - வெள்ளையறிவுடைய மூடர் தழுவுவர். 375

'பொத்தநூல் கல்லும் புணர்பிரியா அன்றிலும்
போல்
நித்தலும் நம்மைப் பிரியலம்' என்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினுள்;
நன்னெஞ்சே!
நிற்றியோ போதியோ நீ. 376

ஆமாபோல் நக்கி அவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோல் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை
ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரால் நகை. 377

ஏமாந்த போழ்தின் இனியார்போன் றின்னுராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம்-மானேக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார். 378

ஊறுசெய் நெஞ்சந்தம் உள்ளடக்கி ஒண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி
'எம'ரென்று கொள்வாரும் கொள்பவே; யார்க்கும்
தமரல்லர் தம்முடம்பி ஞர். 379

உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
கள்ளத்தால் செய்யும் கருத்தெல்லாம்-தெள்ளி
அறிந்த விடத்தும் அறியாராம் பாவம்
செறிந்த உடம்பி னவர். 380

துளைத்துக் கோத்த நூலும் மணியும் போலவும், இணை பிரியாத அன்றில் பறவைகள் போலவும் நிதமும் நம்மைப் பிரியவே மாட்டோம் என்று உறுதிகூறிய - பொன் வளையல் அணிந்த அவ்வேசிப் பெண்ணும், போரிடும் ஆட்டுக் கடாவின் கொம்புகள் போல் வேறு பக்கம் முறுக்கிக் கொண்டாள். எனவே, எனது நல்ல மனமே ! நீ அவள் பக்கமே இருக்கப் போகிறுயா ? என் பக்கம் வரப் போகிறுயா ? 376

காட்டுப் பசு நக்குவதுபோல் முதலில் இன்பமாக நடந்து, வந்தவரின் கைப்பொருளைப் பறித்துக்கொண்டபின், சண்டி எருதைப்போல் குப்புறப் படுத்துக்கொள்ளும் அற்பப் பரத்தை யின் போலி அன்பை நம்பி ஏமாந்து எமக்குரியது என்று இருந்தவர் தாம் பலராலும் நகைக்கப்பெறுவர். 377

ஆடவர் ஏமாந்தபோது இனியவர் போன்று நடித்து, தாம் செல்வம் நிரம்பியபோது இனிமையற்றவராய் ஆட்டுக் கடாவின் கொம்புகள் போல் முறுக்கிக் கொள்ளுகிற-மான் போலும் மருண்ட பார்வையுடைய - தம் போக்கில் செல்கிற விலை மாதரின் பெரிய கொங்கைகளை, நல்வழி யடைவோம் என்று முயல்பவர் தழுவார். 378

விளங்கும் நெற்றியுடைய விலைமகளிர் துன்பம் செய்யும் தம் நெஞ்சின் வஞ்சகத்தை உள்ளே மறைத்து நம்பும்படிச் சொல்லும் சொற்களைக் கேட்டு நம்பி, இப் பெண்டிர் எமக்கு உரியர் என்று நம்பக்கூடியவரும் நம்பத்தான் செய்கின்றனர். ஆனால், தம் உடம்பைத் தமக்கே உடைய அப் பெண்டிர் எவருக்கும் உரியவரல்லர். 379

விளக்கமான நெற்றியுடைய வேசியர், மனம் வேறொரு வன் பக்கம் இருக்க, வஞ்சகமாய்ச் செய்யும் செயல்முறை யெல்லாம் உலகினரால் தெளிவாக அறியப்பட்டிருந்தும், பாவம் நிறைந்த உடம்பை யுடைய மூடர் அறியமாட்டார். 380

இன்பவியல்

39. கற்புடை மகளிர்

அரும்பெறற் கற்பின் அயிராணி அன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையால் பின்னிற்பார் இன்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை. 381

குடநீரட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள். 382

நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும்—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழும் மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல். 383

கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்,—உட்கி,
இடனறிந் தூடி, இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண். 384

எஞ்ஞான்றும் எங்கணவர் எம்தோள்மேற்
சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்;-
எஞ்ஞான்றும்
என்னை கெழீஇயினர் கொல்லோ பொருள்நசையால்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்! 385

இன்ப இயல்

39. கற்புடைய பெண்டிரின் உயர்தகைமை

பெறுதற்கு அரிய கற்புடைய இந்திராணி போன்ற பெரிய புகழ் மிக்க பெண்ணேயாயினும், தன்னை விரும்பி அடைய வேண்டும் என்னும் ஆசையால் தன் பின் வந்து நிற்கின்ற தீய ஆடவர் உருவாகாதபடி தன்னைக் காத்துக் கொள்ளக்கூடிய-நறுமணமிக்க நெற்றியுடைய மனைவியே கணவனுக்கு நன்மை புரியும் துணைவியாவாள். 381

ஒரு குடத்து நீரைக்கொண்டே சமைத்து உண்ணத்தக்க நெருக்கடியான நேரத்திலும், கடல் அளவு நீரும் வற்ற உண்ணும்அளவு உறவினர் மிகுதியாக வந்துவிடினும், விருந்தோம்பும் கடமைப் பண்பை ஒழுக்க நெறியாகக் கொள்கிற - மென்மையான மொழிபேசும் பெண்ணே மனைவாழ்க்கைக்கு மாண்பு அளிப்பவளாவாள். 382

நான்கு பக்கமும் இடிந்து வழியுடையதாய், மிகவும் சிறியதாய், எல்லாவிடத்தும் மேல் கூரை வழியாக உள்ளிருப்பவர்மேல் மழைத்துளி சொரியக்கூடியதாய் இருப்பினும், மேலான அறங்கள் புரிய வல்லவளாய், தான் வாழும் ஊரார் தன்னைப் புகழும்படியான சிறந்த கற்புடைய இல்லத்தரசி இருக்குமிடமே சிறந்த இல்லமாகும். 383

கணவனது கண்ணுக்கு இனியவளாய்,கணவன் விரும்பும் வகையில் அழகுசெய்து கொள்பவளாய், அச்சமுடையவளாய், ஊரார்க்கு நாணும் கூச்சம் உடையவளாய், கணவனுக்கு அஞ்சி, இடம் அறிந்து அவனோடு ஊடல் (காதல் விளையாட்டுக் கோபம்) கொண்டு, இன்பமாகக் கணவனது நிலை உணர்ந்து ஒழுகும் மடமொழி பேசும் மாதுதான் சிறந்த மனைவியாவாள். 384

எந்நாளும் எம் கணவர் எம் தோள்மேல் அணைந்து எழுந்தாலும், அந்த முதலிரவு நாளில் கண்டது போலவே இந்த நாளிலும் யாம் மிகவும் நாணிக் கூசுகிறோம். ஆனால், எப்போதும் பொருள் விருப்பத்தால் பலரது மார்பைத் தழுவி வாழும் பரத்தையர் எப்படித்தான் தழுவுகின்றனரோ? 385

உள்ளத் துணர்வுடையான் ஓதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்:-
தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம். 386

கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப்
பதக்கென்று
ஒருங்கொப்பக் கொண்டானும் ஊரன்;-ஒருங்
கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடா(து)
என்னையும் தோய வரும். 387

கொடியவை கூறாதி; பாண! நீ கூறின்
அடிபைய விட்டொதுங்கிச் சென்று-துடியின்
இடக்கண் அனையம்யாம் ஊரற்(கு); அதனால்
வலக்கண் அனையார்க் குரை. 388

சாய்ப்பறிக்க நீர்திகழும் தண்வயல் ஊரன்மீ(து)
ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்;-தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகலம்
நோக்கி இருந்தேனும் யான். 389

'அரும்பவிழ் தாரினான் எம்மருளும்' என்று
பெரும்பொய் உரையாதி; பாண!-கரும்பின்
கடைக்கண் அனையம்யாம் ஊரற்(கு); அதனால்
இடைக்கண் அனையார்க் குரை. 390

வள்ளல் தன்மை உடையவனிடம் உள்ள உயர்ந்த செல்வம், உள்ளத்தில் நல்லாராய்ச்சி உடையவன் கற்ற நூல் போல் பயன்தரும். நாண முடைய குல மகளிர் பெற்றுள்ள அழகு, தேர்ந்த ஆண்மகனது கையில் உள்ள கூரிய வாளைப்போல் குறிப்பிடத்தக்கதாம். 386

எனக்கு நேர் ஒவ்வாத-அழகிய நெற்றியை யுடையபரத்தையரைத் தழுவிய மலையனைய மார்புடைய என் கணவன், நீராடாமல்கூட என்னையும் தழுவ வருகிறான். இதனால், இவ்வூர்த் தலைவனாகிய என் கணவன், கருங் கொள்ளினையும் செங் கொள்ளினையும் வேறுபாடு அறியாது தூணிஅளவு-பதக்கு அளவாக ஒருசேர ஒத்த அளவில் வாங்கியவனானான். 387

(எம்கணவனது பிரிவைச் சொல்லவந்த) பாணனே! யாம், அவற்கு, உடுக்கையின் பயன்படுத்தப் படாத (அடிக்கப்படாத) இடப்பக்கத்தைப் போல் உள்ளோம்; அதனால், தலைவனது பிரிவு பற்றிய கொடிய செய்தியை எம்மிடம் கூறாதே! கூறுவதானால், மெல்ல அடி வைத்து இவ்விடம் விட்டு நீங்கிப் போய், உடுக்கையின் பயன்படுத்தப்படும் (அடிக்கப்படும்) வலப்பக்கம் போன்ற பரத்தையர்க்கு உரைப்பாயாக! 388

கோரைகளைப் பிடுங்கியதும் தண்ணீர் விளங்குகின்ற குளிர்ந்த வயல் சூழ்ந்த ஊரையுடைய என் கணவன்மேல் ஈ பறக்கவும் பொறுக்காமல் ஒரு காலம் நொந்தவளும் நான்தான். ஆனால், காமத் தீப் பொறி பறக்க அணைத்துப் பரத்தையரின் முலையோடு மோதிய - குளிர்ந்த சந்தனச் சாந்து அணிந்த கணவனது மார்பின் அலங்கோலத்தைப் பார்த்து வருந்துபவளும் நான்தான்! 389

(என் கணவனிடமிருந்து தூது வந்த) பாணனே! இன்று அரும்பு மலர்ந்த மாலை யணிந்த என் தலைவன் எனக்கு அருள் செய்வான் என என்னிடம் பெரிய பொய் சொல்லாதே! அவற்கு யான், கரும்பின் கடைசியிலுள்ள சுவை யற்ற கொழுந்தடை போன்றவள். அதனால், கரும்பின் சுவை மிக்க நடுப்பகுதியைப் போன்ற பரத்தையரிடம் போய்ப் பேசுக. 390

40. காமநுதலியல்

முயங்காக்கால் பாயும்பசலை;மற் றாடி
உயங்காக்கால் உப்பின்ரும் காமம்-வயங்கோதம்
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப!
புல்லாப் புலப்பதோர் ஆறு. 391

தம்மமர் காதலர் தார்சூழ் அணியகலம்
விம்ம முயங்கும் துணையில்லார்க்(கு)-இம்மெனப்
பெய்ய எழிலி முழங்கும் திசையெல்லாம்
நெய்தல் அறைந்தன்ன நீர்த்து. 392

கர்மஞ்செய் மாக்கள் கருவி ஒடுக்கிய
மம்மர்கொள் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை இட்டுக் கலுழ்ந்தாள்;துணையில்லார்க்(கு)
இம்மாலை என்செய்வ தென்று. 393

செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெறியா விம்மித்தன்-மெல்விரலின்
நாள்வைத்து நங்குற்றம் எண்ணுங்கொல்
அந்தோ! தன்
தோள்வைத் தணைமேற் கிடந்து. 394

கண்கயல் என்னும் கருத்தினுல் காதலி
பின்சென்ற தம்ம! சிறுசிரல்;-பின்சென்றும்
ஊக்கி யெழுந்தும் எறிகல்லா ஒண்புருவம்
கோட்டிய வில்வாக் கறிந்து. 395

40. காமத்தின் இயல்பு கூறுதல்

விளங்கும் கடலில் ஓயாமல் அலைமோதுகிற – நீண்ட உப்பங்கழிகளையுடைய குளிர்ந்த கடற்கரை நாடனே! தலைவனோடு புணராவிடின் உடம்பில் 'பசலை' என்னும் ஒருவகை நிறம் பரவும். ஆனால், ஊடல் (சிறு பிணக்கு) கொண்டு சிறிது பிரிந்து வருந்தாவிடினும் காமத்திற்கு இன்பம் இல்லை. எனவே, முதலில் புணர்ந்து பிறகு ஊடுவது ஒருவகைச் சுவையான முறை. 391

தாம் விரும்பும் கணவரது மாலை நிறைந்த அழகிய மார்பைத் தம் முலைகள் பூரிக்கும்படித் தழுவும் வாய்ப்பு இல்லாத பெண்டிர்க்கு, 'இம்' என்னும் ஒலியுடன் மழைபெய்ய மேகம் இடியிடிக்கும் திசைகளெல்லாம், சாப்பறை அடித்தாற் போன்ற துன்பச் சூழ்நிலை உடையதாய்த் தோன்றும் 392

கம்மாளம் முதலிய தொழில் செய்த மக்கள் தொழில் முடித்துக் கருவிகளை உள் எடுத்து வைத்துவிட்ட-மயக்கத்திற்குரிய மாலை நேரத்தில், நல்ல மலர்களை ஆய்ந்தெடுத்து மாலை தொடுத்த தலைவி, கணவரின் துணையில்லாத என் போன்றார்க்கு இந்த மாலை யாது பயன்தரும் என்று கையிலிருந்த மாலையைக் கீழே எறிந்து கலங்கி யழுதாள் 393

(நம் மனைவி) மறைகின்ற கதிரவனைப் பார்த்து, சிதறிய செங்கோடு பொருந்திய தன் கண்ணில் வழிகின்ற நீரை மெல்லிய விரலால் முறை முறையாக வழித்துத் தெறித்து விம்மியழுது, நாம் பிரிந்துள்ள நாளைத் தன் மெல்லிய விரலால் எண்ணிக் கணக்கிட்டு, ஐயோ! தலையணைமேல் (தலைவைக்காமல்) தோளை ஊன்றிச் சாய்ந்து கிடந்து நம் குற்றங்களை நினைத்துக்கொண்டிருப்பாளோ? 394

என் காதலியின் கண்ணைக் கயல் மீன் என்று கருதியதால், சிறிய மீன்கொத்திக் குருவி (கொத்தித்தின்ன) அவள் பின்னே சென்றது! அம்மாடி! அப்படி அவள் பின்னே சென்றும்-ஊக்கத்தோடு முயன்றும், விளங்கும் அவள் புருவத்தை (குருவியைக் கொல்லும்) வளைந்த வில் என எண்ணி அஞ்சியதால் கொத்தாது ஓடிவிட்டது. 395

அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற் கன்னோ
பரற்கானம் ஆற்றின கொல்லோ!-அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையென
வென்(று)
அஞ்சிப்பின் வாங்கும் அடி. 396

ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேல்
கோலஞ்செய் சாந்தம் திமிர்ந்து. 367

'கடக்கருங் கானத்துக் காளைபின் நாளை
நடக்கவும் வல்லையோ' என்றி;-சுடர்த்தொடீஇ!
பெற்றா னொருவன் பெருங்குதிரை அந்நிலையே
கற்றான் அஃதூரு மாறு. 398

முலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாதும் அறியேன்;-கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறிசெலிய போலும் என்
பூம்பாவை செய்த குறி. 399

செவ்வாம்பல் மலர்போல் மணக்கும் வாயினையும் அழகிய இடுப்பையும் உடைய என் மகளுக்கு, செந்நிறம் பொருந்திய சாயக்குழம்பைப் பஞ்சிகொண்டு பூசினாலும், 'மெதுவாக-மெதுவாக' என்று கூறி அஞ்சிப் பின் இழுத்துக் கொண்ட காலடிகள், (இப்போது தன் காதலனுடன்) பருக்கைக் கற்கள் பொருந்திய காட்டு வழியில் செல்லும் கடுமையைத் தாங்கிக் கொண்டனவோ ? 396

ஓலையில் எழுதிய நூலைப் படிக்கும் பள்ளிக்கூடத்தார்களின் ஓசை அடங்கிய - சிறிது நேரம் செவ்வானம் பொருந்திய மாலைநேரத்தில், தன்னை மணந்த கணவர் பிரிவதை எண்ணி, மாலையை அறுத்தெறிந்து, தன் அழகிய முலையின் மேல் அழகு செய்து பூசிய சந்தனத்தை அழித்துத் தலைவி அழுது புலம்பினாள். 397

ஒளியுடைய வளையல் அணிந்த என் தோழியே ! கடக்க முடியாத காட்டு வழியிலே காளைபோன்ற காதலன் பின்னே நாளை நடந்து செல்லவும் வலிமை உடையையோ-என்று நீ கேட்கிறாய் ! பெரிய குதிரையைப் பெற்றவன் ஒருவன், பெற்ற அப்போதே அதன்மேல் ஊர்ந்து(சவாரி) செல்லும் முறையினையும் கற்றிருப்பான். 398

(என் மகள்) தன் முலைக்கண்களும் முத்துமாலையும் முழு உடலும் பதியும்படி என்னைத் தழுவிக்கொண்ட குறிப்பை யான் (நேற்று) சிறிதும் அறிந்திலேன். என் பொலிவு மிக்க பதுமை போன்ற மகள் செய்த குறிப்பு, மான் கூட்டம் புலிக்கு அஞ்சும் காட்டு வழியிலே (ஒருவரும் அறியாமல் தன் காதலனுடன்) செல்வதற்குப் போலும் ! 399

கண்மூன் றுடையானும் காக்கையும் பையரவும்
என்னீன்ற யாயும் பிழைத்ததென்-பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய்! பொருள்வயின்
பாங்கனார் சென்ற நெறி. 400

பொன்னிறத் தேமல் தோன்றியுள்ள-கோங்கு மொக்குப் போன்ற முலையை யுடைய என் தோழியே ! (என்னை மன்மதன் மலர்தூவி வருத்துகிறான்; குயில் இனிமையாகக் கூவி இன்பத்தைத் தூண்டுகிறது; வெண்ணிலா தோன்றி என்னை வெம்பச் செய்கிறது. யான் பிறந்ததாலேயே இவ்வளவு துன்பப்படுகிறேன். இருப்பினும்,) மன்மதனை முதலில் எரித்துப் பின் எழுப்பிவிட்ட மூன்று கண்கள் உடைய சிவனும், குயில் முட்டையைத் தன் கூட்டில் வைத்துக் குஞ்சு பொரித்த காகமும், நிலாவை (கிரகண காலத்தில்) விழுங்கிப் பின் உமிழ்ந்து விட்ட-படமுடைய இராகு என்னும் பாம்பும், எனக்குப் பிறவி தந்த என் தாயும் தவறு செய்துள்ளதாக என்ன கூறுவது ? அவர் களின்மேல்-அவைகளின்மேல் குற்றம் சொல்லிப் பயனில்லை. பக்கத்தில் இருக்கவேண்டிய என் கணவர் பொருள் ஈட்டும் காரணமாகப் பிரிந்து சென்றுள்ள அச்சத்திற்கு உரிய வழியே தவறு உடையதாய் என் பிரிவுத் துன்பத்திற்குக் காரணமாக உள்ளது. 400

நாலடியார் நயவுரை

முற்றிற்று

நாலடியார் நற்புகழ்

" எண்ணு யிரவர் இசைத்தவெண்பா நானூறும்
கண்ணுமிந் நாலடியைக் கற்றுணரத்—தண்ணூர்
திருக்குருகூர் மாறனையே தேர்ந்துமறை தேர்ந்த
திருக்குருகூர் மாறனையே தேர்."

" நானூறும் வேதமா நானூறு நானூரும்
நானூறுங் கற்றற்கு நற்றுணையாம்—நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு."

" வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்கள்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா நன்மனத்தே
சீலமுடன் நிற்க தெளிந்து."

செய்யுள் முதற் குறிப்பு அகரவரிசை

[எண் : செய்யுள் எண்]

செய்யுள்	எண்	செய்யுள்	எண்
அகத்தாரே	91	அறுசுவை	61
அக்கேபோல்	53	ஆகாது எனினும்	337
அங்கண்-அகல்	151	ஆடுகோட்டாகி	192
அங்கண் - அமரர்	373	ஆட்பார்த்து	80
அங்கோட்டு	372	ஆணமில் நெஞ்சத்து	374
அச்சம்	11	ஆமாபோல்	377
அடுக்கல் மலைநாட	203	ஆர்த்த பொறிய	290
அடைந்தார்	173	ஆர்த்த அறிவினர்	351
அத்திட்ட	281	ஆவாம் நாம் ஆக்கம்	92
அம்பல் அயலெடுப்ப	17	ஆவேறு உருவின	48
அம்பும் அழலும்	19	ஆற்றும் துணையும்	196
அரக்காம்பல்	396	ஆன்படு நெய்	239
அருகலது	261	இசைந்த சிறுமை	187
அரும்பவிழ்	390	இசையாது எனினும்	194
அரும்பெறல் கற்பின்	381	இசையாவொருபொருள்	41
அரும்பெறல் யாக்கையை	94	இசையும் எனினும்	152
அருளின்	321	இடம்பட	46
அலகுசால்	140	இடும்பைகூர்	37
அவமதிப்பும்	163	இட்டாற்று	288
அவ்வியம் இல்லார்	322	இமைக்கும் அளவில்	323
அழல் மண்டு	202	இம்மி யரிசி	24
அள்ளிக்கொள்வன்ன	262	இம்மை பயக்குமால்	132
அறம்புகழ்	12	இம்மையும்	294
அறிமின்	172	இரவலர்	279
அறியாப் பருவத்து	171	இருக்கையெழலும்	143
அறியாரும்	38	இரும்பார்க்கும்	52
அறிவது அறிந்தடங்கி	4	இலங்கு நீர்	227

செய்யுள்	எண்
இல்சார்வின்	182
இல்லம் இளமை	113
இல்லாமை	303
இல்லா இடத்தும்	21
இழித்தக்க	302
இழைத்த நாள்	66
இளையான்	125
இறப்பச் சிறிதென்னாது	29
இறப்ப நினையுங்கால்	174
இறப்பவே	223
இற்பிறப்பு இல்லார்	320
இற்பிறப்பு எண்ணி	212
இன நன்மை	146
இனியார் தம்	363
இன்பம்	9
இன்று ஆதும்	359
இன்றுகொல்	96
இன்னர் இனையர்	205
இன்னா இயைக	306
இன்னாசெயினும் இனிய	6
இன்னா—விடற்பாலர்	225
இன்னா—விடுதற்கு	226
ஈட்டலும்	280
ஈண்டுநீர்	39
ஈதல் இசையாது	181
ஈனமாய்	198
உடாஅதும்	70
உடுக்கை	141
உடைப்பெருஞ்	368

செய்யுள்	எண்
உடையார்	16
உணர வுணரும்	24
உண்டாய	28
உண்ணான் ஒளிநிறான்	6
உபகாரம்	12
உயிர்போயார்	11
உருவிற்கு	24
உருவும் இளமையும்	[illegible]3
உலகறிய	20
உளநாள் சிலவால்	32
உள்கூர் பசியால்	28
உள்ளத்தால்	5
உள்ளத்து உணர்வுடை	38
உள்ளம் ஒருவன்	38
உறக்கும் துணையதோர்	9
உறற்பால	3
உறுபுலி	19
உறுபுனல்	18
உறைப்பருங்	18
ஊக்கித்தாம்	11
ஊரங்கணநீர்	17
ஊருள் எழுந்த	2
ஊறி புவர்த்தக்க	1
ஊறுசெய் நெஞ்சம்தம்	37
எஞ்ஞான்றும்	38
எத்துணை யானும்	27
எந்நிலத்து	24
எம்மை அறிந்திலிர்	16
எய்தி யிருந்த	3

செய்யுள்	எண்	செய்யுள்	எண்
றி நீர்	275	கடுக்கென	348
றியென்று	363	கடையாயார்	216
ற்றொன்றும்	150	கடையெலாம்	297
னக்குத்தாய்	75	கட்கினியாள்	384
னதெனது	276	கணங் கொண்டு	85
ன்பாய் உகினும்	202	கணமலை நன்னாட	353
ன்றும் புதியார்	307	கண்கயல்	395
ன்னானும்	65	கண்மூன்று	400
ன்னே மற்று	330	கப்பி கடவதாக்	341
ட்டைப் பருவத்தும்	358	கம்மஞ் செய் மாக்கள்	393
திலார் செய்தது	228	கரவாத திண் அன்பின்	305
மாந்த போழ்தின்	378	கருங்கொள்ளும்	387
ற்ற கை	28	கருத்துணர்ந்து	211
ண்கதிர்	176	கருமமும்	250
ரு நன்றி	357	கரும வரிசையால்	249
ரு நீர்	236	கரும்பாட்டிக் கட்டி	95
ருபுடை	148	கல்நனி நல்ல	334
ருவர் ஒருவரை	309	கல்லாக் கழிப்பர்	366
க்கிய வொள்வாள்	59	கல்லாது நீண்ட	254
தியும் ஓதார்	270	கல்லாது போகிய	169
லைக் கணக்கர்	397	கல்லாமை	145
டகம் செறிந்ததம்	289	கல்லாரே யாயினும்	139
டக்கரும்	398	கல்லெறிந்தன்ன	126
டமரா தொலைச்சிய	300	கல்லென்று	253
டல் சார்ந்தும்	245	கல்லோங்கு	283
டித்து	156	கல்வி கரையில	135
டிப்பிடு	30	கழிந்தார் இடுதலை	109
டியெனக் கேட்டும்	364	கழுநீருள்	217
டுக்கியொருவன்	189	களர்நிலத்து	133

செய்யுள்	எண்
கள்ளார் கள்	157
கற்றதூஉம்	314
கற்றறிந்த	256
கற்றனவும்	340
கற்றூர் உரைக்கும்	260
கனைகடல் தண்	138
காணின்	14
காதலார் சொல்லும்	3
காலாடு போழ்தில்	43
காவாது ஒருவன்	123
காழாய கொண்டு	342
குஞ்சி யழகுங்	131
குட்நீர் அட்டு	382
குடரும் கொழுவும்	106
குலம்தவம்	333
குற்றமும் ஏனை	230
கூர்த்து நாய்	130
கோளாதே வந்து	90
கொடியவை	388
கொடுத்தலும்	274
கொய்புல்	350
கொலைஞர்	331
கொல்லை	178
கொன்னே	115
கோடேந்து	354
கோட்டுப்பூ	215
கோதை யருவி	1
கோளாற்றக்	191
சக்கரச் செல்வம்	346

செய்யுள்	எண்
சாய்ப்பறிக்க	38
சான்றாண்மை	14
சான்றோர்	5
சித்லை தினப்பட்ட	19
சிறுகா பெருகா	4
சிறுகாலையே	32
சீரியார்	23
செந்நெல்லால்	36
செம்மையொன்	1
செய்கை யழிந்து	14
செய்யாத	23
செல்சுடர்	39
செல்லா இடத்தும்	14
செல்வர்யாம்	6
செல்வுழிக்கண்	15
செழும்பெரும்	35
செறிப்பில்	23
செறுத்தோறு	22
சென்றே யெறிப	8
சொல்தாற்று	31
சொற்றார்ந்து	7
தக்காரும்	4
தக்கோலம்	10
தங்கண் மரபில்லார்	33
தண்டா	12
தமரென்று	22
தம் அமர் காதலர்	39
தம்மை இகழ்ந்தமை	17
தம்மை யிகழ்வாரை	

சய்யுள்	எண்	செய்யுள்	எண்
லேயே தவமுயன்று	365	நம்மாலே	30
வலரும்	137	நயவார்கண்	267
ளிர்மேலே	355	நர்ம்பெழுந்து	153
னதாக	278	நரைவரும்	71
ரம்செய்	50	நல்லகுலமென்றும்	195
ரமேயும் இன்புறூர்	327	நல்லர்பெரிதளியர்	298
ரழாத் தாரா	74	நல்லவை செய்யின்	144
ரன்கெடினும்	10	நல்லவை நாள்தோறும்	338
ருத்தன்னை	304	நல்லார் எனத்தாம்	221
ருமதுகையாக	291	நல்லார் நயவர்	265
ணைத்துணையர்	35	நல்லாவின்	45
னையனைத்தே	344	நளிகடல் தண் சேர்ப்ப நல்கூர்ந்த	24
ங்கரும்பு	199		
கள் தீர்	62	நளிகடல் தண் சேர்ப்ப நாள்	166
க்கத்துள்	51		
ய்த்துக்கழியான்	273	நறுமலர்	209
ன்பம் பல நாள்	114	நன்னிலைக்கண்	248
ன்பமே	120	நாப்பாடம்	312
தண்ணீர்க்குவளை	104	நாய்க்கால்	218
தரியத் தெரியும்	168	நார்த்தொடு	86
தளிவிலார்	219	நாலாறும்	383
தாணியியக்குவான்	136	நாள்வாய்	207
தாற்போர்வை	102	நாருத்தகடேபோல்	266
தாற்றம்சால்	67	நில நலத்தால்	179
ச்சியார்க்கு	299	நிலையாமை	112
டுக்குற்று	23	நின்றன நின்றன	64
டுவூருள்	26	நீரினும் நுண்ணிது	282
ட்டார்க்கும்	271	நீருள் பிறந்து	360
ட்புநார்	72	நீர்மையே	287

செய்யுள்	எண்	செய்யுள்	எண்
நுண்ணுணர்வினரொடு	233	புக்கவிடத்து	1
நுண்ணுணர்வின்மை	251	புணர்கடல்சூழ்	26
நெடுங்காலம்	128	புதுப் புனலும்	37
நெருப்பழல்	54	புத்தகமே	31
நேரல்லார்	2	புல்லா எழுத்தின்	15
நேர்த்து	124	புல்லாப்புன்	25
பகைவர் பணிவிடம்	241	புறத்துத்தன்	30
படுமழை	87	புன்னுனிமேல்	8
பண்டம் அறியார்	108	பெயற்பால்	2
பரவா வெளிப்படா	18	பெரியவர்	5
பராஅரை	246	பெரியார் பெருநட்பு	
பருவம் எனைத்துள	78	பெரியார் பெருமை	17
பல நாளும்	214	பெருகுவது	23
பல்லார் அறிய	16	பெருங்கடல்	33
பல்லாவுள்	31	பெருநடை	34
பல்லான்ற—பாடழிந்து	252	பெருமுத் தரையர்	20
பல்லான்ற—வியவும்	36	பெருவரை நாட	18
பழமை கந்தாக	310	பெறுவதுகொள்பவர்	31
பழையர்	349	பெறுவதொன்று	33
பனிபடுசோலை	77	பொத்தநூல்	37
பன்றிக் கூழ்	257	பொழிந்தினிது	25
பன்னாளுஞ்	159	பொழிப் பகலம்	31
பாடமேயோதி	316	பொறுப்பரென்	161
பாம்பிற்கு ஒருதலை	375	பொற்கலத்துப் பெய்த	20
பாலால் கழீஇ	258	பொற்கலத் தூட்டி	34
பாலோடு அளாயநீர்	177	பொன்னிற	26
பாவமும்ஏனை	295	பொன்னே	19
பிறந்த குலமாயும்	285	மக்களால் ஆய	9
பிறர்மறை	158	மடிதிரை	224

சய்யுள்	எண்	செய்யுள்	எண்
தித் திறப்பாரும்	121	மைதீர் பசும்பொன்	34
ரீஇப் பலரோடு	220	யாஅர் உலகத்தோர்	49
லைநலம் உள்ளும்	356	யாஅர் ஒருவர்	57
லைமிசை	81	யாக்கையை	88
ல்கு திரைய	263	யாமாயின்	29
ல்லல்மா	296	யானை அனையவர்	21
ழை திளைக்கும்	361	யானை யெருத்தம்	6
றுமைக்கு	183	வடுவிலா	4
றுமையும்	25	வயாவும்	20
ற்றறிவாம்	79	வலவைகள்	26
னத்தான்	180	வழங்காத	27
ணைப்பாசம்	60	வழுக்கெனைத்தும்	362
ன்றம்கறங்க	83	வளம்பட	33
ன்னர் திருவும்	167	வற்றிமற்று	8
ாக்கேழ் மடநல்லாய்	101	வாழ்நாட்கு	82
ாண்ட குணத்தொடு	116	வானிடு வில்	க. வா
ாற்றுராய்	127	விரிநிறநாகம்	164
ான் அருங்கலம்	100	விருப்பில்லார்	210
ுட்டிகை	208	விழைந்தொருவர்	33
ுட்டுற்ற	238	விளக்குப்புகஇருள்	11
ுயங்காக்கால்	21	விளக்கொளியும்	37
ுலைக்கண் ணும்	399	வினைப்பயன்	9
ுல்லை முகைமுறுவல்	105	வெறியயர்	7
ுற்றல் சிறு	237	வெறுமை யிடத்தும்	32
ுன் துத்தும்	190	வென்றிப்பொருட்டால்	31
ுன்னரே	22	வேம்பின் இலையுள்	24
ுப்புமேல்	326	வேற்றுமையின்றி	
மெய்ஞ்ஞான	311	வைகலும்	90
மெய்வாய் கண்	119	வைப்புழி	13
மெல்லிய நல்லாருள்	188		

சுந்தர சண்முகனாரின் நூற்கள்

1.	வீடும் விளக்கும்	—	1	25
2.	மலர் மணம்	—	3	00
3.	வாழும் வழி	—	1	75
4.	வள்ளுவர் இல்லம்	—	3	00
5.	பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது)		0	75
6.	எழுத்தாளர் துணைவன்	—	1	25
7.	செந்தமிழ் ஆற்றுப்படை	—	0	50
8.	தமிழர் கண்ட கல்வி	—	3	00
9.	இன்ப வாழ்வு	—	2	50
10.	போர் முயற்சியில் நமது பங்கு		0	30
11.	தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றது)		8	00
12.	திருக்குறள் தெளிவு	—	2	00
13.	History of Tamil Lexicography		1	50
14.	நாலடியார் நயவுரை	—	1	50
15.	தமிழ்–இலத்தீன் பாலம் (1970 ஆகஸ்டில் வெளியீட்டு விழா)		7	50

கிடைக்குமிடம்:

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்,
61–C, வைசியர் தெரு,
புதுச்சேரி–1.

ரபாத் பிரஸ், கடலூர்–2. போன்: 461.